கோகுலம்

GOKULAM

மே'86 ரூ. 2.



வளரும் வயதில் குழந்தைகளுக்குத் தேவை காம்ப்ளான்



காம்ப்ளான் ஒன்றில்தான் அவர்களுக்கு அன்றாடம் தேவைப்படும் 23 ஊட்டச் சத்துக்கள் அடங்கியுள்ளன.

சாதாரணமாக 15 அல்லது 16 வயதிற்குள் குழந்தைகளின் வளர்ச்சி பெரும்பாலும் முழுமையடைந்து விடுகிறது.

அவர்களுடைய வளர்ச்சிக்கு நேரடியாக உதவுவது புரதம் என்ற சத்துதான். ஆகவே உங்கள் குழந்தைகளுக்கு தேவை காம்ப்ளான்— இப்போது. காம்ப்ளான் சிறந்த புரதம் கொண்டுள்ளது—பால் புரதம் (20%) அது 22 மூலதார சத்துணவுகளும் கொண்டதாகும்.

காம்ப்ளான் கிடைக்கிறது இனிய சுவைகளில்.



காம்ப்ளான்® — திட்டமிட்ட பரிபூர்ண உணவு



கோகுலம்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
— பாரதியார்.

1986 மே மாத இதழ்

மலர்: 4 இதழ்: 4

தனிப்பிரதி ரூ. 2/—
ஆண்டுச் சந்தா ரூ 24/—

கௌரவ ஆசிரியர்:
அழ. வள்ளியப்பா.



புகைப்படம்: என். ஐயப்பன்

அருமைச் சிறுவர் சிறுமியரே,

நீங்களெல்லோரும் தேர்வுகளை நல்ல முறையில் எழுதி முடித்துக் கோடை விடுமுறையில் இருப்பீர்கள். இந்த விடுமுறையை மிகவும் நல்ல விதமாகப் பயன்படுத்துவீர்கள் என நம்புகிறோம்.

சென்ற இதழில், உங்களுக்கான திரைப்படங்கள், புத்தகங்கள் குறித்து, தமிழக முதல்வருக்கு ஒரு வேண்டுகோள் தயாரித்து, அதில் நூற்றுக் கணக்கான சிறுவர்கள் கையெழுத்திட்டு அனுப்பினால், முதல்வர் நிச்சயம் ஆவன செய்வார் என அறிவித்திருந்தோம். அத்துடன், வேண்டுகோளை அனுப்பிய பிறகு எங்களுக்கும் தகவல் தெரிவிக்கும்படி கேட்டிருந்தோம்.

மிகுந்த அக்கறையுடனும், உற்சாகத்துடனும் பல சிறுவர்கள், பல ஊர்களிலிருந்து முதல்வருக்கு வேண்டுகோளை அனுப்பி, எங்களுக்கும் தகவல் தெரிவித்திருக்கிறார்கள்.

இன்னும் பலர், "இது மிகவும் நல்ல யோசனை. நாங்களும் பல நண்பர்களின் கையெழுத்துக்களுடன் வேண்டுகோளை முதல்வருக்கு அனுப்ப ஆசைப்படுகிறோம். ஆனால், ஆண்டுத் தேர்வுகள் வருவதால், வேண்டுகோளை அனுப்புவதில் தாமதம் ஏற்படலாம். மே மாதத்தில் கூட அனுப்பலாமா?" என்று எழுதிக் கேட்டிருக்கிறார்கள்.

இன்னும் சிலர் தேர்வுக்குப் படிக்கும் மும்முரத்தில், இந்த அறிவிப்பைச் சரியாகக் கூடப் பார்த்திருக்க அல்லது படித்திருக்க மாட்டார்கள். அவர்களும் இப்படிப்பட்ட ஒரு பொது நற்பணியிலே ஈடுபடுவார்கள் என நம்புகிறோம்.

மே மாதம் 10 தேதிக்குள் வேண்டுகோளை முதல்வருக்கு அனுப்பி, எங்களுக்கும் தெரிவித்தால், அதுவரை வேண்டுகோளை அனுப்பிய அனைவருடைய பெயர்களையும் முகவரிகளுடன் கோகுலம் (1986 ஜூன்) இதழில் வெளியிடுவோம்.

— அழ. வள்ளியப்பா

இந்த இதழ் எழுத்தாளர்கள்



அரசு மணிமேகலை



டி. டேவிட் ஜான் பிரிட்டோ

பிருந்தாவனக் கவிஞர்கள்



இரா. சியாம்சுந்தர்



ந. முத்துக்குமரன்

பிருந்தாவனக் கதாசிரியர்கள்




வி. ஸ்ரீரஞ்சனி



ராச. சௌ. கருணாகரன்

வண்ண அட்டைப்படம்: யோகா

கோடை விடுமுறைக்கான பரிசுப்போட்டி



கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர்களுக்கு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் கோடை விடுமுறைக்கான பரிசுப் போட்டி அறிவிப்பு.

1. ஸ்ரீ இராமாயணம், ஸ்ரீ மஹாபாரதம் — இவைகளுள் வரும் ஒரு கதா பாத்திரத்தைப் பற்றிய ஒரு கதை.
2. ஆழ்வார்கள், நாயன்மார்கள் — இவர்கள் மூலமாக தமிழ் வளர்ந்ததைப் பற்றி ஒரு சிறு நாடகம்.
3. நமது தேச சுதந்திரத்திற்காகத் தியாகம் செய்தவர்களைப் பற்றி ஒரு கவிதை.
4. பாரத நாட்டில் உள்ள க்ஷேத்திரங்களைத் தரிசிப்பதின் மூலம் ஏற்படக் கூடிய ஒருமைப்பாட்டைப் பற்றி ஒரு கட்டுரை.

ஒவ்வொரு விஷயத்திற்கும்

முதல் பரிசு ஒரு தங்க டாலருடன்	ரூ. 500/—
இரண்டாவது பரிசு	ரூ. 250/—
மூன்றாவது பரிசு	ரூ. 100/—

இவை தவிர போட்டியில் கலந்து கொண்ட ஒவ்வொருவருக்கும் ஆறுதல் பரிசாக நல்ல அறநூல் ஒன்று அனுப்பி வைக்கப்படும்.

விஷயங்களை எழுதிய பிறகு தங்கள் பெற்றோருடைய கையெழுத்துடன் அவற்றை அனுப்பி வைக்கவும்.

* வெள்ளைக் காகிதத்தில் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதவும்.
* ஒவ்வொரு விஷயமும் கோகுலத்தில் சுமார் இரு பக்கங்கள் வரலாம்.
* பரிசு பெற்றவை பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.
* ஒருவர் ஒரு விஷயத்தைப் பற்றித்தான் எழுதலாம்.
* எழுதி அனுப்பும்போது உங்கள் பெயருடன் கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் எண், முழு விலாசம், பின் கோடு ஆகியவற்றை மறக்காமல் குறிப்பிடவும்.
* பெற்றோரிடமிருந்து அறிந்தோ, நூல் நிலையப் புத்தகம் மூலம் படித்தோ விஷயங்களைத் தெளிவாக எழுதவும்.

இவை தவிர, தமிழில் ஆத்தி சூடி, கொன்றை வேந்தன், நன்னெறி, குமரேச சதகம், போன்ற அறநூல்களில் ஏதேனும் ஒன்றை மனப்பாடம் செய்து பெற்றோரிடம் ஒப்புவித்து, அவர்களுடைய கையெழுத்துடன் அனுப்பி வைக்கும் எல்லா மாணவ மாணவிகளுக்கும் ஸ்ரீ காமாக்ஷியம்மன் உருவம் பொறித்த வெள்ளிக் காசு ஒன்று ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளின் ஆசியுடன் அனுப்பி வைக்கப்படும்.

அனுப்ப வேண்டிய கடைசித் தேதி: 15.6.86

அனுப்ப வேண்டிய முகவரி: "கோகுலம்" பரதன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட், பரதன் பிரஸ், ரேஸ்கோர்ஸ் ரோடு, கிண்டி, சென்னை — 600 032.

பேனாவில் எதைப் போட்டு எழுதுகிறீர்? மையையா! மர்மத்தையா?

* தமிழுடன் இணைந்து இரண்டறக் கலந்து மிளிரும் குன்றக்குடி அடிகளாரின் குழந்தைப் பருவம், பெரியவர்களும் அறிந்து போற்ற வேண்டிய செய்திக் கருவூலம். அடிகளாருக்கு, விபுலாநந்த அடிகளாரின்பால் இருந்த உறவும், இடையில் ஏற்பட்ட பிரிவும், பின்னர் இருவரும் சேர்ந்து மகிழ்ந்த திறமும் என் உள்ளத்தை நெகிழச் செய்தது.

1968 ஆம் ஆண்டு முதல் திருக்குறளைத் தேசிய நூலாக ஆக்க வேண்டுமென்று வலியுறுத்தி வரும் அடிகளார், 1986 ஆம் ஆண்டு திருவள்ளுவர் விருதை முதன் முதலாகப் பெற்ற இத்தருணத்தில் என் குழந்தைப் பருவம் பகுதியில் அடிகளாரின் அரிய செய்திகளை வெளியிட்ட கோகுலத்திற்கு என் பாராட்டுக்கள்.

— இ. பொ. நடராசன், சென்னை—5.

* திரு. தங்கமணி அவர்கள் அக்கினிபூதம் கதையை எழுதும்போது, பேனாவில் மையைப் போட்டு எழுதினாரா, இல்லை... மர்மத்தைப் போட்டு எழுதினாரா? பாரா வுக்குப் பாரா அடுத்து என்ன நடக்குமோ எனத் திகிலாக உள்ளதே!

— பா. மணிவண்ணன் (11,420) வேடசந்தூர்.

* கல்கி அவர்களின் குழந்தைப் பருவம் என் மனத்தைத் தொட்டது. குழந்தைகள் எப்படி வாழ வேண்டும் என்பதை அது அழகாக விளக்கியது.

—ஜி. லட்சுமணன் (12858), திருவொற்றியூர்

* சுதந்திர எரிமலையான சாவர்க்கரின் வீர தீரச் செயல்களைப் படிக்கும்போது உடம்பு புல்லரிக்கிறது.

— சி. கனகசபை, பேராவூரணி.

* பிருந்தாவனக் கவியரங்கம் பாடல்கள் அனைத்துமே அருமை. அந்த இளம் கவிஞர்களுக்குப் பாராட்டு. அவர்களுக்கு ஊக்க மூட்டும் உங்களுக்கு நன்றி.

— ஆர். சேஷாத்திரி, வலங்கைமான்.

* நளனைப் பற்றிய செய்திகள் பாடப் புத்தகத்தில் கூட இவ்வளவு அழகாகவும் புரியும் படியாகவும் இல்லை.

— அ. சரவணராசன், திட்டக்குடி — 6.

* 'நீராரும் கடலுடுத்த' பாடலைப் பாடிய பேராசிரியர் சுந்தரம்பிள்ளையின் படத்தையும் அவரைப் பற்றிய சில விவரங்களையும் வெளியிட்டதற்கு நன்றி. அவரைப் பற்றி எதுவும் தெரிந்து கொள்ளாமலே, தினமும் அவருடைய பாடலைப் பாடுவதால் என்ன பயன்?

— என். கோமதி, வேலூர் — 2.

* ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் கதைகள் எல்லாமே எங்கள் சிந்தனையைத் தூண்டுகின்றன. 'எல்லாரும் நண்பர்களே!' கதையைப் படித்த பிறகு, 'நாம் பழகுகின்ற எல்லாரையுமே நண்பர்களாக நினைத்து நடக்க வேண்டும்' என்ற உறுதியைத் தருகிறது.

— வே. சடகோபன், மேலூர்.

* இந்திய ஒருமைப்பாட்டை வலியுறுத்தி பேரளம் புகழ்மதி எழுதிய கதையினைப் படித்து மிகவும் ரசித்தேன். என் பள்ளி மாணவர்களுக்கும் படித்துக் காண்பித்தேன். நாட்டிற்கு இந்நிலையில் தேவையான ஒன்றைத் தேவையான நேரத்தில் அளித்திட்ட கோகுலத்திற்கு நன்றி.

— சி. நீ. சோமசுந்தரம் (ஆசிரியர்), வடகரை.

* ஏப்ரல் இதழில் 'சார் தபால்!' பகுதியை வெளியிடாமல், எங்களையெல்லாம் 'April Fool' ஆக்கி விட்டீர்களே!

— எஸ். ஜெயக்குமார் (5405), காரைக்குடி—6

* விளையாட்டுப் போட்டிகளை அப்படியே படம் பிடித்து எங்கள் முன் மாதந்தோறும் காட்டும் குண்டுமணி அவர்களுக்கு நாங்கள் எல்லோரும் நன்றி கூறக் கடமைப்பட்டவர்கள்.

— பி. செந்தில்குமார் (5654), கப்பச்சி.

* தமிழக முதல்வருக்கு வேண்டுகோள் அனுப்பச் சொல்லி 'கேளுங்கள்; பதில் சொல்லுகிறோம்' பகுதியில் சொன்னீர்கள். 'எப்படி எழுதுவது?' என்று திண்டாடிக் கொண்டிருந்த எனக்கு அடுத்த 12 வது பக்கத்தைக் கண்டதும் ஒரே ஆனந்தம். எப்படி மரியாதையாகவும் தெளிவாகவும் எழுதுவது என்பதைத் தெரிந்து கொண்டோம்.

— வெ. சீனிவாசன், மதுரை — 3.

* 'யாரைத் தேர்ந்தெடுப்பது?' பாடல் மிக மிக அருமை. நான் படித்த பாடல்களிலே இது ஒரு சிறந்த பாடல்.

— ப. கண்ணம்மாள், வேந்தன்பட்டி.

* தேர்விலே தோல்வி அடைந்தவன் தற்கொலை செய்ய முயல்வது எவ்வளவு முட்டாள்தனம் என்பதை பஸ்ஸிலே கண்ட குறள் மூலம் அறிந்து மனம் மாறுகிறான் ரவி. அருமையான கதை.

— கே. கோபாலன், திருச்சி—2.

சார், தபால்!

க்ளூகோன்-டி ஸூப்பர்ஹீரோ.



களைப்பூட்டும் வெய்யில் நாளிலே உங்கள் குழந்தைக்குத் தேவை க்ளூகோன்-டி: க்ளூகோஸ், விட்டமின்-டி, கால்ஸியம் ஃபாஸ்ஃபேட்டுகள் அடங்கிய உடனடி சக்திபானம்.

பழரசம், தேநீர், காபி அல்லது தண்ணீரிலே கலந்து அருந்த, குடும்பத்தினர் அனைவர்க்குமே புத்துணர்ச்சி தரும் பானமாக அமைகிறது. 100, 200, 500 கிராம் பேக்கெட்டுகளில் கிடைக்கிறது. க்ளாக்ஸோ வழங்கும் க்ளூகோன்-டி.



க்ளூகோன்-டி ®

ஸூப்பர்ஹீரோ மிகவிரும்பும் சக்திபானம்.

GLL-2389

மின்மினிக் கதைகள்

நிழலுக்குச் சண்டை

ஓர் உப்பு வியாபாரி, தன் உப்பு மூட்டைகளைச் சந்தைக்குக் கொண்டு சென்று விற்க விரும்பினார். மூட்டைகளை ஏற்றிச் செல்ல ஒரு கழுதையை வாடகைக்கு ஏற்பாடு செய்தார்.

கழுதை உப்பு மூட்டைகளைச் சுமந்து செல்ல, கழுதைக்காரன் அதை ஓட்டிச் சென்றான். வியாபாரியும் கூடவே நடந்து சென்றார்.

அப்போது வெயில் மிகவும் கடுமையாக இருந்தது. வியாபாரியால் வெயிலைத் தாங்க முடியவில்லை. எங்கேனும் நிழல் இருக்குமா என்று சுற்றும் முற்றும் பார்த்தார். வீடு, மரம், செடி, கொடி எதுவுமே கண்ணில் தென்படவில்லை.

ஆகையால், கழுதையை,சாலையில் ஓரிடத்தில் நிறுத்தச் சொன்னார் வியாபாரி. கழுதை நின்றதும், அதன் அடியிலே விழுந்த கழுதையின் நிழலில் உட்கார்ந்து இளைப்பாறினார் அவர்.

அதைக் கண்ட கழுதைக்காரன், ''கழுதையை மட்டும்தானே நான் வாடகைக்குத் தந்தேன். நிழலையுமா தந்தேன்? நீர் கழுதை நிழலில் உட்கார வேண்டுமானால், அதற்குத் தனியாக வாடகை தரவேண்டும்'' என்றான்.


''நிழலுக்குத் தனியாக வாடகையா? தர முடியாது. நான் கழுதையை வாடகைக்கு எடுத்திருப்பதால்,நிழலும் கழுதையுடன் சேர்ந்ததுதான்'' என்றார் வியாபாரி.

இருவருக்கும் தகராறு முற்றியது. வாய்ச் சண்டை கைச் சண்டையாக மாறியது.

இருவரும் மும்முரமாகச் சண்டை போட்டுக்-கொண்டிருந்த சமயம், கழுதை உப்பு மூட்டையுடன் ஓடிவிட்டது.

சண்டை போட்டு ஓய்ந்து போன பிறகு இருவரும் கழுதை நின்ற பக்கம் திரும்பிப் பார்த்தார்கள். கழுதையைக் காணோம்!

''ஐயோ! என் கழுதை போய்விட்டதே!'' என்று கூறிக் கொண்டே கழுதையைத் தேடி ஓடினான் கழுதைக்காரன். ''ஐயோ! என் உப்பு மூட்டை போய்விட்டதே!'' என்று அலறிக் கொண்டு வேறொரு திசையில் ஓடினார் வியாபாரி!



முயல் பரிசு!

ஒரு வேடன் காட்டிலே வெகுநேரம் வேட்டையாடி, கடைசியாக ஒரு முயலைப் பிடித்தான். பிடித்த முயலை எடுத்துக் கொண்டு, சாலை ஓரமாக அவன் வந்து கொண்டிருந்தான்.

அப்போது, 'டக் டக்' என்ற சத்தம் கேட்டது. வேடன் சாலை ஓரமாக நின்று, சத்தம் வந்த திசையைப் பார்த்தான். குதிரை மீது ஒருவன் வருவதைக் கண்டான்.

குதிரை மீது வந்தவன் வேடனின் அருகிலே வந்ததும், ''அடடே, முயல் அழகாயிருக்கிறதே! விலைக்குக் கொடுப்பாயா? என்ன விலை?'' என்று கேட்டான்.

''50 ரூபாய்'' என்றான் வேடன்.

''நியாயமான விலைதான். அந்த முயலைக் கொடு. ரூபாய் தருகிறேன்'' என்றான் குதிரைக்காரன்.



வேடன் முயலைக் குதிரைக்காரனிடம் கொடுத்தான். கையில் முயலை வாங்கியதும் குதிரைக்காரன் ஒரு விநாடி கூட அங்கு நிற்கவில்லை. குதிரையைத் தட்டிவிட்டான். அது மிக வேகமாக ஓடியது. ''அடப் பாவி!'' என்று கூறிக் கொண்டே வேடன், குதிரையைப் பின்தொடர்ந்தான். வெகு தூரம் ஓடியும், குதிரையை அவனால் நெருங்க முடியவில்லை. மூச்சு முட்டியது. கால்கள் தடுமாறின. ஓரிடத்தில் நின்றுவிட்டான்.

சும்மா நிற்கவில்லை. ''ஏ, குதிரைக்காரா, என்னை ஏய்த்து விட்டு, என் முயலை எடுத்துக் கொண்டதாக நீ நினைத்துவிடாதே! அதை நான் உனக்குப் பரிசாகக் கொடுத்ததாக நினைத்துக் கொள். ஆம், நான் அதை உனக்குப் பரிசாகத் தந்துவிட்டேன்'' என்று உரத்த குரலில் கூறினான்.


குதிரைக்காரன் காதில் அது விழுந்ததோ, காற்றோடு கலந்ததோ! ஆனாலும், வேடனுக்கு அப்படிச் சொன்னதிலே ஓர் ஆறுதல் கிடைத்தது!

யாருக்கு மரியாதை?

ஊர் மக்கள் புதிதாக ஒரு கோயிலைக் கட்டினார்கள். அதில் வைப்பதற்காகக் கடவுளுடைய சிலையை ஒரு சிற்பி, சிற்பக் கூடத்தில் தயாரித்தார்.

சிலை தயாரானதும், அதை நன்றாக அலங்கரிக்கப்பட்ட ஒரு காளை மீது வைத்து, சிற்பக் கூடத்திலிருந்து கோயிலுக்கு எடுத்து வந்தார்கள். மேளதாளங்கள் முழங்கின.

வரும் வழியில் ஏராளமான ஆண்களும் பெண்களும் குழந்தைகளும்



காளையின் முன்னால் விழுந்து விழுந்து கடவுளை வணங்கினார்கள்.

ஆனால், அந்தக் காளை தன்னைத்தான் எல்லாரும் விழுந்து கும்பிடுகிறார்கள் என்று நினைத்துக் கொண்டது. அவர்கள் செலுத்தும் வணக்கம் கடவுளுக்குத்தான் என்பதைக் காளையால் புரிந்து கொள்ள முடியவில்லை. இதனால், அதற்கு கர்வம் ஏற்பட்டது. சிறிது நேரத்தில் அந்தக் கர்வம் தலைக்கு ஏறிவிட்டது!

''நான் ஏன் நகர்ந்து செல்ல வேண்டும்? நான் நிற்கும் இடத்திற்கு மக்கள் வந்து விழுந்து கும்பிடட்டும்'' என்று நினைத்து, வழியில் ஓரிடத்தில் நின்றுவிட்டது.

காளையின் சொந்தக்காரர் அதைத் தட்டிக் கொடுத்து, ''நேரமாகிறது. இப்படி நிற்கலாமா போ, போ'' என்றார்.


காளை நகரவில்லை. அவருக்குக் கோபம் வந்துவிட்டது தடியால், அதன் அடிவயிற்றிலே இரண்டு அடி கொடுத்தார். வலி தாங்காமல், காளை ஒழுங்காக நடக்க ஆரம்பித்தது. அத்துடன், ''மக்கள் கொடுத்த மரியாதையெல்லாம் சிலைக்குத்தான்; தனக்கு அல்ல'' என்பதையும் புரிந்து கொண்டது.

காட்டிலே தேர்தல்!

காட்டிலுள்ள பறவைகளெல்லாம் ஒருநாள் கூடின. எதற்காக? தங்களுக்குள் ஒரு பறவையை அரசனாகத் தேர்ந்தெடுப்பதற்காகவே அவைகள் கூடின. வட்டமாக நின்று கொண்டன.

ஒவ்வொரு மிருகமாக நடுவில் வந்து ''என்னைத் தேர்ந்தெடுத்தால், நான் அதைச் செய்வேன்; இதைச் செய்வேன்'' என்று வாக்குறுதிகள் அளித்தன.

வண்ணத் தோகையை விரித்து ஆடிக் கொண்டே நடுவில் வந்து



நின்றது மயில். உங்களுக்குள் மிகவும் அழகான பறவை நான்தான் என்பதை நீங்களே ஒத்துக் கொள்வீர்கள். அரசனுக்கு வேண்டிய அழகு, கம்பீரம் எல்லாமே என்னிடத்தில் உள்ளன. ஆகையால், என்னையே நீங்கள் தேர்ந்தெடுப்பீர்கள் என நம்புகிறேன்'' என்றது.

அதன் அழகிலும் பசப்பு வார்த்தையிலும் அங்கு கூடியிருந்த பறவைகளில் பல மயங்கிவிட்டன. ஆகையால், மயிலையே அரசராகத் தேர்ந்தெடுப்பது என்று முடிவு செய்தன. அப்போது, ஒரு சிட்டுக் குருவி நடுவிலே வந்து நின்றது.

''நான் மிகவும் சிறிய பறவை. ஆனாலும், நான் சொல்வதைச் சற்று பொறுமையாகக் கேளுங்கள். நமக்கு ஆபத்து வரும்போது நம்மைக் காப்பாற்றுவதுதானே அரசரின் கடமை? பருந்தும், கழுகும், வல்லூறும் நம்மை என்ன பாடு படுத்துகின்றன! அந்தப் பொல்லாத, வல்லமை மிகுந்த பறவைகளிடமிருந்து இந்த மயிலால் நம்மைக் காப்பாற்ற முடியுமா? அழகு தேவையா? ஆபத்திலிருந்து காப்பாற்றும் வீரம் தேவையா?'' என்று கேட்டது.

''நல்ல கேள்வி! நல்ல கேள்வி!'' என்றன பெரும்பாலான பறவைகள்.

மயிலால் எந்தப் பதிலும் கூற முடியவில்லை. பேசாமல் நின்றது.

''தேர்தலை ரத்து செய்வோம். மயிலின் பகட்டிலே மயங்க மாட்டோம்'' என்று எல்லாப் பறவைகளும் முழங்கின, மயிலைத் தவிர!

கருத்து : ஈசாப்.





கார்ல் மார்க்ஸ்

நவீனப் பொதுவுடைமைத் தத்துவத்தின் தந்தை என்று போற்றப்படும் இவர், ஜெர்மனியில் பிறந்தார். வழக்கறிஞர் தொழிலுக்குப் படித்தார். ஆரம்பத்தில் கவிதைகள் எழுதினார். பிறகு, பத்திரிகை நடத்தி, புரட்சிகரமான கருத்துக்களையெல்லாம் வெளியிட்டார்.

இவருக்கு மிக நெருங்கிய நண்பராக விளங்கியவர் எங்கெல்ஸ் என்பவர். அவர் ஒரு பருத்தி வியாபாரியின் புதல்வர்.

இருவரும் சேர்ந்து கம்யூனிஸ்ட் அறிக்கையைத் தயாரித்து வெளியிட்டார்கள். 1949 ல் இவர் ஜெர்மனியிலிருந்து நாடு கடத்தப்பட்டார். அப்போது இங்கிலாந்துக்கு வந்த இவர், வாழ்க்கையில் பெரும்பகுதியை லண்டனிலேயே கழித்தார். இவர் பல நூல்களை எழுதினார். அவற்றில் 'மூலதனம்' என்ற புத்தகத்தில், தொழிலாளர்கள் படும் துன்பங்களை எடுத்துக் காட்டி, அவர்களின் உழைப்புக்குத் தக்க ஊதியம் கிடைக்க வேண்டும் என்றும், அவர்களின் பொருளாதார நிலை உயர்ந்தால், அரசியல், சமூகம் எல்லாமே சீரடையும் என்றும் கூறியிருக்கிறார்.

ரஷ்யாவில் புரட்சி ஏற்பட்டு, புதிய ரஷ்யா உருவானதற்குக் கைகொடுத்தவர் லெனின்; குரல் கொடுத்தவர் கார்ல் மார்க்ஸ் என்பார்கள்.

இவருடைய கொள்கை இன்று ரஷ்யாவிலும், சீனாவிலும் பரீட்சிக்கப்பட்டு வருகிறது.

நாடகம் தந்த பரிசு

'கோகுலம்' மார்ச் இதழில், திரு. லூர்து எஸ். ராஜ் எழுதிய 'நாடகம் தந்த பாடம்' என்ற கதையை 'நாடகம் தந்த பரிசு' என நாடகமாக்கி, நடித்தனர் மதுரை தோப்பூரிலுள்ள சிவானந்த வித்யாலயா மாணவர்கள். வித்யாலயாவின் எட்டாவது ஆண்டு விழாவில் (23.3.86) இந்த நாடகம் நடிக்கப்பெற்றுப் பலரது பாராட்டைப் பெற்றது. கிராமச் சூழ்நிலையில் ஏழை கிராம மக்களின் நலனுக்காகப் பாடுபட்டு வரும் சிவானந்த வித்யாலயா, குழந்தைகளின் ஒழுக்க மேம்பாட்டிற்காகச் சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது.





என் குழந்தைப் பருவம்

—கவியோகி சுத்தானந்த பாரதியார்

நூற்றுக்கணக்கான புத்தகங்களும், ஆயிரக்கணக்கான கவிதைகளும் எழுதியவர் கவியோகி சுத்தானந்த பாரதியார் அவர்கள். தமிழில் மட்டுமல்ல; ஆங்கிலம், பிரெஞ்சு, தெலுங்கு, இந்தி ஆகிய மொழிகளிலும் இவர் பல நூல்களை எழுதியிருக்கிறார்.

இவருக்குத் தாய்மொழியான தமிழுடன், ஆங்கிலம், பிரெஞ்சு, தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி, உருது, சமஸ்கிருதம், ஜெர்மன் மொழிகளும் தெரியும். ரஷ்ய மொழியும், ஜப்பான் மொழியும் இவருக்கு ஓரளவு தெரியும்.

இவர் இயற்றிய 'பாரத சக்தி மகாகாவியம்' என்ற நூலுக்கு, தஞ்சை, தமிழ்ப் பல்கலைக்கழகம் இராஜ இராஜன் பரிசான ரூபாய் ஒரு லட்சம் வழங்கியிருக்கிறது.

ஞானசித்தர், கவியோகி, மகரிஷி என்ற சிறப்புப் பட்டங்களைப் பெற்ற இவர், புதுச்சேரி அரவிந்த ஆசிரமத்தில் சுமார் 25 ஆண்டுகள் மௌனத் தவம் புரிந்தவர். தற்போது இவர் இருக்குமிடம்: சிவகங்கைக்கு அருகில் உள்ள சோழபுரம்.

பள்ளிக்கூடம் என்றால் உபாத்தியாயர், வாத்தியார் என்றால் பிரம்படி, என்று அஞ்சினேன். ஆனால், என்னுள் ஏதோ ஒன்று, "பயப்படாதே, தைரியமாகப் படி" என்றது. "இதென்ன பிரமாதம்? நானே படித்துக் கொள்கிறேன்....." என்று தொடங்கினேன். எனக்குத்தான் எழுத்துத் தெரியுமே! அக்காளின் முதல் பாடப் புத்தகத்தில் படத்துடன் வார்த்தைகள் உண்டு. எழுத்துக் கூட்டிப் படித்தேன். பிறகு பராபரக் கண்ணியை வைத்துக் கொண்டேன். அது எனக்குப் பாடம்; ஆதலால், எழுத்தெழுத்தாக எழுதி எழுதிப் பழகினேன். எனது தாயார் பராபரக் கண்ணி பாடியே குழந்தையான என்னைத் தாலாட்டி வந்தாள்.

என் பள்ளிக்கூடம் கோயில் கோபுரம், நடராஜா—மீனாட்சி சந்நிதானம். வீட்டில் மாவடு கடித்துப் பழையது உண்டு, நீராகாரம் குடித்து வெளியேறுவேன்.

சிலேட்டு, பென்ஸில், பராபரக் கண்ணி எடுத்துக் கொண்டு தனியே நடராஜசிவதரிசனம்செய்துகோபுரத்திலே ஏறுவேன். கோபுரத்தில் குளுகுளு காற்றுவீசும். யாரும்வரமாட்டார்





கள். பராபரக் கண்ணியைத் திருப்பித் திருப்பி எழுதியதில் எழுத்து பிடிபட்டது. தாயுமானவரே அறிவுப் பால் ஊட்டும் தாயானார். அவரது ஆனந்தக் களிப்பு பாடி ஆனந்த நடனம் ஆடுவது எனக்கு இன்பமானது. மதுரை புது மண்டபத்திலே ஒரு தாயுமானார் பாட்டு நூல் வாங்கிப் பாராயணம் செய்து வந்தேன்.

தாயுமானார் பாடல்களை முதலிலிருந்து ராகம் போட்டுப் படித்தேன். சிவசந்நிதியைப் பார்த்து, ''அப்பனே! நீதான் குரு; எனக்கு அறிவைத் தா'' என்பேன். பத்துப் பதினைந்து நாட்களில் தமிழ் நன்றாகப் படிக்க முடிந்தது. உடனே, என் அண்ணாவின் புத்தகங்களைப் படிக்கத் தொடங்கினேன்.

பெரியண்ணா, ''அதிகப் பிரசங்கி! உனக்கென்னடா தெரியும்?'' என்பான். ''தெரிந்த மட்டும் படிக்கிறேன், கேள்'' என்று உரக்கப் படிப்பேன். அவனே வியப்பான். ''பண்ணே உனக்கான பூசை ஒரு வடிவிலே பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி'' என்ற வரிகள் என்னை பக்தி யோகி ஆக்கின

இப்படி எழுத்துக் கற்ற பிறகு, எண் கற்க வேண்டுமே. அந்தக் காலம் குன்றக்குடி வாத்தியார் எண் சுவடிப் புலவர். அவர் எங்கள் வீட்டுக்கருகே கொல்லைப் புறத்திலேதான் பள்ளிக்கூடம் வைத்திருந்தார்.

ஒருநாள் அங்கே சென்றேன். ஐயோ பாவம்! என்னைப் போன்ற சிறுவர் கண்ணீர் வடித்து நின்றனர். இருவர் கோதண்டத்தில் ஏறி நின்றனர். சிலருக்கு நல்ல பிரம்படி; சிலர் அழுது கொண்டே எண் சுவடி, குழி மாற்றுமுறை வைத்தனர். நான் எண் சுவடியில் ஒரேஒண்ணு மட்டும் தெரிந்து கொண்டு ஓடி வந்துவிட்டேன். அப்பாவிடம் சொன்னேன். அவர் எனக்கு எண் சுவடி வாய்ப்பாடு சொல்லித் தந்தார். ஆனால் எனக்குக் கணக்கு ஏறவில்லை.

அம்மாள் ''இவனை ரங்கையங்கார் பள்ளிக்கூடத்தில் போடுவோம்'' என்றாள். விஜயதசமி, நான் பார்த்திருந்தது; அதற்குமுன்பே நான் அந்தப் பள்ளிக்கூடத்திற்கு ஓடிச் சென்றேன். ஏன்? அங்கே எனது நண்பர் சிலர் இருந்தனர்.

இரட்டைத் தெரு ரங்கையங்கார் பள்ளிக்கூடம் எனக்கு முன்பே தெரியும். நவராத்திரியில் அவர் மாணவருடன் கிலுக்கெடுத்து, பணக்காரர் வீடுகளுக்கு வந்து கோலாட்டம் நடத்துவார். எனது நண்பர் அனந்து, ராமு, ரங்கு, மணி இவர்களுடன் நானும் தனியாகக் கோலாட்டம் பழகுவேன். ஐயங்கார், கலை நிரம்பியவர்; அவருக்குச் சோதிடம்'மாந்திரிகம்'வைத்தியம் தெரியும். நன்றாகப் பாடம் சொல்லித் தருவார். அடிக்க மாட்டார்; வைய மாட்டார்; அதனால்தான் அவரிடம் சென்றேன். அவர் எனக்குப் பல்லாண்டு சொல்லி வைத்தார். பல்லாண்டான பிறகும் அதை மறவேன்.

◆ ◆ ◆

விஜயதசமியன்று பெற்றோரும்

அண்ணன்மாரும் என்னை ஐயங்கார் திண்ணைப் பள்ளிக்கூடத்திற்கு அழைத்துச் சென்றனர். "டே, வாடா பல்லாண்டு" என்று ஐயங்கார் என்னை வரவேற்றார். காப்பரிசி, பருப்பு, தேங்காய் நிவேதித்தனர். வெல்லத்தால் பிள்ளையார் பிடித்து வைத்து அட்சதை தூவி வழிபட்ட பிறகு, ஐயங்கார் அட்சராப்யாசம் தொடங்கினார்.

"ஹரி ஓம் நமோத்து சித்தம்" என்று சொல்லச் சொன்னார் ஆசிரியர். நான் "ஹரி ஓம் நமசிவாய சித்தம்" என்றேன். சிவநாமமும் இருக்கட்டும் என்று எல்லோரும் சிரித்தார்கள். பிறகு "நம: சிவாய, சிவாய நம ஓம், நமச்சிவாய நாராயணாய ஓம்" என்றொரு பாட்டைப் பாடினேன், ஆடினேன். எல்லோரும் சிரித்தார்கள்.

ஆசிரியர் "அ ஆ" என்று என் கையைப் பிடித்து எழுதினார். நான் "இதெல்லாம் எனக்குத் தெரியும் ஐயா..... அ, ஆ, இ, ஈ என்று எல்லா எழுத்துக்களையும் எழுதிய பிறகு, எங் கண்ணா போலவே இங்கிலீஷ் படிக்கணும்; சொல்லித் தாருங்கோ" என்றேன். ஐயங்கார் தமக்குத் தெரிந்த A B C D சொல்லி வைத்தார். பிறகு, காப்பரிசி பருப்புத் தேங்காய் எல்லாம் அங்கிருந்த மாணவருக்குத் தந்தை அன்புடன் தந்தார். நான் பூஜை பண்ணின வெல்லப் பிள்ளையாரை எடுத்துச் சாப்பிட்டுவிட்டேன்! "அடாடா" என்றார் ஆசிரியர். மாணவரோ, "வெல்லப் பிள்ளையார் விழுங்கி டோய்" என்று என்னைக் கேலி செய்தனர். நான் ஒரு செல்லப் பிள்ளையாகவே வளர்ந்தேன். என்னை வீட்டில் "செல்லையா" என்றழைப்பார். எங்களுக்குப் பழநி முருகனும் திருப்பதி வேங்கடாசலபதியும் குல தெய்வங்கள். ஆதலால் எனக்கு வேங்கட சுப்பிரமணியன் என்ற பெயரே வழங்கியது.

மறுநாள் முதல், காலை பழையது சாப்பிட்டு, நான் ஐயங்கார் பள்ளிக்கூடத்திற்குச் சென்றேன். முப்பத்தைந்து பையன்கள் அங்கே படித்தார்கள். அன்று நடந்த கோலாட்டத்தில், "நமச்சிவாய சிவாய நம ஓம் நாராயணாய ஓம்" என்ற கீர்த்தனம் பாடிக் கொண்டு ஆவேசமாகக் குதித்தேன். "ஸ்ரீராமச் சந்திரனே, ஸ்ரீ லோக சுந்தரனே, ஸ்ரீமந் நாராயணனே ராம் ராம் ராம்" என்று கோலாட்டம் போட்டுக் குதித்தேன். பிறகு "சுத்த பிரம்ம பராத் பாராம்". இப்படி பக்தி ரசப் பாடல்களையே அவர் சொல்லி வைத்தார். நானும் ஆடிப்பாடி இன்புற்றேன்.

என் பிஞ்சுப் பாடல்களும் குஞ்சுப் பாடல்களும் ஆசிரியருக்கும் மாணவருக்கும் பிடித்திருந்தன. என்னிடம் ரங்கைய ஐயங்காருக்குத் தனிப் பிரியம். எனக்கும் அவரிடம் பற்றுதலுண்டு. நான் எழுதப் படிக்க அதிவிரைவில் கற்றேன். பிறகு நீதி சதகம், ஆத்தி சூடி, கொன்றை வேந்தன், நல்வழி, தெலுங்கில் பெத்த பாலசிட்சை இவை பாடமாயின; எல்லாம் மூன்றே மாதம். பிறகு மிந்திரிலக்கம், குழி மாற்று, வட்டிக்







ஏன் கத்தினான்?

"எலே, நான் இன்னும் உன்னை அடிக்கல. அதுக்குள்ள 'ஐயோ, ஐய்யய்யோ'ன்னு ஏன் கத்தறே?"

"ஒத்திகை பார்த்தேன் அப்பா!"

— விசு.

கணக்கு, கடைக் கணக்குத் தொடங்கின. இதற்குள் நான் நாடகம், தெருக்கூத்து, பாரதம் ராமாயணம் நடந்த இடமெல்லாம் சென்று பயன் பெற்றேன். கம்பராமாயணம் என்னை ஆட்கொண்டது. கம்பர் சமாதிக்கு அடிக்கடி சென்று நாட்டரசன் கோட்டை நாயுடுவிடம் என் சந்தேகங்களைக் கேட்பேன்.

என் மூத்த அண்ணா என்னை ஆங்கிலப் பள்ளிக்கூடத்திற்கு இழுத்துச் சென்றான். நான் இடக்குப் பண்ணினேன். முன்பே கண்ட பிரம்படிக் காட்சி என் முன் நின்றது. வகுப்பில் அமர்ந்தேன். மறுநாள், "அண்ணா! நான் இங்கிலீஷ் பள்ளிக்குப் போக மாட்டேன்" என்றேன். "மாட்டாயா? போடா!" ஒரு கல்தா...... பத்தடி முன் சென்றேன். ...... பிறகு ஒரு கல்தா.... இருபதடி ...... நான் திரும்பிப் பார்த்தேன்....... "பார்க்கிறாயா?" மற்றொரு தள்ளு .... முன்னே ஓடினேன். வழியில் அண்ணா தனது நண்பருடன் பேசிக் கொண்டு நின்றான். அந்தச் சமயம் பார்த்து நான் அதிவேகமாக வைத்தியம் பிள்ளை மடத்திற்குள் நுழைந்தேன். கொல்லை வழியே சந்தைக்குள் புகுந்தேன். அன்று சந்தைக் கூட்டம். கூட்டத்தோடு விழுந்தடித்து ஓடி, நேராக ரங்கையங்கார் பள்ளிக்கூடத்திற்கு வந்து 'ஓம் நமோ நாராயணாய ஓம் நமச்சிவாய ஓம்' என்று வணங்கினேன்.

ஐயங்கார், "பிரகலாதன் போலே நாராயணஹரிசொல்லிக்கொண்டிரு. எல்லா வித்தையும் வரும்" என்றார்.

எனது நண்பன் ராமுவிடம் கதையைச் சொன்னேன். "அவன் என் வீட்டில் இரு" என்றான். "வேண்டாம், ஊர் சுற்றுவோமடா..... ஆத்தா ஊருணிக்குச் செல்வோம்" என்று புறப்பட்டோம். எனக்கு நீந்த வரும். நீரில் மிதப்பேன். நான் மிதக்கும் போது வாத்துக்கள் என்னருகே வந்து 'க கக' என்னும். அது எனக்குக் 'கற்க கசடறக் கற்பவை' என்று முக்காவின் பொருள் சொல்வது போலிருக்கும்.

வரும் வழியில் மேளக்கார மாயாண்டியின் வாத்தியம் கேட்டுச் சிறிது மண்டையை உருட்டுவேன். பிறகு ராமு ஆவாரங்காட்டுத் துரையிடம் என்னை அழைத்துச் சென்றான். அங்கே சில துறவிகள் இருந்தனர். அவர்கள் சித்தர் பாடல் பாடக் கேட்டேன். நானும் பராபரக் கண்ணி பாடினேன். அதைக் கேட்ட ஒரு பாட்டி என்மேல் பிரியங் கொண்டு, "கதை சொல்லுகிறேன் கேள்" என்று தொடங்கினாள். இந்தப் பாட்டி மருது பாண்டியர் தூக்குமேடை ஏறியபோது பார்த்தவள். மறக்குல வீரர் மாண்பெல்லாம் உணர்ச்சியுடனே சொன்னாள். பிற்காலம் தாமரைக் குளம் என்ற நூலிலே அந்தக் கதைகளை அச்சிட்டேன்.

வேலு நாச்சியார், பெரிய மருது, சின்ன மருது, வீரத்தேவன், சந்தனத்தேவன், வடுகுதுரை, கௌரி வல்லபத் தேவர் கதைகளெல்லாம் வெகு இனிமையாகச் சொன்னாள். எனக்குத் தேசாபிமானம் பிறந்தது. "நான் அன்னியரிடம் அடிமை வேலை செய்ய இங்கிலீஷ் ஏன் கற்க வேண்டும்? தமிழனான நான் தமிழே கற்பேன்...." என்ற உறுதியுடன் தாமரைக் குளத்திற்குச் சென்றேன். பாட்டியிடம் நிரம்பக் கதை கேட்டேன், எழுதினேன்.

தாமரைக் குளத்தின் வனப்பும், தனிமையும், இயற்கையழகும் என்னை வசீகரித்தன. ஒவ்வொரு தாமரையும் புன்னகையுடன் என்னை வரவேற்றது. நான் நன்றாக நீந்திக் குளித்து, நெடு

நேரம் தாமரைக் காட்சியிலும், பசிய வயல்களிலும், சொக்கி நின்று வீடு திரும்பும்போது, தெய்வசிகாமணிப் புலவர் அங்கே தோன்றினார்.

"நமஸ்காரம்" என்றேன். அவர் "இங்கெங்கே வந்தாய் அம்பி?" என்று அன்பாகக் கேட்டார். "என்னை இங்கிலீஷ் பள்ளிக்கூடத்துக்கு அண்ணா இழுத்துச் செல்கிறான். தமிழனுக்குத் தமிழ் போதாதா? நான் ஓடி வந்துவிட்டேன்" என்றேன். "அப்படிச் சொல்லாதே தம்பி? நீ தமிழ் நன்றாகப் படி. காலத்திற்குத் தக்க கல்வி வேண்டும். இங்கிலீஷ் படி" என்று உபதேசித்தார்.

"நானாக வீட்டில் படித்தாலென்ன? பள்ளிக்கூடத்திற்குப் போய் சம்பளமும் தந்து பிரம்படியும் வாங்குவானேன்" என்றேன்.

"நன்றாகப் படித்தால் அடி விழாது. நீ வா. நான் உன்னைக் கவனித்துக் கொள்கிறேன். தைரியமாயிரு" என்றார் புலவர். அவரிடம் எனக்கு அளவற்ற பக்தியுண்டு; என் பிஞ்சுக் கவிகளை அவர் கொஞ்சும் அன்புடன் போற்றினார். ஆதலால், அண்ணா கல்தா கொடுக்காமல் நானே பள்ளிக்கூடம் சென்றேன். என் அண்ணனுக்கு ஷேக்ஸ்பியர் பரிசு வந்தது. பெரும் பதிப்பு படத்துடன். அதை அண்ணா படித்தபோதும் நடித்த போதும் நானும் படிக்கத் துடித்தேன். எனக்கு வக்கீல் சேஷையர் ஆங்கிலம் புகட்டினார். படிப்பு துடிப்புடன் வந்தது. உயர்ந்த ஆங்கில நூல்களைப் படித்து வந்தேன். வகுப்பிலும் பரிட்சையிலும் தேறினேன். ஆனால், வகுப்புப் படிப்பு மட்டும் போதவில்லை. சிவகங்கையில் இருந்த ஒரு வெள்ளைக்கார வாலிபனை சிநேகம் பண்ணிக் கொண்டு ஆங்கிலம் தேர்ந்தேன். நல்ல காலம் மதுரையில் ஸெம்போ என்ற ஆங்கிலேயர் என்னை மிகவும் விரும்பினார். அவர் குடும்பத்திலே ஷேக்ஸ்பியர் நாடகங்களை ஆளுக்கொரு நடிகராகி உணர்வுடன் நடிப்பதுண்டு. நானும் அதிலே சேர்ந்தேன். பதினொருவயதில் நான் ஷேக்ஸ்பியர் படித்துச் சுவைத்தேன்.

தமிழ் ஆங்கிலம், சமஸ்கிருதம், தெலுங்கு, இந்தி, பிற்காலம் பிரெஞ்சு, ரஷ்யன் மொழிகள் எனக்கு வழி காட்டி நடத்தின. இன்று 1000 நூல்கள் கதை, நாடகம், விஞ்ஞானம் மொழி பெயர்ப்பு, பாட்டுக்களாகக் குவிந்துள்ளன. முன்பு என் புத்தகங்களை வெளியிட்ட அன்பு நிலையம் போன்ற இன்னொரு நிலையம் தோன்றினால், இதோ எல்லாம் தந்து என் வாழ்வுக் கணக்கை முடிக்கிறேன்.

என்றும் இருப்பதனில்
என்றும் இருப்பதுவே
என்றும் இருக்கும் இருப்பு.

அடுத்த இதழில்...




என் குழந்தைப் பருவம்

—சௌந்தரா கைலாசம்

சித்திரச் செய்திகள்

மரத்தூளில் வைரம்!



மரத்தூளிலிருந்து செயற்கை வைரம் தயாரிக்கலாம் என்று ரஷ்ய விஞ்ஞானிகள் கண்பிடித்திருக்கிறார்கள். வைரம் உருவாவதற்கு அடிப்படை 'கார்பன்' என்னும் கரியாகும். மரத்தூளிலும் கார்பன் இருப்பதால் அதைக் கொண்டு வைரம் தயாரிக்கலாம் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

யானைகளின் பந்தயம்!



கேரள மாநிலம் குருவாயூரில் யானைகள் ஓட்டப் பந்தயம் நடந்தது! பந்தயத்தில் 30 யானைகள் கலந்து கொண்டன. அவற்றில் நந்தினி என்னும் பெண் யானை முதலாவதாகவும், கோபால கிருஷ்ணன் என்னும் ஆண் யானை இரண்டாவதாகவும், கோபிநாத் என்னும் ஆண் யானை மூன்றாவதாகவும் வந்தன!

1001 அடி நீளக் கவிதை!




கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த 26 வயதுள்ள ரீகன் ஜோன்ஸ் என்பவர், முன்பு 101 அடி நீளம் உள்ள கிறிஸ்துமஸ் வாழ்த்தை பிரதமர் ராஜீவ்காந்திக்கு அனுப்பியிருந்தார். இப்போது அவரே 1001 அடி நீளமும் 5 அடி அகலமும் 5 கோடி வார்த்தைகளும் உள்ள கவிதை ஒன்றை போப்பாண்டவருக்கு அனுப்பும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்!

தையல் போடாமல் தசையை இணைக்கலாம்!



அறுவை சிகிச்சை முடிந்ததும் தசையை இணைக்கத் தையல் போடுவார்கள். ஆனால், தையல் போடாமலேயே தசையை இணைக்க ரஷ்ய விஞ்ஞானிகள் புதிய முறையைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். காந்த சக்தியால் மிகவும் நெருக்கமாகத் தசைகளை இணைக்கிறார்கள்.

ஓநாயின் ஊளை!



ரஷ்யாவில் கிர்கிஜியா என்ற இடத்தில் ஆட்டுப்பண்ணையில் ஓர் ஓநாயைப் பிடித்து ஒரு கூண்டுக்குள் அடைத்து வைத்திருக்கிறார்கள். அந்த ஓநாய் ஊளையிடுவதைக் கேட்டு, மற்ற ஓநாய்கள் தங்களுக்கும் ஆபத்து வரலாம் என்று அந்தப் பக்கமே வருவதில்லையாம். ஆடுகளும் பத்திரமாக இருக்கின்றனவாம்.

பௌர்ணமி நாளில்...

பௌர்ணமி பற்றி பாட்னா மருத்துவக் கல்லூரிப் பேராசிரியர் டாக்டர் சி. பி. தாகூர் ஓர் ஆராய்ச்சி நடத்தினார். அவர் சொன்னது: ''பௌர்ணமி தினத்தன்றுதான் கொலை, விபத்துக்கள் அதிக அளவில் நிகழ்கின்றன. அன்றுதான் குழந்தைகளின் நோயும் கடுமையாகிறது. ஆனால், பௌர்ணமியில் சந்திர ஒளி படுவதால் தொழுநோய் குணமாகிறது.''





இனிப்பு வெங்காயம்!

ஐக்கிய அமெரிக்காவில் ஜார்ஜியா மாநிலத்தில் விடாலியா என்ற இடத்தில் விளையும் வெங்காயம் இனிப்பாகவும், நெடி இல்லாமலும் இருக்கிறது. ஆப்பிள் மாதிரி அப்படியே கடித்துத் தின்னலாம். அந்த ஊர் மண்ணில் கந்தகச் சத்து குறைவாக இருப்பதுதான் இந்த ருசிக்குக் காரணமாம். விடாலியா வெங்காயத்துக்கு இப்போது ஏக கிராக்கி!

காரைக்குடி கோகுலம் வானொலி சிறுவர் சங்கம்




காரைக்குடியிலுள்ள இச்சங்கத்தார் வாரம் ஒருமுறை கூடி, பல நல்ல விஷயங்களைப் பேசுகிறார்கள். கவிதைகள் இயற்றிப் படிக்கிறார்கள். நாடகங்கள் எழுதிப் பழகுகிறார்கள். 9.2.86 ல் திருச்சி வானொலியில் த. பழனிவேலுவின் 'பூத்தது புது வசந்தம்' என்ற நாடகத்தை நடித்துப் பாராட்டுப் பெற்றனர்.

← படத்தில் கவிஞர் ரா. பொன்ராசன், நாடக ஆசிரியர் த. பழனிவேலு, த.. ஜெகன்னாதன், ஆகியோருடன் சங்க நிர்வாகிகளைக் காணலாம்.

திருந்தாதவங்க

ஏழைகளின் வாழ்த்து

ஆர். நாச்சியப்பன் (75)



திருநாவுக்கரசு ஒரு பணக்காரர்.

நிலச் சீர்திருத்தச் சட்டம் வந்ததும், அவர் தமது நிலங்களை விற்றுப் பணத்தை பாங்கில் போட்டார்.

அவர் ஒண்டியாள்! எனவே, சமையல், மற்றும் வீட்டு, வெளி வேலைகளுக்கு, கருப்பையா என்ற உதவியாள் இருந்தான்.

காலை ஆகாரம் முடிந்ததும் முகப்பிலே உள்ள சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொள்வார்.

கருப்பையா அவர் கால்களை மிருதுவாகப் பிடித்துவிடுவான்.

திருநாவுக்கரசு கேட்பார், ''ஏனடா, கருப்பையா! பணம் பாட்டுக்கு பாங்கியிலே தூங்குகிறதே! அதைக் கொண்டு ஏதாவது பயனுள்ள வேலை செய்தாலென்ன?''

கருப்பையா, ''நன்றாய்ச் செய்யலாம் ஐயா!'' என்பான்.

''என்ன செய்யலாம்? சொல்லு!''

''ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கலாம்! ஏராளமானவர்கள் வேலை செய்வார்கள். நல்ல லாபமும் கிடைக்கும்.''

''ஒரு வேளை, தொழிலாளர்கள் 'ஸ்ட்ரைக்' செய்தால்...?''

''இழுத்து மூட வேண்டியது தான்!''

''சே போ! அப்படியானால் தொழிற்சாலையே தொடங்க வேண்டாம்!'' பேசிய களைப்பில் கண்ணயர்வார்.

மறுநாள்,

''தொழிற்சாலைதான் இல்லை! வேறு என்ன செய்யலாம்?'' என்பார்.

''ஒரு பள்ளிக்கூடம் கட்டலாம் ஐயா! 'அன்ன சத்திரம் ஆயிரம் கட்டுவதைவிட ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவிப்பது மேல்' என்பார்கள். ஒன்றென்ன, ஆயிரக்கணக்கான குழந்தைகளை அறிவாளி ஆக்கலாம்.''

''சரி! படித்து முடித்துவிட்டு அவர்கள் என்ன செய்வார்கள்?''

''வேலை தேடுவார்கள்.''

''வேலை கிடைக்குமா?'':

''நிச்சயமில்லை!''

''சே போ! நாம் ஏன் வேலை இல்லாத் திண்டாட்டத்தை அதிகரிக்க வேண்டும்? இது நல்ல யோசனையே அல்ல.''

இப்படியே ஒவ்வொரு நாளும்...

பசு வாங்கி பால் பீச்சலாம் என்றால், 'அது செத்துப் போனால்?' என்று கேட்பார்.

'வீடு கட்டி வாடகைக்கு விடலாம்' என்றால், 'குடியிருப்பவன் வாடகை தராவிடில்?' என்று கேள்வி கிளம்பும்!

எதைச் சொன்னாலும் அதில் உள்ள குறைகளையே பார்ப்பார் அவர்.

மாதங்கள் சில கடந்த பின், ஒரு நாள்.

''ஏனடா கருப்பையா! பாங்கியிலேயே பணத்தை வைத்திருப்பது ஆபத்து! எவனாவது கள்ளக் கையெழுத்துப் போட்டு எடுத்து விடுவான்''

''அப்படியெல்லாம் நடக்குமா? அப்படியே எவனாவது கள்ளக் கையெழுத்துப் போட்டு உங்க பணத்தை எடுத்தாலும், உங்களுக்குப் பாங்க் பணம் கொடுத்தாகணுமே!''

''வேறு ஏதாவது வழி சொல்.''

''வேறு வழியா? சரி. நல்ல பெரிய பித்தளைத் தவலை எடுங்கள்!''

''சரி.''

கதையரங்கம்

புத்திசாலிப் பையன்

"உங்கள் பணத்தையெல்லாம் பொற்காசுகளாக மாற்றுங்கள்!"

"மாற்றி?"

"தவலைக்குள் போட்டு மூடி, நமது தோட்டத்திலே புதைத்து வையுங்கள்."

"அப்புறம்?"

"அப்புறம் என்ன? உங்களுக்குப் பிறகு பல ஆண்டுகள் கழித்து இவ்விடத்துக்கு வசிக்க வருபவன் புதையலை எடுத்து ஏதாவது செய்வான்!"

"அதனால் என்ன பயனடா!"

"முதலில் உங்கள் கவலை தீரும். ஒன்றும் செய்யாமல், என்ன செய்வது? என்றே யோசித்து, யோசித்து மூளை குழம்புவது குறையும்! எப்படியும் நீங்கள் பணத்தை ஒன்றும் செய்யப் போவது இல்லை! அது பயன்படவும் போவதில்லை. எப்பொழுதாவது புதையலை எடுப்பவன் அதை நல்ல வழியிலே பயன்படுத்துவான் என்று நம்புவோம்! வேறு வழியேது?" என்றான் கருப்பையா.

திருநாவுக்கரசு சிறிது நேரம் யோசனை செய்தார்.

கருப்பையா சொல்வது உண்மைதானே!

தான் அதைப் பயன்படுத்தாது விட்டுப் போனால், தனக்கப்புறம் அப்பணத்தை யார் எடுத்து என்ன செய்வார்களோ?

மறுநாள்,

திருநாவுக்கரசு தனக்குத் தேவையான ஒரு தொகையைத் தனியாக வைத்துவிட்டு, மீதியைத் தான தருமம் செய்ய ஆரம்பித்தார்.

அதனால், மேலோகத்தில் புண்ணியம் கிடைக்கிறதோ என்னவோ தெரியாது. பூலோகத்தில் ஏழை, எளிய மக்களின் வாழ்த்தொலி கேட்டு அவர் நெஞ்சம் பூரித்தது என்னவோ உண்மைதான்!



ராக.செள. கருணைகரன் (883)

அருள்மொழி எட்டாம் வகுப்பில் படிக்கும் பதினான்கு வயதுச் சிறுவன். அவன் வகுப்பில் அவன்தான் முதல்.

பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, விளையாட்டுப் போட்டி இப்படி எல்லாவற்றிலும் பரிசுகள் வாங்குபவன்.

கோகுலம் சிறுவர் சங்கத்திலும் உறுப்பினராய் இருக்கிறான்; கோகுலத்தில் அவன் கதை, துணுக்கு எல்லாம் வெளிவந்துள்ளன.

எல்லாரும் அவனை 'புத்திசாலிப் பையன்' என்றே அழைத்தனர்.

ஒருநாள் நள்ளிரவில் அருள்மொழியின் வீட்டுக்குள் இரு முகமூடித் திருடர்கள் புகுந்து விட்டனர்.

அருள்மொழியின் அப்பா, அம்மா, பாட்டி, எல்லாரும் திருடர்கள் முன் நடுங்கிக் கொண்டு நின்றனர். அவர்களை முகமூடித் திருடர்கள் தூண்களுடன் சேர்த்துக் கட்டிப் போட்டு விட்டனர்.

திருடர்கள், வீடுகளிலுள்ள விலை மதிப்பான பொருட்களையும் எடுக்கத் தொடங்கினர்.

அருள்மொழி இருட்டில், திருடர்

களுக்குத் தெரியாதபடி நழுவி, சமையல் அறையுள் புகுந்துவிட்டான். அவன் அண்ணன் ரவி மெதுவாக நகர்ந்து சென்று பின்புறச் சுவரில் ஏறிக் குதித்துத் தப்பித்துக் கொண்டான். சமையல் அறைக்குள் சென்ற அருள்மொழி மிளகாய்த்தூள் பாட்டிலை எடுத்துத் திறந்து, அப்படியே எடுத்து வந்தான்.

ஒரு கையில் தூளை அள்ளினான். கூடத்தில் நின்று கொண்டிருந்த திருடர்களின் முகத்தைப் பார்த்து வீசினான். தொடர்ந்து பாட்டிலில் கையை விட்டு எடுத்து வீசிக் கொண்டே இருந்தான்.

கண்களுக்கு மட்டும் ஓட்டையிட்ட முகமூடிகளை மாட்டிக் கொண்டிருந்தனர் திருடர்கள். அந்த ஓட்டை வழியாக அவர்களின் கண்களில் மிளகாய்த்தூள் பாய்ந்தது.

"அய்யோ... கண் எரியுதே!" என அலறினர். 'ஹச்... ஹச்...' என்று தும்மினர்.

அருள்மொழி சமையலறையில் இருந்தஎண்ணெய்ப்பாட்டிலைஎடுத்து வந்தான். அதை அலறிக் கொண்டிருந்த திருடர்களின் கால்களில் ஊற்றினான்.

இனி இங்கே இருந்தால், ஆபத்து என உணர்ந்து கொண்ட திருடர்கள் வெளியே ஓட, காலை எடுத்து வைத்தனர். வழவழப்பாக இருந்த தரையில் அவர்களால் ஓட முடியவில்லை. தடாலென வழுக்கி விழுந்தனர்.

• • •


அருள்மொழி ஊற்றிய எண்ணெயால் அவர்கள் மீண்டும், மீண்டும் வழுக்கி விழுந்தனர்.

இதற்குள் கொல்லைப்புறமாக ஓடிய அவன் அண்ணன் ரவி, காவலர்களை அழைத்து வந்துவிட்டான். அவர்கள் முகமூடித்திருடர்களை இழுத்துச்சென்றனர்.

முகமூடித் திருடர்களைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் பரிசு என அரசு அறிவித்து இருந்தது.

அந்தப் பரிசு அருள்மொழிக்குக் கிடைத்தது.

'புத்திசாலிப்பையன்' என்றஅவன் பட்டப்பெயர் அவனுக்குத்தொடர்ந்து இருந்து கொண்டிருந்தது.



எல்லாரிடமும் இருப்பது...

வி.ஸ்ரீரஞ்சனி (11262)

இன்பபுரியை ஒரு மன்னன் ஆண்டு வந்தான். அவன் மக்களிடம் விதித்த வரிக்கு கணக்கே இல்லை. எல்லோரும் மிகவும் துன்புற்றனர். எல்லோரும் அவனை வெறுத்தனர்.

வசூலித்த வரிப்பணத்தைக் கொண்டு அவன் மக்களுக்கு ஒரு நன்மையும் செய்யவில்லை. வீதியெல்லாம் குப்பை கூளம், அசுத்தம், மக்களெல்லாம் நோயால் வாடினர். ஆனால், மன்னன் மட்டும் மாடமாளிகையில் உண்டு, உறங்கி, மதுவருந்தி இன்ப வாழ்க்கை வாழ்ந்தான்.

ஒருநாள் இரவு படுக்கச் சென்ற போது, "இந்த ஊரில் எல்லோரிடமும் என்ன என்ன இருக்கிறதோ அது அனைத்தும் எனக்கே வந்தால்... எவ்வளவு நன்றாக இருக்கும்" என்று எண்ணிக் கொண்டே தூங்கிவிட்டான்.

அவனது கனவில் ஒரு தேவதை வந்து, "நாளைக் காலையில் நீ நினைத்தபடியே இந்நாட்டில் எல்லோரிடம் இருப்பதும் உனக்கே வந்துவிடும்" என்று கூறி மறைந்தது. அடுத்த நாள் வந்தது. காலையில்மிக்கமகிழ்ச்சியுடன் எழுந்த மன்னனுக்கு மாலைக்குள் பல வித நோய்கள் வந்தன. அவன் மிகவும் துன்புற்றான். தேவதை மேல் அவனுக்கு மிகவும் கோபம் கோபமாக வந்தது.

அப்பொழுது தேவதை அங்கே வந்தது. உடனே மன்னன், "ஏன் என்னை ஏமாற்றினாய்? மக்களிடமுள்ள சொத்துக்களை அல்லவா நான் எதிர்பார்த்

தேன். இப்படி என்னை இத்தனை நோய்களுக்கும் ஆளாக்கிவிட்டாயே?'' என்று கேட்டான்.

அதைக் கேட்ட தேவதை சிரித்தது. பிறகு, ''நான் உன்னை ஏமாற்றவில்லையே! நீதான் உன்னையே ஏமாற்றிக் கொண்டு பேராசையின் காரணமாக, 'எல்லோரிடமும் உள்ளவை எனக்கே வேண்டும்' என்று நினைத்தாய்! நீ இந்த நாட்டு மக்களிடம் வரி வசூலிப்பதைத் தவிர வேறு என்ன செய்தாய்? நீ மட்டும் சுகபோகத்தில் வாழ்ந்து மக்களைக் கொடுமைப்படுத்தினாய். இந்நாட்டில் உள்ள அசுத்தத்தால் மக்களிடம் நோயைத் தவிர வேறு ஒன்றுமே இல்லை. உன் பேராசைக்குத் தண்டனையாய் உனக்கு அவர்களின் நோய்களெல்லாம் வந்தன'' என்று கூறி மறைந்தது.

அப்பொழுதுதான் முதன் முறையாக மக்களைப் பற்றி நினைத்துப் பார்த்தான், மன்னன். பின்பு, திருந்திய மன்னன் மக்களுக்குப் பல நன்மைகளைச் செய்துவந்தான். மக்கள் அவனை மிகவும் போற்றினர்.





சென்னை வானொலி சிறுவர் சங்கப் பேரவை — வெள்ளி விழா

சென்னையிலுள்ள 80 க்கு மேற்பட்ட வானொலி சிறுவர் சங்கங்களும் சேர்ந்து நடத்துவது சென்னை வானொலி சிறுவர் சங்கப் பேரவை. இதன் வெள்ளி விழா, மயிலை ஆர். ஆர். சபாவில் சமீபத்தில் மிகவும் சிறப்பாக நடந்தது.

குழந்தைகளுக்காகப் பலநூறு பாடல்களை எழுதிப் புகழ்பெற்ற பேரவைத் தலைவர் நல்லாசிரியர் திரு. தணிகை உலகநாதர் அவர்களும், குழந்தை நாடகங்கள் எழுதுவதில் வல்லவரான வானொலி அண்ணா திரு. கூத்தபிரானும் வெள்ளிவிழாவில் பாராட்டப் பெற்றனர்.

மக்கள் கலைஞர் திரு. ஜெய்சங்கர் தலைமை தாங்கினார். அமைச்சர் திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி சிறப்புரை ஆற்றினார். சென்னை வானொலி இயக்குநர் திரு. ஜி. சுப்பிரமணியன் விழா மலரை வெளியிட்டார். திரு. வி. ஜி. சந்தோஷம் சங்க அமைப்பாளர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்.

சங்கத்திற்குப் பெருதவி புரிந்து வரும் திருமதிகள் புவனா கிருஷ்ணா, கே. சரஸ்வதி ஆகியோரும் செயலாளர்கள் பி. பாலகிருஷ்ணன், என். வி. சந்தானம், ஹேமாவதி முதலியோரும் விழாவின் வெற்றிக்குப் பெரிதும் உதவினர்.

கேளுங்கள்

* நம் நாட்டில் செஞ்சிலுவைச் சங்கத்தின் அடையாளமாக வெள்ளை வட்டத்தில் சிகப்புச் சிலுவை இருக்கிறது. உலகம் முழுவதும் செஞ்சிலுவைச் சங்கத்தின் சின்னம் இப்படித்தான் இருக்குமா?

— க. வேதநாயகி, திருப்பரங்குன்றம்.

இல்லை. ஈரான் நாட்டுச் சின்னத்தில் சிகப்புச் சிங்கமும், சூரியனும் இருக்கின்றன. ஈராக், துருக்கி, எகிப்து, பாகிஸ்தான் போன்ற முஸ்லிம் நாடுகளில் செஞ்சிலுவைக்குப் பதில் சிகப்பு இளம்பிறை உள்ளது.

* மோதிலால் நேரு, ஜவஹர்லால் நேரு என்கிறோம். நேரு என்பது அவர்கள் குடும்பத்துப் பெயரா?

— பெ. தூயமணி, விருத்தாசலம்.

ராஜ் கவுல் என்பவர் காஷ்மீரத்தில் சமஸ்கிருதத்திலும் பாரசீகத்திலும் பெரிய அறிஞராக இருந்தார். அவருடைய பெருமையை அறிந்த டில்லி சக்கரவர்த்தி, அவரை டில்லிக்கு வந்துவிடும்படி கேட்டுக் கொண்டார். அவர் டில்லி வந்ததும், ஒரு வாய்க்காலுக்கு அருகில் குடியேறினார். நாகர் என்றால் வாய்க்கால் என்று பொருள். நாகர் தான் நேரு என்று ஆகிவிட்டது. ராஜ் கவுல், ராஜ் நேருவானார். மோதிலாலின் தந்தை பெயர் கங்காதர நேரு.

* **பாவக்காய் தின்றால் வயிற்றில் உள்ள பூச்சிகள் இறந்துவிடும் என்கிறார்களே உண்மையா?**

— செ. சித்தார்த்தன், திண்டுக்கல்.

ஒரு பாவமும் செய்யாத அந்தக் காயை 'பாவக்காய்' என்று அழைக்கலாமா? 'பாகற்காய்' என்று அழைப்பதே சரி. நம் உணவுப் பையிலுள்ள பூச்சிகளைக் கொல்லும் சக்தி இதற்கு உண்டு என்பது உண்மைதான். கசக்கும் இந்தக் காயை வேக வைத்து நீரை வடிகட்டி விடுவது நல்லது.

* எங்கள் ஊர்ப் பொது நூலகத்தில் சிறுவர்களுக்கான கதைப் புத்தகங்கள் இருந்தும், கேட்டால் இல்லை என்கிறார்களே, என்ன செய்வது?

— கே. நரசிம்மன், ஓசூர்.



வீட்டுக்கு எடுத்துச் சென்று படிப்பதாயிருந்தால், நூலகத்தில் டிபாசிட் கட்டி உறுப்பினராக வேண்டும். அங்கேயே அமர்ந்து படிப்பதென்றால், மறுக்க மாட்டார்களே!

* 'அறு சுவை விருந்து' என்றால்...?

— ச. கபிலன், திருத்தணி.

இனிப்பு, புளிப்பு, கசப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு (மிளகைத் தின்னும்போது ஒருவகை காரம் ஏற்படுகிறதே, அதுதான் கார்ப்பு).

* காளமேகப் புலவர் மிகவும் நகைச்சுவையாகப் பாடுவார் என்கிறார்களே, அவர் பாடிய ஒரு பாட்டைச் சொல்லுவீர்களா?

—சி. சிதம்பரம், மதகுபட்டி.



திருவிழா சமயத்தில் கருட வாகனத்தில் பெருமாள் ஊர்வலம் வருகிறார். அதைப் பார்த்த காளமேகப் புலவர் வேடிக்கையாகப் பாடுகிறார்!

பெருமாளோ நல்ல பெருமாள் — அவர்தம்
திருநாளோ நல்ல திருநாள் — பெருமாள்
இருந்த இடத்தில் இராததால் அன்றோ
பருந்து எடுத்துப் போகிறதைப் பார்.

* தமிழர்கள் தற்போது எந்த நாட்டில் அதிகமாக இருக்கிறார்கள்?

— கே. பாலசுப்பிரமணியன், சேலம் — 6.

தற்போது தென் ஆப்பிரிக்காவில்தான் அதிகமான தமிழர்கள் குடியேறியிருக்கிறார்கள். பர்மா, இலங்கை போன்ற நாடுகளில் இருந்த தமிழர்கள் தொகை மிகவும் குறைந்துவிட்டது.

* தேன் இரும்பு என்றுதான் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், தேன் எறும்பு என்று ஒரு எறும்பு இருக்கிறது என்கிறார்

சொல்லுகிறோம்

களே, உண்மைதானா?

— தே. ஜெவப்பிரகாசம், கூடுவாஞ்சேரி.



உண்மைதான். எறும்புகளிலே எண்பதாயிரம் இனங்கள் உண்டு என்று கணக்கிட்டிருக்கிறார்கள். அவைகளில் ஒரு வகைதான் தேன் எறும்பு. இதன் வயிறு உப்பி உருண்டையாக இருக்கும். காரணம், தேன் கிடைக்கும் காலங்களில் இது தன் வயிற்றில் தேனைச் சேகரித்துவைத்துக்கொள்ளும். தேன் கிடைக்காத காலங்களில், வயிற்றிலுள்ள தேனை வாய்வழியாகக் கொண்டுவந்து மற்ற எறும்புகளுக்குக் கொடுக்கும்.

* ஞானபீடப் பரிசு பெற்ற 'சித்திரப் பாவை' என்னும் தமிழ் நாவலை எழுதியவர் யார்?

— எஸ். சிவராஜ், மன்னார்குடி.



குழந்தைகளுக்காகவும், 'கண்ணானை கண்ணன்' 'தங்க நகரம்' போன்ற புத்தகங்களை எழுதியவர்தான் அவர் — பெயர் அகிலன்.

* நல்ல பாம்பு மட்டும்தான் சட்டை உரிக்குமா?

— எஸ். ராமானுஜம், திருச்சி—5

எல்லாப் பாம்புகளுமே சட்டை உரிக்கும்.

* நேருவின் பொன்மொழிகளில் தங்களுக்குப் பிடித்தது எது?

— கா. சேட்டு முகம்மது, விருத்தாசலம்.

Success often comes to those who dare and act; It seldom goes to the timid. (வீரத்துடன் செயல் புரிபவர்க்கே அடிக்கடி வெற்றி வந்து சேருகிறது. கோழைகளிடம் அது ஒருபோதும் செல்வதில்லை.)

* எலும்பு முறிந்து போனால், பிளாஸ்டர் ஆப் பாரிஸ், வைத்துக் கட்டுகிறார்களே, அதை எப்படித் தயாரிக்கிறார்கள்?

— ப. வேதம், திருத்தணி.

இயற்கையாகக் கிடைக்கும் கால்சியம் சல்பேடு, கர்ப்பூர சிலா சத்து என்று அழைக்கப்படுகிறது. அதைச் சுட்டுப் பொடியாக்கி, அதைப் போல் இரண்டரை மடங்கு தண்ணீர் கலந்து களியாக்கினால் பாரிஸ் சாந்து அல்லது **Plaster of Paris** கிடைக்கிறது. கலபமாகப் பொடியாகக் கூடிய இது, காற்றுப் பட்டபின் மிகவும் உறுதியுள்ள பொருளாக இறுகி விடுகிறது. முறிந்த எலும்பைச் சரியானபடி பொருத்தி வைத்து, பிறகு அது விலகாமல் இருப்பதற்காகக் கட்டுக்கு மேல் இதைப் பூசுகிறார்கள்.

* சிலருக்கு, கருட பார்வை இருக்கிறது. அதை அதிர்ஷ்டம் என்கிறார்களே! உங்கள் கருத்து என்ன?

— சி. பார்வதவர்த்தினி, திருவண்ணாமலை.

மாறுகண் என்று சொல்லப்படும் இந்தக் கருட பார்வையை அதிர்ஷ்டம் என்பது மூட நம்பிக்கையே. நாம் அங்குமிங்குமாகத் திரும்பிப் பார்க்க, கண்களிலுள்ள தசை நார்கள் உதவுகின்றன. ஒரு கண்ணில் ஏதேனும் ஒரு தசை நார் பழுது பட்டாலும் மாறுகண் ஏற்படுகிறது. அது மற்றொரு கண்ணுடன் ஒத்துழைக்க முடியாமல் போகிறது. குழந்தை பிறந்த ஓர் ஆண்டுக்குள் கண் டாக்டரிடம் காட்டினால் மாறு கண்ணைச் சரி செய்துவிட முடியும்.

* 'இளமையில் இவர்கள்' என்று கோகுலத்தில் தொடர்ந்து வந்ததே. அப்படி ஏகநாதரின் இளமையில் நடந்த நிகழ்ச்சி எதையாவது கூற முடியுமா?

— எஸ். சாந்தலட்சுமி, பேராவூரணி.

ஏகநாதருக்கு 12 வயதாயிருந்த போது அவரை அவருடைய பெற்றோருடன் ஜெருசலம் கோயிலுக்கு அழைத்துச் சென்றிருந்தார்களாம். திரும்பி வரும் போது, மகனைக் காணவில்லையாம். கோயிலுக்குள் சென்று தேடிப் பார்த்தபோது, அவர் அங்கிருந்த அறிஞர்களோடு பேசிக் கொண்டிருந்தாராம். மதசம்பந்தமாக ஏகநாதர் கூறிய சில உண்மைகளையும், சில கேள்விகளுக்கு அவர் அளித்த விடைகளையும் கேட்டு அவருடைய பெற்றோரும் மற்றோரும் வியப்படைந்தார்களாம். ஆனாலும், அவரிடம் ஓர் அற்புத சக்தி இருந்ததை அவருடைய முப்பதாவது வயதில்தான் பலர் தெரிந்து கொண்டார்களாம்.

* அந்தக் காலத்தில் 'லைட் ஹவுஸ்' இருந்ததா?

— ஜி. வேதகிரி, கடலூர்.

கடலில் வரும் கப்பல்கள் கரையைக் கண்டு கொள்வதற்காக, முற்காலத்தில் உயரமான தூணைக் கட்டி, அவற்றின் உச்சியில் மரக் கட்டைகளைப் போட்டு எந்தநேரமும் எரித்துக்

கொண்டிருந்தார்கள். அதையே 'லைட் ஹவுஸ்' அல்லது கலங்கரைவிளக்கம் என்றார்கள். பிறகு விறகுக்குப் பதில் மண்ணெண்ணெய் ஊற்றி ஒளி உண்டாக்கினார்கள். அப்புறம், மின்சாரத்தைப் பயன்படுத்தினர். இப்போதுள்ள கலங்கரை விளக்கம் சுமார் 30 கிலோ மீட்டர் தூரம் வரை ஒளி வீசும்.

*** சமீபத்தில் காலமான பேராசிரியர் அ. கி. பரந்தாமனார் எங்களைப் போன்ற சிறுவருக்கும் எழுதி இருக்கிறாராமே? அதைப் பற்றிச் சொல்லுங்களேன்.**

— கே. முரளிதரன், சென்னை—10.



'பைந்தமிழ்ப் பாவலர்' என்ற சிறப்புப் பட்டம் பெற்ற அவர், "எங்கள் தோட்டம்" என்ற சிறுவருக்கான பாடல்கள் அடங்கிய நூலை வெளியிட்டிருக்கிறார். தமிழக அரசின் பரிசு பெற்றது.

*** கலைக் களஞ்சியத்தை முதல் முதலாகத் தயாரித்தவர் யார்?**

— ஆர். குணவதி, இராமநாதபுரம்.

கிரேக்க அறிஞரான அரிஸ்டாடில் என்பவர்தான், கலைக் களஞ்சிய நூல்கள் உண்டாக வழி காட்டியவர். அவருக்கு முன்பு வாழ்ந்த அறிஞர்களின் அறிவுரைகள், சொற்பொழிவுகள், நூல்கள் ஆகியவற்றைத் திரட்டி பல புத்தகங்களாக வெளியிட்டார். ஆனால், அவை அகர வரிசையிலோ, பொருள் வரிசையிலோ இல்லை. அகர வரிசையில் முதல் முதலாகக் கலைக் களஞ்சியத்தை வெளியிட்டவர், இங்கிலாந்தைச் சேர்ந்த ஜான் ஹாரிஸ். பொருள் வரிசையில் முதல் முதலாக வெளியிட்டவர். ஜெர்மனியைச் சேர்ந்த ஆஸ்டெட்.

*** பிரெஞ்சு நாட்டில் நமது இதிகாசமான 'மகா பாரதம்' நாடகமாக நடத்தப்படுகிறதாமே. அந்த நாடகம் இந்தியாவுக்கும் வருமா?**

— கே. சுந்தர், சென்னை—17.

பல தேசத்து நடிகர்களை வைத்து பீட்டர் புரூக் என்பவர் மகாபாரதத்தை மூன்று பாகங்களாகத் தயாரித்திருக்கிறாராம். ஒவ்வொரு பாகமும் 3 மணி நேரம் நடக்குமாம். இதில் மல்லிகா சாராபாய் என்ற நம் இந்திய நாட்டியக் கலைஞர் திரௌபதையாக நடிக்கிறாராம். இப்போது இந்த நாடகம் பாரிஸில் நடக்கிறது. பல நாடுகளுக்கும் சென்று இதை நடத்தப் போகிறார்களாம். மகாபாரதம் நம் நாட்டுக் கதை. இதில் திரௌபதையாக நடிப்பவரும் நம் நாட்டவர். அப்படியிருக்கும் போது, இந்தியாவுக்கு இந்த நாடகம் வராமல் போகுமா?

*** கல்கத்தாவுக்குப் பக்கத்திலுள்ள பேலூர் மடத்தை நான் இரண்டு வருஷங்களுக்கு முன்பு பார்த்தேன். நீங்கள் அதைப் பார்த்திருக்கிறீர்களா? அதில் என்ன விசேஷம்?**

— எம். சித்ரா, கோவில்பட்டி.

ஐந்து வருஷங்களுக்கு முன்பே பார்த்தாயிற்று. வெவ்வேறு கோணங்களில் நின்று பார்த்தால், அது வெவ்வேறு விதமாகத் தோன்றும். ஒரு கோணத்திலிருந்து பார்த்தால், இந்துக் கோயில் போலத் தெரியும். இன்னொரு கோணத்தில் நின்று பார்த்தால் மசூதி போலத் தெரியும். வேறொரு கோணத்தில் நின்று பார்த்தால் கிறிஸ்தவர்களின் தேவாலயம் போலத் தெரியும். 'எல்லா மதங்களும் ஒன்று' என்ற இராமகிருஷ்ணரின் தத்துவத்தை விளக்குவது போல், இந்த மடத்தை விவேகானந்தர் அமைத்திருக்கிறார்.

*** சமீபத்தில் காலமான ருக்மிணி தேவியை ருக்மிணி அருண்டேல் என்று சொல்கிறார்களே, அப்படியானால் அருண்டேல் என்பவர் எந்தநாட்டுக்காரர்? அவரைப்பற்றித்தெரிந்து கொள்ள ஆசை.**

— டி. ராமசாமி, ஸ்ரீரங்கம்.

ஜார்ஜ் சிட்னி அருண்டேல் என்பவர் ஆங்கில நாட்டைச் சேர்ந்த ஓர் அறிஞர். காசி இந்துக் கல்லூரியின் தலைவராக இருந்து, பிறகு இந்தூரில் கல்வி அமைச்சரானார். ருக்மிணி தேவியாரை மணந்த பின், அவருடன் சேர்ந்து அடையாறு கலாக்ஷேத்திரத்தை நிறுவினார். இந்தியரின் விடுதலைப் போராட்டத்தை ஆதரித்து மனச்சான்று (Conscience) என்ற ஆங்கிலப் பத்திரிகையை நடத்தினார். இந்துஸ்தான் சாரண இயக்கத்தின் சென்னை மாகாண கமிஷனராகவும் இருந்தார். 1945 ல் காலமானார்.

*** தேர்ச்சி அறிக்கையில் தன் பெற்றோரைப் போலவே கையெழுத்துப் போடும் மாணவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

— கே. ஐயப்பன், வலங்கைமான்.

இப்படித் தன் பெற்றோரையோ, ஆசிரியரையோ ஏமாற்றும் மாணவர்கள், தங்களைத்தான் ஏமாற்றிக் கொள்கிறார்கள். மாணவர்கள் எப்படிப் படிக்கிறார்கள் என்பதைப் பெற்றோர் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தானே அந்த அறிக்கையை அனுப்புகிறார்கள்? ஒன்றிரண்டு பாடங்களில் குறைந்த மதிப்பெண்கள் பெற்றிருப்பதைப் பெற்றோர் அறிந்தால் அதற்கான காரணங்களைக் கண்டுபிடித்து, அவர்களுக்குத் தக்க முறையில் அறிவுரை கூறலாம்; நல்ல முறையில் படிப்பதற்கு வசதி செய்து கொடுக்கலாம். பெற்றோருக்குப் பதிலாகப் பொய்க் கையெழுத்திடுபவர்களின் எதிர்காலம் இருள் மயமாகத்தான் இருக்கும் என்பதில் ஐயமில்லை.



பற்களைப் பாதுகாப்பது எப்படி?

டாக்டர் கு. கணேசன்

நீங்கள் அழகாகச் சிரிப்பதாக மற்றவர்கள் பாராட்டுகிருர்கள் என்று வைத்துக் கொள்வோம். அதற்குக் காரணம், உங்கள் முத்துப் போல் பளிச்சிடும் பற்கள்தானே!

நீங்கள் பாடங்களைப் படிக்கும் போது வார்த்தைகளை அழுத்தம் திருத்தமாக உச்சரிப்பதாக ஆசிரியர் பாராட்டுகிருர் என்ருல் அதற்குக் காரணம் உங்கள் வசீகரமான பற்கள்தானே!

உங்கள் பற்கள் சிரிப்பதற்கும் உச்சரிப்பதற்கும் மட்டுமா பயன்படுகின்றன? இல்லை. உங்கள் உடலின் வளர்ச்சிக்கும் ஆரோக்கியத்திற்கும் கூட அவை பயன்படுகின்றனவே!

உதாரணமாக, நீங்கள் உண்ணும் உணவுப் பொருட்களைக் கடித்து, மென்று, அரைத்து, மாவு போலாக்கி, உணவுப் பாதையில் எளிதாக ஜீரணிக்கும் வகையில் அவற்றைப் பதப்படுத்தி அனுப்பி வைப்பவை எவை? உங்கள் பற்கள்தானே! உங்கள் வாய்க்கு பலம் கொடுப்பதும், அதன் நலம் காப்பதும் அதே பற்கள்தானே!


அத்தகைய பற்களைப் பற்றி நீங்கள் அறிந்துகொள்ள வேண்டியது அவசியமில்லையா? அவற்றை எப்படிப் பாதுகாப்பது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டாமா? அதற்காகத்தான் இக்கட்டுரையை எழுதுகிறேன், படியுங்கள் —

பொதுவாக பிறக்கும்போதே குழந்தைகளுக்குப் பல் முளைத்திருப்பதில்லை. குழந்தைக்கு 6 வது மாதம் ஆகும்போதுதான் பல் முளைக்க ஆரம்பிக்கும். முதலில், முன் பற்களும் பிறகு பக்கவாட்டுப் பற்களும் முளைக்கின்றன. சுமார் 2½ வயது ஆகும் போது கீழ்த்தாடையில் பத்துப் பற்களும், மேல் தாடையில் பத்துப் பற்களுமாக மொத்தம் இருபது பற்கள் முளைத்திருக்கும். இவை 'பால் பற்கள்' என அழைக்கப்படுகின்றன.

ஆறு வயது ஆகும்போது இந்தப் பால் பற்கள் ஒவ்வொன்ருக விழ ஆரம்பிக்கின்றன. அதற்குப் பதிலாக பலம் வாய்ந்த 'நிலையான பற்கள்' அவ்விடங்களில் முளைக்கத் தொடங்குகின்றன. பதினென்று வயது ஆகும் போது எல்லாப் பால் பற்களும் விழுந்து நிலையான பற்கள் முளைத்திருக்கும்.

சுமார் 28 வயது ஆகும் போது கீழ் தாடையில் பதினறு பற்களும் மேல் தாடையில் பதினறு பற்களும் ஆக மொத்தம் முப்பத்திரண்டு பற்கள் முளைத்திருக்கும்.

ஒவ்வொரு பல்லும் தலை அல்லது கிரௌன், கழுத்து, பல்ப், வேர் என்ற நான்கு பகுதிகளால் உருவாக்கப்பட்டிருக்கும். ஈறுகளுக்கு மேல் நாம் பார்க்கக் கூடிய பகுதிக்கு 'கிரௌன்' (Crown) என்று பெயர். இதை எனமல் என்ற வெள்ளையான வெளிப்பூச்சு மூடியிருக்கும். பல்லின் வேர் ஈறுகளில் புதையுண்டிருக்கும். பற்கள் தாடையில் நிற்பதற்கு இந்த வேர்கள்தான் காரணம்.



எந்த மரம்?

"வேர் இல்லாத மரம் எது தெரியுமாடா?"

"தெரியாது. எதுடா?"

"கைகாட்டி மரம்."

— விக.

ஒவ்வொரு பல்லின் நடுவிலும் 'பல்ப்' என்ற மிருதுவான பகுதி உண்டு. இதில்தான் பல்லிற்குத்தேவையான சத்துக்களைக் கொண்டு வரும் இரத்தக் குழாய்களும், வலியை உணர்த்தக் கூடிய நரம்புகளும் இருக்கின்றன. இந்த பல்ப்பானது 'டென்டைன்' என்கிற கெட்டியான பொருளால் பாதுகாக்கப்பட்டிருக்கும்.

இத்தனை பாதுகாப்பாக இருந்தும் சிலருக்குப் பற்களில் சொத்தை விழுந்து கெட்டு விடுகிறதே! அது எப்படி? காரணம் சொல்கிறேன் —

சில குழந்தைகள் அறியாமையினாலும் சோம்பேறித்தனத்தினாலும் சரியாகப் பல் துலக்க மாட்டார்கள். சிலர் சாப்பிட்ட பிறகு நன்றாக வாயைக் கொப்புளிக்கமாட்டார்கள். சில குழந்தைகள் அதிகமாக இனிப்பு வகைகளை (வெல்லம், சர்க்கரை, சாக்லேட்) மென்று கொண்டே இருப்பார்கள். இது போன்ற காரணங்களினால், நம் வாயில் இயற்கையாகவே உள்ள பாக்டீரியா கிருமிகள் இந்த இனிப்பினாலும் அசுத்தத்தினாலும் பல்கிப் பெருகி, பல் இடுக்கில் சிக்கியிருக்கும் உணவுப் பொருட்களிலிருந்து ஒரு வகை அமிலத்தை உற்பத்தி செய்யும். இந்த அமிலம் சும்மா இருப்பதில்லை. பல்லின் வெளிப் பூச்சான எனாமலை அரிக்கும். கொஞ்சம் கொஞ்சமாக எனாமலைக் கரைத்துப் பல்லின் உட்புறத்திலுள்ள டென்டைனையும் தாண்டி பல்ப்பை ஊடுருவிச் செல்லும். இப்போது பல்லில் ஆழமான குழி விழும். இதுதான் சொத்தைப் பல்.

பல்ப்பினுள் ஊடுருவிச் சென்ற அமிலம் அங்குள்ள நரம்புகளை அரிப்பதால் பல்வலி உண்டாகிறது. அப்போதுதான் 'அம்மா, பல்வலி தாங்க முடியவில்லையே!' என்று குழந்தைகள் கத்துகிறார்கள்.

விவரம் தெரிந்தவர்கள் பல்லில் லேசாகக் குழி விழ ஆரம்பித்த உடனேயே, பல் டாக்டரைச் சந்தித்து ஆலோசனை பெற்று விடுவார்கள். ஆனால், சிலர் என்ன செய்கிறார்கள் என்றால், பல்வலியையும் பல்லில் விழுந்த சொத்தையையும் ஆரம்பத்தில் அலட்சியப்படுத்திவிட்டு, பின்னால் காய்ச்சல், தாடையில் வீக்கம், சாப்பிட இயலாமை போன்ற அவதிகள் வந்த பின்னர் மருத்துவரை அணுகுகிறார்கள். இது தவறு.

பல்வலியை ஆரம்பத்திலேயே கவனித்துவிட்டால் குறிப்பிட்ட சில ஊசி, மருந்துகளால் பல்லை எடுக்காமல் குணமாக்க முடியும். காலம் தாழ்த்திக் கவனித்தால் பல்லையே எடுக்க வேண்டியது வரும். அது மட்டுமா? பல்லின் பல்ப் பகுதியை அடைந்த பாக்டீரியாக் கிருமிகள் இரத்தக் குழாய் வழியாக, உடம்பின் மற்றப் பகுதிகளை அடைந்து, தொண்டைவலி, மூட்டு வலி, தலைவலி, போன்ற அவஸ்தைகளை உண்டாக்கும்.

இவ்வளவு அவஸ்தைகள் நமக்கு அவசியமா? பல் போனால் சொல் போகும்; அழகு கெடும். அதனால், பல்வலியை ஆரம்பத்திலேயே கவனித்து விடலாம் இல்லையா?

அது சரி, டாக்டர்! பல்வலியே வராமல் தடுக்க வழிமுறைகள் இல்லையா? என்று சில குழந்தைகள் கேட்பது என் காதில் விழுகிறது. பற்களைப் பாதுகாக்கக் கூடிய அந்த சுகாதார முறைகளைச் சொன்னால்தானே இக்கட்டுரை நிறைவு பெறும்!

சொல்கிறேன், கேளுங்கள்:

— பற்களை எப்போதும் சுத்தமாக வைத்திருங்கள். காலையில் எழுந்ததும் பற்களைத் துலக்குங்கள். இரவில்

படுக்கச் செல்லும் போதும் பற்களைத் துலக்குங்கள். முடிந்தால் காலை, மதியம், இரவு மூன்று வேளைகளிலும் சாப்பிட்டு முடிந்த பிறகு, பற்களைத் துலக்கலாம். குறைந்தது சாப்பிட்டு முடித்த ஒவ்வொரு முறையும் தண்ணீரால் வாயைக் கொப்புளிக்க வேண்டும்.

— விரல்களால் பல் துலக்கக் கூடாது. வேப்பங்குச்சியால் பல் துலக்குவதில் தப்பில்லை. அதன் கசப்புச் சாறு எச்சிலை அதிகமாகச் சுரக்கச்செய்துவாயைச்சுத்தப்படுத்துகிறது. அதோடு கிருமிகளை எதிர்க்கும் சக்தியும் அதிகரிக்கிறது.

— விஞ்ஞான முறைப்படி பற்களைத் துலக்க வேண்டுமானால், தரம் வாய்ந்த டூத்—பிரஷையும் டூத் பேஸ்ட்டையும் உபயோகிக்க வேண்டும். மேல் தாடையில் உள்ள பற்களை கீழ் நோக்கியும், கீழ் தாடையில் உள்ள பற்களை மேல் நோக்கியும் துலக்க வேண்டும். பற்களின் வெட்டும் பரப்புகளை பிரஷால் முன்னும் பின்னும் துலக்க வேண்டும். பிரஷ் கொண்டு பல் துலக்கும்போது ஈறுகள் சேதமடையாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

— பற்களைக் கெடுப்பது பற்களுக்கிடையேசிக்கிக்கொள்கின்றஉணவுத்துகள்கள்தான். இவற்றை அப்புறப்படுத்தும் வகையில் சாப்பிட்ட பின் ஏதாவது ஒரு பழம் சாப்பிடுவது நல்லது. பழங்கள் எச்சிலை அதிகமாகச் சுரக்கச் செய்து வாயைச் சுத்தமாக்கும்.இதேமாதிரியேகாரட்,வெள்ளரிக்காய் போன்றவற்றையும் சாப்பிடலாம். இவை சிக்கியுள்ள உணவுத் துண்டுகளை அப்புறப்படுத்தி, பற்களை சுத்தமாக வைத்திருக்கும்.

— சொத்தைப் பல் விழுவதற்கு முக்கியமான காரணம் குழந்தைகள் இனிப்புப் பண்டங்களை அதிகமாக சாப்பிடுவதுதான். எனவே, வெல்லத்தில் தயாரிக்கப்பட்ட தின்பண்டங்கள், சர்க்கரை, சாக்லேட், சூயிங்கம் போன்றவற்றை ஓரளவுதான் சாப்பிடலாம். அதிலும், சாப்பாடு சாப்பிட்ட பின் கண்டிப்பாக இனிப்பைச் சாப்பிடக் கூடாது.

— வாய் நாற்றமெடுப்பதற்கும், பல் ஈறுகளிலிருந்து இரத்தம் வடிவதற்கும் காரணம் பற்கள் சுத்தமாக இல்லாததுதான். இதை அறியாதசிலர் லவங்கம்,சீரகம்,மற்றும்சிலவாசனைப் பொருட்களை மென்றால் வாய் நாற்றம் போய் விடும் என்று எண்ணுகின்றனர்.

— பற்கள் முன்னேக்கி வருவதற்குக்காரணம்குழந்தைப்பருவத்தில் விரல் சூப்பும் பழக்கமும், பல்லிடுக்கில் நாக்கை வெளியே தள்ளும் பழக்கமும் சிலருக்கு இருப்பதனால்தான். எனவே ஆரம்பத்திலேயே இம்மாதிரியான கெட்ட பழக்கங்களைத் தவிர்த்து விட வேண்டும்.

— சிகரெட், புகையிலை, வெற்றிலை போன்றவை பற்களுக்கு நல்லதல்ல. ஆகையால் புகை பிடிப்பதையும் புகையிலை போடுவதையும் தவிர்க்க வேண்டும்.

— பற்களும்,ஈறுகளும்வலுவுள்ளதாக இருந்தால்தான் பற்கள் நீண்ட காலத்திற்கு விழாமலிருக்கும். அதற்கு கால்சியம் மற்றும் புரோட்டீன் சத்துக்கள் உள்ள உணவு வகைகளை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.மைதா,.கோதுமை,கம்பு போன்ற தானியவகைகளையும்சேர்த்துக்கொள்வது நல்லது.


— பற்களில் சேரும் காரையை உடனுக்குடன் டாக்டரின் ஆலோசனையுடன் அப்புறப்படுத்தி விட வேண்டும். பல்லில் அடிபட்டால் பல் உடைந்தாலும், உடையாவிட்டாலும் டாக்டரிடம் காண்பிக்க வேண்டும். காரணம் அடிபட்ட பல்லுக்கு ஆறு வாரத்தில் இரத்தம் நின்று போக வாய்ப்பிருக்கிறது.


— வருடத்திற்கு ஒரு முறையாவது பல் டாக்டரை சந்தித்து நம் பற்களின் ஆரோக்கியத்தை சரி செய்து கொள்ள வேண்டும்.

இத்தனை தடுப்பு முறைகளையும்மேற்கொண்டால், உங்கள் பற்கள் அழகாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

''விடியற்காலை நமக்கு எவ்வளவு குளிருது.....! அதாம்பா..... செடிக்கு துண்டு கட்டிவிட்டேன்....!''

— பவித்ரா.





இராமராஜ்யம்

ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

காந்தியடிகள் இராமராஜ்யம் திரும்பவும் பாரத நாட்டில் வரவேண்டும் என்று ஆசைப்பட்டார். இராமராஜ்யத்தில் ஏழைகளே இல்லை. அனைவரும் எல்லாம் பெற்று விளங்கினர்கள். இராம பிரான் எல்லோரையும் அவ்வாறே சிருஷ்டித்து விட்டாரா? இல்லை.

அதற்கான சாத்தியக் கூறுகளை நாம் ஆராய்ந்தால், காரணங்கள் எளிதில் புலப்படும். நாம் ஆராயக்கூடத் தேவையில்லை. காந்தி அடிகளே அவைகளை விளக்கி இருக்கிறார். அவைகளை வரிசையாகக் காண்போம்:

நம்மைச் சுற்றி இருப்பவர்களை நம் சகோதரர்களாகக் கருத வேண்டும். எங்கும் அமைதி நிலவ வேண்டும். எங்கும் அமைதி நிலவ ஒவ்வொருவரிடமும் சகோதர மனப்பான்மையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

சகோதர மனப்பான்மைக்கு ஒவ்வொருவரிடமும் அன்பு உள்ளம் இருக்க வேண்டும். அன்பு என்பது செயலில்தான் தெரியும். சேவை மனப்பான்மையால்தான் அன்பை மதிப்பிட முடியும். கண்ணப்பர் இறைவனை காளத்திநாதருடைய கண்களில் இரத்தத்தைக் கண்டவுடன் தம் வலக் கண்ணைத் தோண்டி எடுத்தார். 'கண்ணப்பர் ஒப்பதோர் அன்பைக் கண்டதில்லை' என்று மாணிக்க வாசகர் கண் கலங்கக் கூறினர். எனவே, சேவை மனப்பான்மை அன்புள்ளத்தில் குடி கொண்டிருக்கிறது என்பதையும் அதையும் செயலில்தான் காண முடியும் என்பதையும் நாம் அறிகிறோம்.

பக்கத்து வீட்டுக்காரன் பட்டினி இருக்கும்போது நாம் கடவுளுக்குச் சேவை செய்தால் அதைக் கடவுள் ஏற்றுக் கொள்ள மாட்டார். பொருளைக் கடவுளின் அருளாகப் பெற்று, பிறருக்கும் கிடைக்கும்படி செய்வதுதான் யாகத்தின் தத்துவம். அதைச் செய்யாதவன் தவறு செய்கிறான் என்று கண்ணபிரான் கீதையில் கூறுகிறார்.

மிகவும் தேவை உள்ளவர்களுக்குச் சேவை செய்வது, கடவுளுக்குச் சேவை செய்வது போன்றதாகும்.

ஏழைகளுக்கும், கஷ்டப்படுகிறவர்களுக்கும் உதவும்படியாக நம் சேவை பயன்பட வேண்டும். எந்த வழியில் அல்லது எந்தத் தொழிலின் வழியாக அவர்களுக்கு உதவி செய்ய முடியும் என்பதைச் சிந்தித்து உதவி செய்ய வேண்டும். சென்ற ஆண்டு படித்த நூல்களைப் பத்திரமாக வைத்திருந்து ஏழைப் பிள்ளைகளுக்குக் கொடுத்து உதவலாம். புத்தக வங்கி ஒன்றைத் துவக்கி வசதி உள்ளவர்களிடமிருந்து நூல்களையும் பொருட்களையும் வாங்கி உதவி செய்யலாம். தேவை இல்லாத செலவுகளைக் குறைத்துக்கொண்டு அந்தப் பணத்தின் மூலமாகச் சீருடை போன்றவற்றை வாங்கிக் கொடுக்க


லாம். ஏழைகளுடைய கஷ்டங்களை நீக்க முடியாவிட்டாலும் குறைக்க முயற்சி செய்யலாம்.

எல்லா மனிதர்களும் கடவுளுடைய குழந்தைகள். ஆகவே, அவர்கள் சமமானவர்கள்; சகோதர சகோதரிகள். அவர்களுக்குத் தொண்டு செய்ய நாம் கடமைப்பட்டிருக்கிறோம். நாம் ஒவ்வொருவரும் ஏதாவது ஒருவகையில் குறையுள்ளவர்களே. அதனால், நாம் நம்முடைய குறைகளுக்காகப் பிறரைச் சார்ந்திருக்கிறோமே, அது போல ஏழைகளும் கஷ்டப்படுகிறவர்களும் நம்மைச் சார்ந்திருந்தாலும், சார்ந்திருக்கா விட்டாலும் அவர்களுக்கு உதவ நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஏனெனில் நாம் அனைவரிடமும் அன்பாக இருந்தால், அனைவரும் நம்மிடம் அதிக அன்பாக இருப்பார்கள். நாம் முயன்று தொண்டு செய்தால், நம் தலைமுறைகள் இராமராஜ்யத்தைக் காண முடியும். கடவுள் அதற்குத் துணை செய்வார்.

பாரதியார்:

உயிர்களிடத்தில் அன்பு வேணும்—
தெய்வம்
உண்மையென்றுதானறிதல்வேணும்
வயிரமுடைய நெஞ்சு வேணும்—
இது
வாழும் முறைமையடி பாப்பா.



'கல,கல' வென்றே குழந்தைகள் போலே
காடும் மேடும் ஓடும் விரைவாய்.
'சல,சல' வென்றே பாடும் ஆற்றில்
'சர,சர' வென்றே சாடும் மீன்கள்!

நடையில் அழகிய நடனம் காட்டும்;
நாளும் மக்கள் தாகம் தீர்க்கும்!
இடையில் நெல்லின் ஏக்கம் போக்கும்!
என்றும் நாட்டின் செல்வம் பெருக்கும்!

சுழித்து எங்கும் கல்லும் மண்ணும்
சுருட்டிக் கொண்டே வளைந்து ஓடும்!
வழியில் மக்கள் குளிக்க உதவும்!
முடிவில் கடலில் தானும் குளிக்கும்!

கடலின் நீரே ஆவி யாகும்;
காற்றில் உயர்ந்தே வானம் செல்லும்;
உடலும் சுருத்து மேகம் ஆகும்;
உயர்ந்த மலையில் மழையாய்ப் பெய்யும்!

மழையே மீண்டும் ஆறாய் ஓடும்.
மண்ணில் உயிர்கள் செழிக்கப் பாயும்!
குழைந்து மக்கள் மடியும் உலகில்
மரணம் இன்றி வாழும் என்றும்!

தி. பட்சிராஜன்

புதிய புத்தகங்கள்



பூந்தோட்டம்

— கலைமாமணி திருச்சி பாரதன்

கற்பனை நயத்துடன் கூடிய அற்புதமான பல பாடல்களுடன் காந்தி மகான் எப்படி வள்ளுவர் காட்டிய வழியிலே வாழ்ந்தார் என்பதை விளக்கும் பல பாடல்களும், 'புதையல்கள்' என்ற தலைப்பில் இருபது பாடல்களும் உள்ளன. திருக்குறளைக் கற்க இது ஒரு சிறந்த பயிற்சி. தெய்வ பக்தியையும் தேச பக்தியையும் ஊட்டும் பாடல்களையும், சுவை மிகுந்த கதைப் பாடல்களையும் இப்புத்தகத்தில் காணலாம். கலைமாமணி திருச்சி பாரதன் சிறு வயது முதல் எழுதிய 150 பாடல்களின் தொகுப்பு.

வெளியிட்டோர்: சரவணா பிரசுரம், 2497 தெற்குராஜவீதி, புதுக்கோட்டை — 622 001. விலை ரூ. 19/—



பீம்புஸ்ஸி — 'வான்முகில்'

திப்பிலிராஜா ஆசிரியரின் கற்பனை ராஜாதான்; இந்த ராஜாவின் வேடிக்கையான, விநோதமான, விசித்திரமான நடவடிக்கைகளைப் படித்து வயிறு குலுங்கச் சிரித்தவர்கள் 'கோகுலம்' வாசகர்கள். இப்புத்தகத்தில், திப்பிலி ராஜாவின் ஒன்பது திருவிளையாடல்களைப் புதுமையான முறையில் வரிக்கு வரி சிரிக்கும்படி தந்திருக்கிறார் வான்முகில். தமிழில் குழந்தைகளுக்கேற்ற நகைச்சுவைக் கதைகள் மிகக் குறைவு. அக்குறையை ஓரளவாவது இப்புத்தகம் நீக்கும் என நம்பலாம்.

வெளியிட்டோர்: ஜான்சி பதிப்பகம், 19/1, பொன்னப்பன் தெரு, வியாசர்பாடி, சென்னை — 39, விலை ரூ. 9/—

தந்தையும் மகளும் — பொ. திருகூடசுந்தரம் (விஞ்ஞானக் கேள்வி பதில்கள்)

நட்சத்திரம் புள்ளி போல் தெரிவது ஏன்?

ஐஸ் உருகுவது ஏன்?



மெர்க்குரி விளக்கு எரிவது எப்படி?

சுருட்டிய கடுதாசி சுலபமாகக் கீழே வருவது ஏன்?

நீரைக் கொண்டு நெருப்பைப் பற்ற வைக்க முடியுமா?

— இப்படி 209 கேள்விகளுக்கு விளக்கமான விடை தந்திருக்கிறார் ஆசிரியர். உள்ளே 22 விளக்கப்படங்களும் உள்ளன. விஞ்ஞான அறிவை வளர்த்துக் கொள்ள விரும்புகிறவர்களுக்கு இது பெரிதும் உதவக் கூடிய நூல்.


வெளியிட்டோர்: பாரதி பதிப்பகம், 108, உஸ்மான் ரோடு, சென்னை — 17. விலை ரூ. 13.25.


கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் பட்டியல் – தொடர்ச்சி

3437 மு. சசிகுமார், 10, நர்ஸஸ் குடியிருப்பு, கோட்டக்கரை, கும்மிடிப்பூண்டி – 601 201.
3438 வை. ஸ்ரீகுமார், 34, பாலு முதலி தெரு, சென்னை – 21.
3439 S. S. சுப்ரமணி, S/o. S. S. S. சீனிவாசன், தெற்கு தெரு, தேவாரம் – 626 530.
3440 S. ஸ்வர்ண விஜயா, 95, வள்ளுவர் நகர், தர்மபுரி – 636 705.
3441 க. சியாமளா, 5 E, காந்தி நகர், நாமக்கல் – 637 002.
3442 M. ராஜேஷ், 50, புதுத் தெரு, கரூர்.
3443 K. சரவணன், 9, P. A. P. காலனி, நேரு வீதி, உடுமலைப்பேட்டை – 642 126.
3444 B. லதா, D/o. ஏ. ஏ. பாலசுப்பிரமணியன், ஜி – 4, ஹவுசிங் யூனிட், கவுண்டம் பாளையம், கோவை – 641 030.
3445 S. பாலமுருகன், 18 A. அக்கசாலைப் பிள்ளையார் கோவில் தெரு, தெற்கு வாசல், சின்னக்கடை வீதி, மதுரை – 625 001.
3446 ப. சதிஷ் சந்தர், S/o. பசுபதி, குயவன் தெரு, கபிஸ்தலம், தஞ்சை மாவட்டம்.
3447 இ. சுமதி, 25, எடத்தெரு, திருவானைக்கோவில், திருச்சி – 620 005.
3448 மு. சண்முகசுந்தரம், 22, முடுக்குத் தெரு, மடப்புரம், திருவாரூர்.
3449 V. Ananthavalli, C/o. N. Viswanathan, (Officer, Indian Bank) 1/62, Double Street, Valadi, – 621218.
3450 க. ப. சிவா, S/o. க. பரமசிவன், 24, எழில் நகர், திருநெல்வேலி – 627 007.
3451 S. பாலசுப்பிரமணியன், அமராவதி நிலையம், உச்சிநத்தம், பெருநாழி (வழி) முதுகளத்தூர் (தாலுகா)
3452 S. R. குப்புச்சாமி, சிரங்க கவுண்டன்புதூர், நல்லாம்பாளையம், P. O. பெரியார் மாவட்டம்.
3453 T. சுப்பிரமணியன், பிளாட் எண். 7, கணேஷ் நகர், திருச்சி – 21.
3454 R. குமார், S/o. A. ரங்கராஜு, பாவலரடி தெரு, தொட்டியம், திருச்சி மாவட்டம்.
3455 தே. உப்பிலி சீனிவாசன், S/o. தேசிகாச்சாரி, கோட்டூர் (P. O.) மன்னார்குடி தாலுகா, திருத்துறைப்பூண்டி (வழி) – 614 708.
3456 R. ஸ்ரீனிவாச கிருஷ்ணன், அக்ரஹாரம், கோட்டூர், – 614 708.
3457 G. கவிதா, பெருமாள் கோவில் தெரு, கோட்டூர் – 614 708.
3458 S. மணி, 16, தெற்கு மாட விளாகம், திருவாரூர் – 610 002.
3459 மு. மறைமணி, 6/1247, விஜய மண்டபத் தெரு, எம். சாவடி, தஞ்சாவூர் – 613 001.
3460 K. பத்மா, D/o. N. கனகசபாபதி, பால நிலையம், ஆரல்வாய்மொழி.
3461 ஆனந்த், ஆனந்தபவன், E.B. ஆபீஸ், எதிர்ப்புறம், திருநெல்வேலி – 11.
3462 பா. இராம. நாராயணன், 18, ஆபீஸ் எதிர்ப்புறம், திருநெல்வேலி – 11.
3463 S. V. வீரராகவன், 23, பாலகிருஷ்ண நாயக்கர் தெரு (பிரிவு) மேற்கு மாம்பலம், சென்னை – 600 033.
3464 K. ஜெய செந்தில்நாதன், C/o பூமா, கல்லம நாயக்கர் பட்டி, (வழி) வெம்பக் கோட்டை – 626 131.
3465 இ. முரளி, எண். 4, காமாட்சி ராவ் தெரு, படேல் நகர், மேற்கு தாம்பரம், சென்னை – 600 045.
3466 நா. இராமசுப்பிரமணியன், 27, பாஷ்யம் நகர், குரோம்பேட்டை, சென்னை – 600 044.
3467 N. ஆனந்த், 24, செல்லியம்மன் கோயில் தெரு, திருக்கழுக்குன்றம் – 603 109.
3468 ரா. தேவி, C/o. R. ராமசந்திரன், 37, ஸ்டேட் பாங்க் காலனி, மாதவர்ம நெடுஞ் சாலை, பெரம்பூர், சென்னை – 11.
3469 R. Hema Malini, D 3, N. A. L. Colony, Bangalore – 560 017.
3470 B. ஜெயந்தி, D/o. P. பாலாஜி, 11, 12, கொசமடத் தெரு, திருவண்ணாமலை.
3471 K. லலிதா, D/o. P. கிருஷ்ணமூர்த்தி, 47 F. ஜக்கப்பன் கொட்டாய், கிருஷ்ணகிரி 635001.
3472 பா. அருள்மொழி நங்கை, 33D. முத்துராமலிங்கபுரம், சங்கரன்கோவில் – 627 756.
3473 நா. ஜெகன்மோகன் ராஜ், F – 41, R. B. I. குவார்டர்ஸ், கே. கே. நகர், சென்னை 600 078.
3474 V. R. Ragothaman, 39/9, Thalayari Maniyam St., Kagithapattarai, Vellore – 12 (N. A.)
3475 ஜி. பிரபாகர், 5, சக்கரபாணி தெரு, சத்தியாத் தோட்டம், சாலி கிராமம், சென்னை – 600 093.
3476 N. விஜயலட்சுமி, 84, லட்சுமி மில் காலனி, P. N. பாளையம், கோவை – 641 037
3477 வி. சதீஷ், 73, பேச்சியம்மன் படித்துறை, மதுரை – 1.

3478 R. தமிழ்ச்செல்வன், S/o. R. ராஜாராம், ஐங்குணம், காளிலாபாடி அஞ்சல், திருவண்ணாமலை தாலுகா — 606 611.
3479 G. நாகநந்தினி, D/o. G. ஞான அரசு, C 3/2, N. G. O. காலனி, சிங்கம்புணரி 624 502.
3480 ப. தமிழ்வேங்கை, H — 3, அரசினர் குடியிருப்பு, புதுச்சேரி — 605 008.
3481 S. சந்திரசேகரன், S/o. S. N. சிவக்கொழுந்து, 14 A, நாலாயிரம் தெரு, விழுப்புரம் — 605 602.
3482 G. பானுரேகா, 19, கிழக்குத் தெரு, சேலம் — 7.
3483 S. கருணாநிதி, S/o. சிரணி P. செந்தில், 22, ராமசாமி கோயில் சந்து, முக்கூடல் — 627 601.
3484 ச. மாரன், 92, தெய்வநாயகம் தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம் — 2.
3485 ரெ. முத்து வீரராஜன், 19, கூடலிங்க நாடார் தெரு, திருத்தங்கல் — 626 130.
3486 R. ஆரோக்கிய ஜெய், 25, கிருஷ்ணப்ப நாயகர் தெரு, சென்னை — 600 033.
3487 S. வானதி, 16/39 A, சண்முகா தியேட்டர் ரோடு, கோவை — 2.
3488 கி. சரசு, 5/55 — 3, ஆஸ்பத்திரி தெரு, வேளாங்கண்ணி — 611 111.
3489 S. P. ரமேஷ் பாபு, 43, ராமச்சந்திரன் தெரு, விருதுநகர்.
3490 ஆர். ராஜேஷ் கண்ணு, S/o. Dr. P. ரவீந்திரன், கண்ணு கிளினிக், புளியங்குடி — 627 855.
3491 S. சையத் அப்பாஸ், 84, மாரிமுத்து செட்டியார் காம்பவுண்டு, மேயர் முத்து ரோடு, சாத்தமங்கலம், மதுரை — 20.
3492 பா. ரமாபிரபா, D/o. இரா. பாலசுப்பிரமணியன், இளம்பொறியாளர், பொ. ப. து. "ஸ்ரீ லட்சுமி விலாஸ்," பாண்டியராஜா தெரு, பாரதி ரோடு, மதுரை — 19.
3493 N. முத்து சுப்பிரமணியன், S/o. S. B. நவநீதம், திருவாஞ்சியம் — 610 110. நன்னிலம் தாலுகா.
3494 K. சுப்பிரமணியன், C/o. S. கல்யாணசுந்தரம், போலகம் (P. O.) திருமருகல் (வழி) நன்னிலம் தாலுகா.
3495 P. S. பாரி பாண்டியன், S/o. V. P. சுந்தரபாண்டியன், 14 ஆ/3, வடக்கு பாரஸ்ட் ரோடு, பெரியகுளம், மதுரை மாவட்டம்.
3496 இரா. ஜெயதேவ், 1A, நாராயணப் பிள்ளை சந்து, பென்ஷனர் தெரு, திண்டுக்கல் 624 001.
3497 A. வெங்கடசுப்பிரமணியன், 70, சிவானந்தர் தெரு, பத்தமடை, — 627 453.
3498 A. சிவகணேச கார்த்திகேயன், 70, சிவானந்தர் தெரு, பத்தமடை — 627 453.
3499 இரா. புவனேஸ்வரி, த/பெ. பேராசிரியர் மா. இராமலிங்கம், பூம்புகார்ப் பேரவைக் கல்லூரி மேலையூர் — 609 107.
3500 V. ரத்தின சின்னையா, 13, மேலப் புதுத்தெரு, சிதம்பரம்.
3501 இரா. வைஷ்ணவி, 49, சீனிவாசபுரம், பட்டுக்கோட்டை.
3502 இரா. மகேஷ், S/o. K. ராமமூர்த்தி, 49, சீனிவாசபுரம், பட்டுக்கோட்டை.
3503 சுப. அழகப்பன், 14, முதல் வீதி, முத்துப்பட்டணம், காரைக்குடி — 623 001.
3504 சுப. இலக்குவன், 141, முதல் வீதி, முத்துப்பட்டணம், காரைக்குடி — 623 001.
3505 செ. சந்திரக்குமார், S/o. P. செல்லையா, நெ. 20, பாபு முதலி தெரு, வெள்ளாள தேனாம்பேட்டை, சென்னை — 86.
3506 பி. பி. மாதவன், 14, பவழக்காரத் தெரு, சென்னை — 1.
3507 சு. ஆனந்தகுமார், 10/10, சிவாஜி காலனி, தடாகம் ரோடு, கோவை — 25.
3508 M. கதிரவன், S/o. R. முத்துசாமி, 43, மீனாட்சி நகர், T. V. S. காலனி, சேலம் — 636 007.
3509 க. மு. ரியாத், S/o. R. காஜா மொஹைதீன், 3, மோசி கீரனார் வீதி, ஈரோடு — 1.
3510 G. ரமேஷ், D. 2. H ஹவுசிங் யூனிட், ரேஸ்கோர்ஸ், கோவை — 18.
3511 G. பார்த்தசாரதி, 11, மேல மாட வீதி, திருக்குறுங்குடி, நான்குநேரி, — 627 115.
3512 T. V. Balasubramanian, T. C. 40/97, Mini Cottage, Kuriathy, Trivandrum — 9.
3513 B. ஷண்முகப்பிரியா, 21, வடக்கு ராஜ தெரு, திருவள்ளூர், செங்கை மாவட்டம் 602 001.
3514 R. Kalaloganayaki, D/o. Ramakrishnan, 27, Theppakulam, First Lane, Tuticorin — 628 002.
3515 S. ரவீந்திரன், கோமு நகர், ரயில்வே ஸ்டேஷன் ரோடு, அயோத்தியா பட்டணம், சேலம் — 636 103.
3516 N. தேவி, 7/8, M. G. சக்ரபாணி தெரு, சத்தியா தோட்டம், சாலிகிராமம், சென்னை — 93.
3517 நா. வேங்கடேசன், 12, ஜோதி ராமலிங்கத் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை — 33.
3518 வெ. வித்யா, 146, சாயி நகர், விருகம்பாக்கம், சென்னை — 92.
3519 S. ஆனந்த், நெ. 2, T. H. ரோடு, 3 வது சந்து, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை — 600 021.
3520 ஆ. மோகன், அண்ணா நகர் காலனி, அமராவதி புதூர், போஸ்ட், காரைக்குடி வழி — 623 301.
3521 D. சுதா, D/o. R. M. துரைசாமி, 3/3/47, காளியம்மன் கோவில் தெரு, திருப்பத்தூர் 623 211.
3522 T. வெங்கிடசுவாமிநாதன், 175, கிழக்கு ரத வீதி, திண்டுக்கல்.
3523 ஆர். செண்பகப்பிரியா, 42, வடக்குத் தெரு, கல்தான்புரம், உடன்குடி, திருநெல்வேலி மாவட்டம் — 628 203.

(இன்னும் வரும்)


வைகையாற்றங்கரையில் திருவாதவூர் ஒரு சிறுகிராமம்...
நரிகள் பரிகள் ஆன கதை
கதை: ஆனந்தி
படம்: ஜானு
அங்கு வசித்து வந்தார் ஓர் அந்தணர். அவரை வாதவூரர் என்றே அழைப்பர். ஒரு நாள்...
ஐயா! தங்களை அரசர் அழைத்துவரச் சொன்னார்.
மன்னன் அரிமர்த்தன பாண்டியன் வரவேற்று...
வாதவூரரே தங்கள் ஞானமும் கல்வியும் என் செவிகளுக்கு எட்டியது. இந்நாட்டின் அமைச்சராக இருக்கக் கோருகிறேன்.
இறைவன் சித்தம் அதுவானால் சரி.
அமைச்சரானபோதிலும் வாதவூரரின் மனம் தத்துவ விசாரணையிலேயே ஈடுபட்டிருந்தது.
நான் யார்? என் உள்ளம் என்பது என்ன?



இறைவனை எண்ணி எண்ணி உருகிய அவர் உள்ளத்திலிருந்து கவிதைகள் பெருக்கெடுத்தன.
பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து நீ பாவியேனுடைய ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி....
ஒரு நாள் மன்னரைக் காண வந்த குதிரைப்படைத் தலைவன்.
அரசே! நம் குதிரைப்படையில் பல குதிரைகள் வயதாகி வலுவிழந்து விட்டன.
புதிய குதிரைகள் வாங்க ஏற்பாடு செய்கிறேன்.
அரசியைக் காண அந்தப்புரத்தை அடைந்தார் மன்னர்.
பிரபோ! வாதவூரர் எப்போதும் ஈசனையே நினைத்து உருகிக் கொண்டிருப்பதாக அறிகிறேன். அத்தகையவர் நல்ல மந்திரி ஆவாரா?
சிவநேசச் செல்வரை அமைச்சராக அடைந்திருப்பது நம் பாக்கியம்!... யார் அங்கே! வாதவூரரை நான் காண விரும்புகிறேன் என்று சொல்லுங்கள்!
வாதவூரர் வந்ததும்...
அமைச்சரே! கீழ்க்கடற்கரைப் பட்டினத்தில் அரபு நாட்டுக் குதிரைகள் வந்திறங்கும்...



நீங்கள் வேண்டிய அளவு பொன் கொண்டு சென்று உயர் ஜாதிப் புரவிகளை வாங்கி வர வேண்டும்.
அரசாங்கக் கருவூலத்தில் வேண்டிய பொன் எடுத்துக் கொண்டு கணக்கும் எழுதினார் வாதவூரார்.
கோயிலுக்குச் சென்று பிரார்த்தித்தார்....
ஆலவாய்க்குழகா! எடுத்த காரியம் சரிவாக நிறைவேற அருள் புரியவேணும்.
சிவிகை ஏற கோயில் வாசலுக்கு வந்தபோது ஒரு முதியவர் திருநீறு அளிக்க...
ஆகா! நல்ல நிமித்தம்!
அன்றே புறப்பட்டார் வாதவூரார்.
இடை வழியில்...
என்ன ஆயிற்று? ஏன் சிவிகை நின்று விட்டது?




திருக் கானப்பேர் மக்களின் வேண்டுகோள்...
சுவாமி! தாங்கள் சில நாள் இங்கு தங்கி எங்களைப் பெருமைப் படுத்த வேண்டும்.
அப்படியே ஆகட்டும்.
திருக் கானப்பேரில் கோயிலுக்குச் சென்றார் வாதவூரர்.
கானப்பேர் காளையைத் தரிசிக்கும் பாக்கியம் கிடைத்ததே!
திருப்பெருந்துறை என்ற ஊரை நெருங்கும் போது...
ஆகா! என் மனத்தை இந்தச் சோலையில் எழும் மறைஒலிகள் கவர்ந்திழுக்கின்றன.
சோலை மத்தியில் குருந்த மரத்தடியில் வேதம் ஓதிக் கொண் டிருக்கும் அந்தணரைக் கண்டார் வாதவூரர்.
குருபீடத்தில் அமர்ந்திருந் தவரை வணங்கினார்.
சுவாமி எனக்கு உபதேசிக்க வேண்டும்!



அந்தப் பெரியவர் ஐந்தெழுத்து மந்திரத்தை வாதவூரருக்கு உபதேசம் செய்தார்.
வாதவூரர் மனமுருகிப் பாடும் பாடல்களை மகிழ்ந்து கேட்டார் பெரியவரான மறையவர்.
வாதவூரரே! மணி மணியான வாசகங்களைப் பொழிந்து ஈசனைத் துதிக்கும் நீர் மாணிக்கவாசகர்!
தாம் வந்த காரியத்தை மறந்து பக்தி பரவசமானார் மாணிக்க வாசகர். ஈசனுக்குக் கோயில் எழுப்பினார்...
கோயில் எதிரே அடியார்கள் நீராட திருக்குளம் வெட்டுவோம்!
திருக்குளம் உருவாகியது...
இது முடிந்ததும் அன்ன தானம் நடக்க வேண்டும்!



உடன் வந்திருந்த காவலர்கள் மதுரைக்குத் திரும்பி அரிமர்த்தன பாண்டியனிடம்...
அரசே! குதிரைகள் வாங்கக் கொண்டு சென்ற பொன்னை யெல்லாம் வாதவூரர் கோயில் கட்டுவதிலும் குளம் வெட்டுவதிலும் செலவிட்டு விட்டார்!
என்ன அநியாயம்! ஓலை எழுதித் தருகிறேன். எனது ஆணையைக் காட்டி கையோடு வாதவூரரை அழைத்து வாருங்கள்!
அன்றிரவு அரிமர்த்தன பாண்டியன் அந்தப்புரத்தில்....
அரசி! நீ சொன்னது ஒரு வகையில் சரியாகி விடும் போலிருக்கிறது. நமது அமைச்சர்...
பழுத்த ஞானி, பரம பக்தர்!
உண்மை. ஆனால் அமைச்சராக இருக்கத் தகுதி படைத்தவரா என்று யோசிக்காமல் போனது என் குற்றம்.
அவரிடம் தயை காட்டுங்கள்
அரசு ஆணையை மீறியவரை நான் தண்டிக்காமல் எப்படி இருக்கமுடியும்?
ஈசன்தான் ஒரு வழி வகுக்க வேண்டும்.



மாணிக்க வாசகரின் மனைவி கணவரைத் தேடி திருப்பெருந்துறை சென்றார்.
சுவாமி! அரசர் கோபமாக இருக்கிறாராம். தலைநகர் திரும்புங்கள். பொன்னைத் திருப்பிக் கொடுத்து விடுங்கள்.
எல்லாம் இறைவனிடம் ஒப்படைத்து விட்டேனே!
மாணிக்க வாசகரின் பாடல்களைக் கேட்டு அவர் மனைவியும் பரம பக்தையானாள்... ஒருநாள்...
அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும் குன்றே அனையாய் என்னை ஆட் கொண்டபோதே கொண்டிலையோ? இன்று ஓர் இடையூறு எனக்குண்டோ எண்தோள் முக்கண் எம்மானே!
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே ஏற்றுயர் கொடி உடையாய்! எனை உடையாய்.
அப்போது அரச ஆணை வந்தது...
உம்மைக் கையோடு அழைத்துவர உத்தரவு!
ஈசனே! அரசனுக்கு என்ன பதில் கூறுவேன்?
அப்போது அசரீரி ஒலித்தது.
ஆவணி மூலத்தில் குதிரைகள் வரும். கோபுர வாசல் படியிலுள்ள மாணிக்கத்தை எடுத்துக் கொண்டு மதுரை செல்வீராக!



இறைவன் கட்டளையை ஏற்று மதுரை திரும்பினார் மாணிக்கவாசகர். அரச சபையில்...
வருக வருக... உயர்ந்த ஜாதிக் குதிரைகளுடன் வருவீர்கள் என்று எதிர்பார்த்தேன்!
மன்னவா! குதிரைகள் ஆவணி மூலத்தன்று வரும். இந்த அரிய மாணிக்கத்தைப் பரிசாகக் கொண்டு வந்தேன்.
மகிழ்ச்சி.
மன்னர் தனித்திருக்கும்போது ஒரு படைத் தலைவன்...
அரசே! கொண்டுபோன செல்வத்தையெல்லாம் வேறு விதத்தில் செலவு செய்து விட்டார் அமைச்சர். குதிரைகள் எங்கிருந்து வரும்? பொய் கூறுகிறார்!
மனம் மாறிய அரசன் கடுங்கோபம் கொண்டான்...
மாணிக்கவாசகரிடம் போய் அவர் கொண்டு சென்ற பொன்னைத் திரும்பக் கேளுங்கள். கொடுக்காவிட்டால் சிறையில் அடையுங்கள்!
சிறையில் வாடினார் மாணிக்க வாசகர்... வாடிய போதும் ஈசனை வணங்கினார்.
ஆரொடு நோகேன்? ஆர்க்கு எடுத்து உரைக்கேன்? ஆண்ட நீ அருளிலையானால்?


பெரியகல்லை அவர் தலை மீது சுமத்தி வெய்யிலில் நிற்க வைத்தார்கள்.
சுமை கனக்க வில்லையே! எல்லாம் இறைவன் அருள்.
சிவபெருமான் சிவ கணங்களை அழைத்தார். திருப்பெருந்துறையின் அருகில் காடுகளில் குடியிருந்த நரிகளைக் கூட்டினர்.
சிவ கணங்களே! இந்த நரிகளைப் பரிகளாக்கிக் கொண்டு கூடல் மாநகர் செல்வோம். நமது மாணிக்கத்துக்கு உதவுவோம்!
நரிகள் பரிகளாயின. சிவனும் கணங்களும் வீரர்களானார்கள்.
இந்த வெண்புரவி மீது நான் ஏறி வருகிறேன்; மற்றக் குதிரைகள் மீது நீங்கள் ஏறிக் கொண்டு பின் தொடருங்கள்.
தூதன் செய்திகொண்டு வந்தான். பரபரப்படைந்தான் பாண்டியன்.
... பல காத தூரத்தில் குதிரைகள் வந்து கொண்டிருக்கின்றன. மாலையில் மதுரையை அடைவார்கள்.
ஆ! மாணிக்கவாசகரை விடுதலை செய்து அழைத்து வாருங்கள்!
நகரை அலங்கரித்து குதிரைகளை வரவேற்கக் காத்திருந்தது தான் மிச்சம் ...
குதிரைகள் வரவில்லை. எங்குமே காணவில்லை.
ஐயோ! எனக்கு இப்படி ஒரு அமைச்சர் வந்து வாய்த்திரே! யாரை நோவது?


மாணிக்கவாசகர் மனமுருகிப் பிரார்த்தித்தார்...
அடியேன் உன் அடைக்கலமே...
ஆ! குளம்பொலி கேட்கிறது...
புழுதி கிளம்புகிறது...
குதிரைகள் வருகின்றன!
குதிரை வீரர்களின் தலைவன் கம்பீரமாக மன்னன் முன் வந்து...
அரசே! குதிரை சாஸ்திரம் படித்தவர்களைக் கொண்டு பரிகளைப் பரிசோதித்துக் கொள்ளுங்கள்...
குதிரை வீரர்கள் பல வித்தைகளைச் செய்து காட்டினர்.
ஆ! இத்தனை சிறந்த குதிரைகளை நான் கண்டதேயில்லை!
குதிரைக்காரர்களின் தலைவனுக்குப் பட்டுப் பரிவட்டம் கட்டினார் மன்னர்.
மிக்க மகிழ்ச்சி; சென்று வாருங்கள்.


அன்றிரவு நகரத்தில் குதிரை லாயங்களில் கட்டி வைக்கப் பட்டிருந்த குதிரைகள்...
ஊள...
ஊள...
ஊள...
இதென்ன குதிரைகள் நரிகள் போல் ஊளையிடுகின்றன!
திடீரென்று குதிரை லாயங்களிலிருந்து ஆயிரக்கணக்கான நரிகள் வெளியே ஓடின. காவலர்கள் திகைத்தனர்.
ஆ!
குதிரைப்படைத் தலைவன் விரைந்து...
மன்னவா! மோசம் போனோம்! பரிகள் நரிகளாகி ஓட்டம் பிடித்தன!
வாதவூரனைச் சிறையில் அடையுங்கள்! மாயா ஜாலக்காரன்!
மாணிக்கவாசகர் மறுபடி சிறைப்பட்டார்.
ஈசனே! ஏன் என்னை இப்படி சோதிக்கிறீர்கள்?
வானமே பொத்துக்கொண்டதுபோல் மழை பொழியத் தொடங்கியது...


பொழுது புலர வைகையில் வெள்ளம் கரை உடைத்துக் கொண்டு மதுரைக்குள் புகுந்தது...
ஐயோ! காப்பாற்றுவார் இல்லையா?
அரசன் ஆணை பிறந்தது...
வைகைக்குக் கரை அடைக்க வீட்டுக்கு ஒரு ஆண்பிள்ளை உடனே வரவேண்டும்!
அந்நகரில் பிட்டு செய்து விற்கும் கிழவி ஒருத்தி...
கடவுளே! ஆபத்துக் காலத்தில் அரசனுக்கு உதவ எனக்கு ஒரு மகன் இல்லையே!
கிழவி நதிக்கரை சென்றாள்...
சுறுசுறுப்பாகத்தான் வேலை நடக்குது. வைகைக் கரையை உசத்தருங்க...
ஒரு கூலி ஆள் கிடைத்தால் கூட என் பங்கு வேலையைச் செய்யச் சொல்லலாம்...ம்....




குடிசைக்குத் திரும்பி பிட்டு சுட்டாள் கிழவி... அப்போது...
மண்ணெடுப்பேன், கரைவைப்பேன் வைப்பீரோ கூலி ஆளாய்?
அப்பனே! எனக்காக நீ போய் வைகைக் கரை அடைக்க உதவுகிறாயா?
கூலி என்ன தருவாய்?
உதிர்ந்துபோகிற பிட்டெல்லாம் உனக்குத்தான் ... சரியா?
முதலில் அதைக் கொடு. தின்றுவிட்டுக் கரை அடைக்கப் போகிறேன். ரொம்பப் பசி!
கிழவி கணக்காயரிடம் வந்து...
சாமி! எனக்காக இவன் கரையடைப்பான்.
சரி, எழுதிக் கொள்கிறேன்.



இளம் கூலிக்காரன் வெள்ளத்தில் குதித்து நீந்தி விளையாடினான்...
வேலை செய்பவர்களை வம்புக் கிழுத்தான்....
என்ன? உனக்கு மட்டும் சலுகையோ! குறைச்சலா மண் சுமக்கிறே?
ஏம்பா! உன்னைப் பார்த்தா வாட்ட சாட்டமா இருக்கிறே... வேலை செய்யாம எங்க வேலையையும் கெடுக்கிறே... எங்கிருந்து வரே?
அதை ஏன் கேக்கிறிய? என் கதையைச் சொல்லட்டுமா? வெள்ளி மலைதான் என் தேசம்... நான் ரெண்டு பெண்டாட்டிக்காரன்...
என் பிள்ளைகள் முந்திரிக்கொட்டைகள்! கணபதி எல்லாக் காரியத்துக்கும் எனக்கு முன்னேபோய் உட்கார்ந்துக்கிறான்...


வேலவன் எனக்கே புத்தி சொல்லுகிறான். .. ஒண்ணும் பிடிக்காமே தேசாந்திரம் கிளம்பிவிட்டேன்... பசியாற இந்த வேலை செய்யறேன்...
சரி, சரி, வேலையைப் பாரு. பேசிட்டிருந்தா அடி விழும்...
அரிமர்த்தன பாண்டியன் கரை அடைக்கும் பணியைப் பார்க்க வந்தார்....
ஆ! அங்கு ஏன் இன்னும் கரை கட்டவில்லை?
பிட்டுக்கு மண் சுமந்து ஒரு கூலி ஆள் வந்தான். அவன் ஒரு காரியமும் சரியாய்ச் செய்வதில்லை. அதோ பாருங்கள்! தூங்குகிறான்!
எழுப்பி இழுத்து வா, அவனை!
தங்கப்பிடி போட்ட பிரம்பினால் அந்தக் கூலிக்காரனைக் கோபத்தில் அடித்தார் மன்னர்...
அந்த அடி மன்னன் உள்பட உலகில் அத்தனை ஜீவராசிகள் மீதும் விழுந்தது!
ஆ!
ஐயோ!
அம்மா!
கடவுளே!
கூலிக்காரன் மண் வெட்டியால் ஒரே ஒரு தடவை மண் அள்ளிப் போடவும் வெள்ளம் வடிந்து கரை சீர்ப்பட்டது.
இது என்ன ஆச்சரியம்!



அடுத்த கணம் கூலி ஆள் மறைந்தான்! மன்னர் புரிந்து கொண்டார்.
ஈசனைப் பிரம்பால் அடித்தேனே! எனக்கு மன்னிப்பு உண்டா?
அசரீரி ஒலித்தது.
அரசே! வருந்தவேண்டாம். மாணிக்க வாசகனுக்காகவே நரியைப் பரியாக்கியும் வைகையில் நீர் பெருக்கியும் பிட்டுக்கு மண் சுமந்தும் விளையாடினேம்!
மாணிக்கவாசகரை விடுவித்து வணங்கினார் மன்னர்.
என்னை மன்னிக்க வேண்டும்.
ஈசனே என்னை ஆட்கொள்ள அடி பட்டாயா!
மாணிக்கவாசகர் தல யாத்திரை புரிந்து தில்லையை அடைய நடராஜப் பெருமானே அந்தணராகத் தோன்றி...
அடிகளே! தாங்கள் பாடியுள்ள பாடல்களை நான் எழுதுகிறேன்.....
தமது திருவாசகம் திருச்சிற்றம் பலக் கோவையார் ஆகிய இரண்டையும் ஈசனே எழுதும் பாக்கியம் பெற்றார் மாணிக்க வாசகர்.
வாதவூரன் விளம்பிட அம்பலவன் எழுதியது — திருச்சிற்றம்பலம் உடையார்.

சித்திரப் புதிர்! - 12

ஆழி



1

இந்த இந்திய நடனத்தின் பெயர் என்ன தெரியுமா?

16, 17, 18, 19, 20, 21, 22, 23, 24


2

இந்த 9 எண்களில், தொடர்ந்த 5 எண்களைக் கூட்டினால் 100 வர வேண்டும். எந்த 5 எண்களைக் கூட்ட வேண்டும்?




4

நிற்கும் பாவத்தைக் கொண்டு சொல்லுங்கள்— இந்தத் தெய்வத்தின் பெயரை.



3

தென் அமெரிக்காவில் இந்தப் பிராணி கழுதை மாதிரிப் பொதி சுமக்கும். இதன் பெயர் என்ன என்று சொல்லலாமா?



5

இந்த நான்கு வண்ணத்துப் பூச்சிகளில் எது, எந்த வழியாகச் சென்றால் நடுவில் உள்ள மலரை அடையலாம்?

விடை - 75 ஆம் பக்கம்

பிருந்தாவனம்

கற்பனைக் குதிரை


"நானும் ரொம்ப நாளாவே கதை எழுதணும்னு நினைச்சுக் கற்பனைக் குதிரையைத் தட்டி விட்டேன்."

"கதை வந்திடிச்சா?"

"இல்லே. குதிரை வெறிச்சு ஓடி என்னை விழுத்தாட்டிடுச்சு."

— ஜி. கௌதமன் (12580),
வலையபட்டி.





பணக்கார நாடு

"அப்பா, நம்ப நாடு பணக்கார நாடுதான். இல்லையா?"

"ஏண்டா அப்படிக் கேட்கிறாய்?"

"தேர்தலிலே நிற்கிறவங்களெல்லாம், "உங்க பொன்னான வாக்குகளை எங்களுக்கே போடுங்கன்னு கேக்கிறாங்களே, அவ்வளவு வாக்குச் சீட்டுகளையும் எப்படித்தான் பொன்னுலே அச்சிடுறாங்களோ! நம்ம நாடு பணக்கார நாடா இருந்தாத்தானே அது முடியும்?

— ஆர். சசி (5593), காரைக்குடி.

யாருடைய புனைப் பெயர்கள்


கர்நாடகம்
லாங்கூலன்
தமிழ்மகன்
விவசாயி
இதைச் தேனீ
யமன்
ரா.கி.
அகஸ்தியர்

— எல்லாமே கல்கி ரா. கிருஷ்ண மூர்த்தி அவர்களின் புனைபெயர்களே.

— அரு. ஆனந்த் (421), காரைக்குடி.



வனவிலங்கு சரணாலயங்கள்



இந்தியாவில் 211 வனவிலங்கு சரணாலயங்கள் உள்ளன. இவற்றில் 7 பறவைகளுக்கான சரணாலயங்கள். முதலைகள் போன்றவற்றிற்கு 13 உள்ளன. எண்ணிக்கையில் மிக அதிகமாக உள்ளது இமாசலப் பிரதேசம். அங்கு 26ம், மத்தியப் பிரதேசத்தில் 22ம் பீகார், ஒரிசா மாநிலங்களில் 17ம் உள்ளன. இவை தவிர வனவிலங்குகள் பாதுகாக்கப்படும் 20 தேசியப் பூங்காக்களும் உள்ளன.

— கே. சுப்பிரமணி (10594),
இரட்டணை.



உடைந்த பானை

உடைந்து போன மண் பானையின் கழுத்து கீழே விழுந்து கிடந்தது. அவ் வழியே வந்த ஒருவன் அதை மிதிக்கப் போனான். "என்னை மிதிக்காதே!" என்று பானை கத்தியது.

"உனக்குத்தான் ஆயுட் காலம் முடிந்துவிட்டதே! உன்னை மிதித்தால் என்ன? உடைத்தால் என்ன?" என்று ஏளனமாகச் சிரித்துக் கொண்டே கேட்டான் அவன்.

"முன்பு நான் பானையாக இருந்தேன். இப்போது உடைந்திருக்கிறேன். மழையிலே நனைந்து விரைவிலே களி மண் ஆவேன். அப்புறம் மீண்டும் புதிய பானை! ஆனால் நீ....?"

பானையின் இந்தக் கேள்விக்கு என்ன பதில் கூறுவதென்று தெரியாமல், தலை குனிந்தபடி ஒதுங்கிச் சென்றான் வழிப் போக்கன்.

— சு. நாகராஜன் (10451),
தஞ்சாவூர்.

பொய் மான் கரடு

திருச்சி—சேலம் பாதையில் ஓரிடத்தில் மலையின் இடையே மான் தொங்குவது போல் நம் கண்ணுக்குத் தெரிகிறது. அருகில் சென்று பார்த்தால் ஒன்றுமில்லை. அதனால் இதை 'பொய் மான் கரடு' என்று கூறுகிறார்கள். 'கல்கி' அவர்கள் 'பொய் மான் கரடு' என்றுஒருபுத்தகமேஎழுதியிருக்கிறார்!



— இரா. பிரஸன்னா (10075),
சேலம்—1.

பெயர் வந்த காரணம்

இராமருக்குக் 'கோதண்டராமன்' என்ற பெயரும், அர்ச்சுனனுக்கு, 'காண்டீபன்' என்ற பெயரும் எப்படி வந்தன, தெரியுமா? இராமர் வைத்திருந்த வில்லுக்குக் 'கோதண்டம்' என்றும் அர்ச்சுனன் வைத்திருந்த வில்லுக்கு 'காண்டீபம்' என்றும் பெயர். எனவே அவர்கள் அந்த வில்லின் பெயர்களால் அழைக்கப்படுகிறார்கள்.

— வள்ளிதாசன் (10847),
இராஜபாளையம்.





பெண்களின் பெயர்கள்

பிப்ரவரி 86 இதழில் 'அந்தாதி' என்ற தலைப்பில் ஆண்களின் பெயர்களை வைத்து ஓர் உறுப்பினர் எழுதியிருந்தார். அதே போல் பெண்களின் பெயர்களை வைத்து எழுத முடியுமா என்றும் அவர் கேட்டிருந்தார். அதற்கு இதோ விடை:

ஹேமமாலினி
மாலினி தேவி
தேவி ஸ்ரீ
ஸ்ரீ தேவி
தேவிகா ராணி
ராணி ஜெயா
ஜெயசுதா
சுதாரங்கா
ரங்கநாயகி
நாயகி பிரபா
பிராபாவதி இந்திரா
இந்திரா காந்தி

— ஜி. எஸ். ஸ்டேன்லி மைக்கின் (12429), அழகப்பாபுரம், (குமரி மாவட்டம்.)



அப்பாவின் லாபம்

கல்வி அதிகாரி: உனக்குச் சத்துணவு, இலவசப் பாடப்புத்தகங்கள், சீருடை எல்லாம் இலவசமாகக் கிடைக்கின்றனவே, இதனால் உன் அப்பாவுக்கு அதிக லாபம்தானே?

மாணவன்: ஆமாம், இப்போது அவர் என் பெயரைச் சொல்லி அதிகம் குடிக்கிறார்!

— ப. விஜயகுமார் (241)
சென்னை—7.

புலவரின் புதிர்

பல தூண்கள் உள்ள ஒரு மண்டபத்தில் புலவர் ஒருவர் உட்கார்ந்திருந்தார். அப்போது, அந்தநாட்டுப்படைத் தளபதி அங்கு வந்து, "இந்தப் பக்கமாக ஒருவன் ஓடி வந்தானே! அவன் எங்கே?" என்று புலவரைப் பார்த்துக் கேட்டார்.

அவன் அங்கு மறைந்திருப்பது தெரிந்தும், புலவர் நேரடியாகக் கூறுமல், ஒரு புதிர் மூலம் பதிலளித்தார்:

1. முருகனது கடைசி முகம்?
2. வீட்டைத் தாங்குவது?
3. வேதத்தின் பெயர்?
4. வேடன் வைத்திருப்பது?"

"இந்தக் கேள்விகளுக்குப் பதில் கண்டுபிடித்தால், அவனையும் கண்டுபிடித்துவிடலாம்" என்ருர்.

விடை: 1. ஆறுவது; 2. தூண்; 3. மறை; 4. வில் (ஆறுவது தூண் மறைவில்)

— கி. பாலமுருகன் (7458), சீர்காழி.





மாணவர் கடமை பத்து

1. அறியாமை அகல ஆழ்ந்து படி.
2. ஐயம் நீங்க அளவிலா நூலைத் தேடு
3. பொறுப்பினைப் பெற பெற்றோரைப் பேணு.
4. அகிலத்தை அடக்க, ஆசிரியருக்கு அடங்கு.
5. சீருடை அணிந்து சிறப்புப் பணி செய்.
6. காலம் கணித்து, கடமை ஆற்று
7. தன்னம்பிக்கை கொள்ள தளராது உழை.
8. உடலை வலிவாக்க உடற்பயிற்சி ஓம்பு.
9. உள்ளத்தைப் பயன்படுத்த உணர்ச்சியை அடக்கு.
10. வளர்ச்சியைப் பெற கிளர்ச்சியை அடக்கு

— அ. அன்பரசு (2101), இடையார்பாளையம்.

நம்பிக்கை

இராமகிருஷ்ண பரமஹம்சர் சொல்கிருர்: நம்பிக்கை என்னதான் செய்யாது? மக்கள் கூறுகின்ற பழமொழி ஒன்று உண்டு. 'இராமநாமத்தில் தனக்கு இருந்த நம்பிக்கையின் மூலம் அனுமான் கடலைக் கடந்து மறு கரையை அடைந்துவிட்டார். ஆனுல் கடலைக் கடக்க இராமபிரானே, சேது ஒன்றைக் கட்ட வேண்டியதாயிற்று.' என்று அப்பழமொழி கூறுகிறது.

— விஜி (397), மதுரை—2.



களரிப்பயட்

'களரிப் பயட்' என்ற பயிற்சி பன்னெடுங்காலமாகப் பரசுராமர் காலத்திலிருந்து பயிற்றுவிக்கப்படும் ஒரு பயிற்சியாகும். இது தற்காப்புக்கும் உடல் வனப்புக்கும் தேகப் பயிற்சிக்கும் உரிய அற்புத முறை! சில சரித்திராசிரியர்கள் விவரிப்பது போல, இந்தப் போர்ப் பயிற்சி முறை பலவித முறைகளில், பெயர்களில் வேரூன்றியுள்ளது. கேரளத்தில்தான் 'களரிப் பயட்' கலப்படமில்லாது அந்தப் புனிதத்தோடு திகழ்கிறது. இந்தக் களரிப் பயட்டின் பல வடிவங்கள் கதகளி, கோல்களி, தெய்யம், பூராக்களி, வேளக் களி ஆகிய கலைகளில் உட்புகுந்துள்ளதைக் காணலாம்.

கேரள மண்ணின் சீதோஷ்ண நிலைமைக்கேற்ப பாதம் மசாஜ் என்று கூறப்படும். தேகத்தில் எண்ணெய் தடவிக் கொண்டு பயிற்சி செய்வது ஒரு விநோதக் காட்சி. பழங்காலங்களில் கேரள ராஜாக்களும் கிராமத் தலைவர்களும் இந்தக் களரிப் பயட் ஒவ்வொரு கேரள இளைஞனும் கட்டாயமாகக் கற்றுக் கொள்ள வேண்டியது என்று கூறி, அதன் வளர்ச்சிக்கான பணிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு கேரள இளைஞனும் கச்சை அணிந்து, கேடயத்தோடு வாள் சண்டை குச்சிச் சண்டை, முதலியவற்றைச் செய்து தேர்ந்திருக்கிறார்கள். இது கேரளத்தின் விளையாட்டு என்று சொன்னால் மிகையில்லை.

'களரிப்பயட்' அந்தப்பூர்விகமுறையில் ஜிம்னாசியக்கூடத்தில்குருக்களின் மேற்பார்வையில் செய்து வருவதைக் காணலாம். களரி என்றால் ஜிம்னாசியம்; பயட் என்றால் போர்க் கலை.

மெய்ப்பயட் — உடல் கட்டுப்பாடு பயிற்சிகள் :

களரியில் முதல் பயிற்சியாக மேற்கொள்ளுவது கால்களினால் பல்வகை திருப்பங்கள், குனிவுகள், நெளிவுகள் செய்து தேர்ச்சி பெறுவதாகும். ஒவ்வொரு பயிற்சியாளரும் குதிக்கும் போதும், கால்களை அசைக்கும் போதும் 'பாலன்ஸ்' கெடாமல் பார்த்துக் கொள்வார். இந்தப் பயிற்சியில் உடலின் பாகங்களான கால்கள், கைகள், கழுத்து, தேகம், தலை, இடுப்பு அனைத்தும் தொடர்ந்து இயங்க வேண்டியது அவசியம். இந்தப் பயிற்சியினால் தற்காப்புக்குரிய நுணுக்கங்களைக் கற்றுக் கொள்ளலாம். எந்த சாதகனும் மெய்ப்பாட்டிலுள்ள பன்னிரண்டு வழிமுறைகளைக் கற்றுக் கொண்டால் விளையாட்டுத் துறைகளில் விற்பன்னராகத் திகழலாம்.



பயிற்சியாளர் 'உழிச்சல்' என்று தேகத்தில் எண்ணெய் தடவித் தேகத்தை இளக்கிக் கொண்டு, தேக வளைவுக்கு வசதி செய்து கொள்வது அவசியம். குருக்களே தம் மாணவனுக்கு இந்த 'உழிச்சலை'ச் செய்து விடுவது வழக்கம். விசேஷமாகத் தயாரிக்கப்பட்ட தைலங்கள் இந்த உழிச்சலுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. பல உடல் நோய்களுக்குக்கூட இந்த 'உழிச்சல்' பயன்படும். ஆயுர்வேத வைத்திய முறை இந்தக் 'களரிப் பயட்'டில் பயன்படுத்தப்படுவதைக் கண்டறியலாம்.

கேட்டுக்காரி

களரிப்பயட் மாணவன் முதல் முதலாகப் பயன்படுத்தும் ஆயுதம், அவன் உயரமுள்ள பிரம்புக் கோல் ஆகும். நல்ல தரமுள்ள பிரம்புக் கோல் தேவை. இந்தக் கோலைப் பிடித்து, சக்தி வாய்ந்த தாக்குதலைத் தாங்குவதோடு, பலமான தாக்குதலையும் நடத்திப் பயிற்சி பெற வேண்டும். இந்தக் கேட்டுக்காரி பயிற்சியாளன் ஈட்டியைப் பயன்படுத்தும்வல்லுநனாகவும் திகழலாம். இந்தக் கேட்டுக்காரியில் பன்னிரண்டு வகைப் பயிற்சிகள் உள்ளன.

செருவட்டி

சிறிய கோல் கொண்டு பலத்தைச் சோதிக்கச் சண்டையிடுவதற்கு 'செருவட்டி' என்கிறார்கள். நல்ல பலமான சிறுதடி கொண்டு விரைவான தாக்குதல் நடத்தி, குனிந்து, குதித்து, வளைத்து அடித்துப் பயிற்சி செய்வார்கள். நல்ல திறமான செருவட்டி மாணவன், ஒரு நிமிஷத்தில் நூறு அடிகளைத் தாங்கும் வல்லமை படைத்தவன். இந்தப் பயிற்சி களரிப் பயட்டில் மிக அபாயகரமானதாகும்.

கட்டாரம் (கத்தி)

வாளை இழந்தவர் கத்தி ஏந்திப் போரிடுவது வழக்கம். பதினெட்டு அங்குலம் அகலமுள்ள கத்திகொண்டு தாக்கி தற்காத்துப் போரிடுவது மயிர்க்கூச்செரிய வைக்கும் காட்சியாகும். மின்னல் வேகத் தாக்குதலில் குதித்து, நெளிந்து பயங்கரமாகப் போரிடுவதை இருஇளைஞர்கள் காட்டும்போது திடுக்கிட வைத்தது.

குண்டுமணி



வாளும் கேடயமும்

வாளும் கேடயமும் கொண்டு போரிடும்போது பன்னிரண்டு வகை வழிமுறைகள் உள்ளன. வாள் கொண்டு தாக்குவதும் கேடயம் கொண்டு தற்காத்தலும் இந்தப் போரில் காணும் நிலைகள். உருமி ஆயுதங்கள் போரிடும்போது கணம் தப்பினாலும் அபாயம் அதிகம்.

குந்தம்

ஈட்டி கொண்டு போரிடுவது பயிற்சியாளர்கள் கேடயமில்லாமல் செய்வதாகும். ஆறு அடி உயரமுள்ள ஈட்டியைப் பயன்படுத்த நல்ல நீண்ட நாள் பயிற்சி தேவை.

கேரளத்தில் களரிப் பயட் ஒவ்வொரு கோயிலின் குளத்தருகே நடக்கும்காட்சியாக இருந்தது. அன்னியர் ஆக்கிரமிப்புக்குப் பிறகு இந்தக் கலை பொழுதுபோக்குக் கலையாக மாறிவிட்டது. கோட்டக்கல் கரைன் குருக்களும் அவரது மாணவர் நாராயணன் நாயரும் இந்தக் கலைக்குப் புத்துயிரூட்டினார்கள். இவரது அடிச்சுவட்டைப் பின்பற்றி ஸி.வி.என். களரி சங்கம் 1936 ஆம் ஆண்டில் திருவனந்தபுரம் கோட்டையிலுள்ள ஒரு ஜிம்னாசியக் கூடத்தில் நடை



பெற்றுவருகிறது. இப்பொழுது இந்தக் களரிப் பயட்டின் குரு வி.வி. கோவிந்தன் குட்டி நாயர்.

ஒருநாள் காலை ஆறரை மணிக்குக் கோட்டையிலுள்ள ஜிம்னேசியக் கூடத்துக்குச் சென்றேன். இளம் சிறுவனிலிருந்து இளைஞர்கள்வரை களரிப் பயட்டில் ஈடுபட்டிருந்தனர். இந்தக் கேரள இளைஞர்களிடையே சிசிலி என்ற பிரஞ்சு நடனப் பெண்ணும் பயிற்சி செய்து கொண்டிருந்தாள். மூன்று வருஷங்களாக சிசிலி இந்தக் களரிப் பயட்டில் தேர்ச்சி பெற்று வருகிறாள். பாரீஸில் இந்தியன் தியேட்டர் மண்டபத்தில் சிசிலி, குருக்கள் கோவிந்தன் குட்டி நாயரையும் அவரது குழுவினரையும் 'களரிப்பயட்' காட்சி முடிவுக்குப் பிறகு சந்தித்தாள்.

தான் இந்தக் கலையைக் கற்க விரும்புவதாகக் குருக்களிடம் விருப்பப்பட்டாள். கேரளத்துக்கு வந்தால் கற்றுக் கொள்ளலாம் என்று குருக்கள் கோவிந்தன் குட்டி நாயர் தெரியப்படுத்தினார். 1983 ஆம் வருஷம் திருவனந்தபுரம் கோட்டையிலுள்ள 'களரிப்பயட்' கூடத்தில் மூன்று மாதங்கள் பயிற்சி பெற்றாள் சிசிலி. 1984 ஆம் ஆண்டு பிரெஞ்சு ஸ்காலர்ஷிப்புடன் வந்து கற்றுக் கொண்டாள். இரு வருஷங்கள் தனது செலவில் தங்கிக் கற்றுக் கொள்ளும் சிசிலி பாரீஸில், களரிப் பயட்' கலை கற்றுத் தரப் போகிறார். பிரெஞ்சு நாட்டிலிருந்து மலையாள மொழி கற்றுக் கொள்ள வந்திருக்கும் மற்றொரு பிரெஞ்சுப் பெண்ணும், சிசிலியும் ஒரு வீட்டில் தங்கி, தாங்களே சமைத்துச் சாப்பிட்டுக் கொண்டு, களரிப் பயட்டும் கற்றுக் கொள்வது ஆச்சரியமான செய்தி.

'களரிப் பயட்' கற்றுக் கொள்ள கல்லூரி நாட்களில் நாற்பது பேர்களுக்கு மேல் வருவதாகக் குறிப்பிட்டார் கோவிந்தன் குட்டி நாயர். இவரது புதல்வரை அடுத்த வாரிசு குருக்களாகத் தயாரித்திருக்கிறார். ''கேரளத்தின் பூர்விகக் கலையான களரிப் பயட் இன்னும் பிராபல்யமாகி அனைவரும் கற்றுக் கொண்டால் இளைஞர்களின் தேக ஆரோக்கியத்துக்கும் தற்காப்புக்கும் பயன்படும்'' என்கிறார் கோவிந்தன் குட்டி நாயர்.

கல்லூரியில் மெக்கானிக்கல் இன்ஜினியரிங் பயிலும் மாணவன் ஹரீந்திர நாதன் ஐந்தாம்வயதிலிருந்து களரிப் பயட் கற்றுக் கொண்டு வருகிறான். அவனது தந்தை இந்தக் கலையைக் கற்க ஊக்குவித்திருக்கிறார். களரிப் பயட்டில் விற்பன்னனாகத் திகழும் ஹரீந்திரநாதன் இன்னும் பல வழிமுறைகளைக் கற்கச் சீடனாகவே செயல்படுவது வியப்பைத் தந்தது.

நம் இந்தியக் கால் பந்தாட்டக்காரர்களுக்குக் கோல் போடுவதில் திறமை இல்லையே என்று பலர் கவலைப்படலாம். களரிப் பயட்டில் எட்டு அடி, பத்தடி தூரத்தில் ஒரு கால் பந்தைத் தொங்கவிட்டு, அதைக் குதித்துக் காலால் உதைக்கப் பயிற்சி தருகிறார்கள். ஒவ்வொரு கால்பந்தாட்டக்காரரும் இந்தப் பயிற்சி முறையைக் கைக்கொண்டால் கால் பந்தாட்டத்தில் திறமையோடு செயலாற்றி நாட்டுக்குப் பெருமை சேர்க்கலாம்.

களரிப் பயட்டின் சரித்திரத்தை சீனப் பெண்மணி ஹான் சூயின் எழுதி வருகிறார். இவர் யார் தெரியுமா? நூறாண்டு கொண்டாடிய பேராசிரியர் ரத்தின சுவாமியின் மருமகள்.

களரிப் புயட்டின் தெய்வங்கள் பார்வதியும் சிவனும் ஆவர். அபாயகரமான ஆயுதங்களைக் கையாளும் இந்தப் பயிற்சியாளர்கள் நான்கு மூலைகளிலும் விளக்கேற்றி, தெய்வங்களுக்குப் பிரார்த்தனை செலுத்திவிட்டுப் பிறகுதான் பயிற்சியைத் தொடங்குகிறார்கள். தெய்வ நம்பிக்கையோடு நடக்கும் இந்தக் களரிப் பயட் கேரளத்தின் அரிய பொக்கிஷம்.


பாரதி புதிர் - 11



மேலே உள்ள படம் பாரதியாரின் பாடலிலுள்ள நான்கு வரிகளை விளக்குகின்றன. அந்த வரிகள் நினைவுக்கு வருகின்றனவா? பாடலின் தலைப்பு என்ன?

- விடை 75 ஆம் பக்கம்.

பிருந்தாவனக் கவியரங்கம்



வேப்பமரம்

வீட்டுக்கு முன்னே வேப்பமரம் — கோடை
வெப்பக் கொடுமையை நீக்கும்மரம்
வெள்ளி நிறத்தில் பூபூக்கும் — மணம்
வீதி முழுவதும் கமகமக்கும்
பச்சை நிறத்திலே காய்காய்க்கும் — அதில்
பாலோடு முத்து பளபளக்கும்
தங்க நிறத்தில் பழம்பழுத்து — அது
தளதள வென்று மின்னிநிற்கும்.

— ம. இராமநாதன் (11900),
நாகர்கோவில்—2.

ஆட்டுக்குட்டி

ஆட்டுக் குட்டி அங்கேபார் — அது
ஆடும் அழகை அங்கேபார்

ஆடு முன்னே செல்லுதுபார் — குட்டி
அதற்குப் பின்னே ஓடுதுபார்

தம்பி பிடிக்க ஓடுகிறான் — அது
தப்பி ஓடும் அழகைப்பார்

தங்கை பிடிக்க ஓடுகிறான் — அது
தாயின் பின்னே மறையுதுபார்


அண்ணன் அணைக்கச் செல்லுகிறான் — அது
ஆட்டம் போடும் அழகைப் பார்


அக்காள் அன்பாய் அணைக்கின்றாள் — அது
அசைந்து துள்ளும் அழகைப்பார்.

அண்டிப் பிழைக்கும் ஆடுகளை — நாம்
ஆதரித் திடவே வேண்டுமன்றோ?

உயிரைக் கொன்று அதைச்சமைத்து — நாம்
உண்பது பாவம், பாவமன்றோ?

— கி. க. பாலகிருஷ்ணன் (6830) தேனி.





இந்தியா

இமயம் முதல் குமரிவரை
எங்கும் பரந்து கிடக்குது
சமயம்பல கலந்து இங்கு
சங்கமமாய் இருக்குது.

கங்கை யோடு காவிரியும்
பலநதிகள் பாயுது
இந்தியாவை எதிர்க்கும் படை
இடிவிழுந்து சாயுது.

இருபதுக்கும் மேலே இங்கே
இராச்சியங்கள் இருக்குது
இந்தியர்கள் அனைவர் கொண்ட
ஒற்றுமையும் நிலைக்குது.

சாந்தி பிறந்த நாட்டிலெங்கும்
கண்ணியமாய் இருக்கணும்
உயிரைவிட நமது தேசம்
உயர்ந்ததென்று மதிக்கணும்.

— ந. முத்துக்குமரன் (11314),
வலங்கைமான்.



அப்பா

அப்பா மிகவும் நல்லவர்
அன்பில் வெள்ளம் போன்றவர்
எப்போ தவரும் என்னிடம்
இனிமை யாகப் பேசுவார்.

தப்பு நானும் செய்திடின்
தவறை எடுத்துக் காட்டியே
அப்போ தவரும் திருத்துவார்
அறிவு கூறி உணர்த்துவார்

காலைக் கோழி கூவுமுன்
கண்ணு என்று எழுப்புவார்
வேலை பார்க்கச் செல்லுவார்
விரும்பிப் படிக்கச் சொல்லுவார்.

"அன்பால் பிறர்க்கு உதவிடு.
அருமை நாட்டைப் போற்றிடு."
என்று தினமும் அறிவுரை
எனக்குச் சொல்லி வாழ்த்துவார்.

— கொ.மா.கோ. இளங்கோ (3017),
இராஜபாளையம்.

மான்குட்டிக்கு உதவி

கதிரவன் மறைந்ததும் காட்டினிலே
சலசல என்றொரு சத்தமம்மா!

சத்தம் கேட்டு நான்தொடர்ந்தேன்!
சங்கடமாக இருந்ததம்மா.

மாமரத் தடியில் மான்குட்டி
மரத்தினைச் சுற்றி ஓடியதே!

கழுத்தில் இருந்த ஒருகயிற்றால்
கட்டுப் பட்டதைக் கண்டேனே;

சுற்றிய மானும் களைத்ததுவே
துவண்டு கீழே விழுந்ததுவே!

மெல்ல அருகில் நான்சென்றேன்,
மானின் நிலையை நான்கண்டேன்!

கண்களில் ஈரம் கோத்திருந்து,
கவலையில் தலையைச் சாய்த்திருந்து — நான்

அருகினில் வருவதைக் கண்டதுமே
அழகிய கண்களைத் திறந்ததுவே!

கட்டினை மெல்ல அவிழ்த்ததும்என்
கைகளை மெல்ல நக்கியதே!

தடவிக் கொடுத்தேன். உடன்எழுந்து
தத்தித் தாவி ஓடியதே!

மெத்தையில் வந்து நான்படுத்தேன்
மெல்லநல் உறக்கம் வந்ததம்மா!

பி. அம்பிகா (11325), கோவை—1.





உண்டு உண்டு

காந்தியின் பேச்சே கல்கண்டு
கருணையை நினைத்தால் களிப்புண்டு

கட்டின வேட்டி முழுத்துண்டு
காசினி யெல்லாம் மதிப்புண்டு.

கையில் மூங்கில் கம்புண்டு.
பொய்யை விரட்டும் தெம்புண்டு.

பொக்கை வாயில் சிரிப்புண்டு.
பூமிக்கு அதனால் களிப்புண்டு.

சுதந்திர வாழ்வு நமக்குண்டு.
தொல்லைகள் தீர வழிகண்டு,

புரிவோம் நாமும் நற்றொண்டு
பூவுல கிற்கு நலமுண்டு.

— இரா. சியாம்சுந்தர் (10308)
சேலம்—1.

உருவகக் கதைகள்

'மலையமான்'

சேவலும் புழுவும்



பசியோடிருந்த ஒரு சேவல், தோட்டத்தில் வேகமாகப் பிறாண்டிக் கொண்டிருந்தது. கூர்மையான நகங்களும் அதைவிடக் கூர்மையான கண்களும் கவனத்தோடு பசி நீக்கும் கடமையைச் செய்து கொண்டிருந்தன. சற்று நேரத்திற்கெல்லாம் அதன் கால் நகத்தில் வழவழப்பான பொருள் அகப்பட்டது. அது ஒரு மண்புழு. அதை அலகால் கொத்தித் தூக்கியது.

வேதனையால் துடித்துக் கொண்டிருந்த மண்புழு தன் கதியை உணர்ந்து கொண்டது. சேவலிடம் தன்னை விடுமாறு மன்றாடிக் கேட்டது.


''ஐயா, நீங்கள் யார் என்பது எனக்குத் தெரியாது. நீங்கள் யாராக இருந்தாலும் உங்கள் சாப்பாட்டில் நான் மண்ணை அள்ளிப் போட்டதில்லை. நான் யாருக்கும் துன்பம் செய்தது கிடையாது. எவருடைய வாழ்க்கையிலும் குறுக்கிட்டதில்லை. யாரையும் கெடுத்ததில்லை. என்னை விட்டுவிடுங்கள் ஐயா! ஒருவேளை என்னையும் அறியாமல் தங்களுக்குக் குற்றம் செய்திருந்தாலும், 'என்னை மன்னித்து விடுங்கள்'' என்றது.

''நீ என் கால்களில் அகப்பட்டது முதல் குற்றம். 'நான் யாருக்கும் துன்பம் செய்ததில்லை' என்று நீ சொல்கிறாய். அப்படியானால், நான் துன்பம் செய்கிறேன் என்று குறிப்பாகக் கூறுகிறாய். இவ்வாறு குத்தலாகப் பேசியது இரண்டாவது குற்றம்'' என்றது சேவல்.

''ஐயா, நான் தங்களைத் தாக்க வேண்டும் என்ற கருத்துடன் பேசவில்லை. என்னைப் பற்றிச் சொல்லிப் பிழைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தால்தான் அவ்வாறு சொன்னேன். நான் மண்ணைத் தின்று வாழ்கிறேன்: கண்ணில்லாத குருடனானதால் தரைக்குள் ஒளிந்து வாழ்கிறேன். அப்போதும்கூட என்னால் முடிகின்ற வரை செடிகொடிகளுக்கு உரமும், காற்றோட்ட வழியும் அளித்து உதவி செய்கிறேன். 'உழவனின் தோழன்' என்ற பட்டம் எனக்குக் கொடுக்கப்பட்டிருப்பது தங்களுக்குத் தெரிந்திருக்கலாம். இவற்றைக் கருதியாவது என் மீது அருளை வைத்து என்னை விட்டு விடுங்கள். உங்கள் உதவியை நான் என்றும் மறக்கமாட்டேன். உங்களுக்குக் கோடி புண்ணியம் உண்டு'' என்று கெஞ்சியது மண்புழு.

''நீ ஒருவேளை உண்மையில் நல்லவனாய் இருக்கலாம். யாருக்கும் துன்பம் செய்யாமல் நன்மையே செய்பவனாய் இருக்கலாம். ஆனால், உன்னை நீ பாதுகாத்துக் கொள்ள முடியவில்லை. நான் உன்னை விட்டுவிட்டாலும் உன்னை இன்னொருவன் கொல்வான்.

உன்னை நான் இழந்தால் அடுத்தவனுக்கு நீ விருந்தாவாய். அது எனக்குத்தானே இழப்பு. என் முயற்சிக்கும் கூலி வேண்டுமே'' என்று சொல்லி ஒரே விழுங்கில் அதை வயிற்றுக்குள் அனுப்பிவிட்டது.



காணாமற் போன குழந்தை


ஒரு நாள் ஒரு சிறு குழந்தை வழி தவறி ஊரின் ஓரத்திலிருந்த காட்டிற்குச் சென்றுவிட்டது. அழுது கொண்டே — தன் அம்மாவைக் கூப்பிட்டுக்கொண்டே காட்டினுள் நெடுந்தூரம் சென்றுவிட்டது. அதன் அழுகைக்குரல் பலமிருகங்களையும் பறவைகளையும் அதனிடம் அழைத்து வந்தது.

அந்தக் குழந்தையைக் கண்டு அங்கிருந்த எல்லா மிருகங்களும் இரக்கப்பட்டன. ஒரு சில அந்தக் குழந்தையின் கண்ணீரைக்கூடத் துடைக்க முயன்றன. தம்மிடம் வந்துவிட்ட அந்தக் குழந்தையைக் காப்பாற்ற வேண்டும் என்று அங்கு கூடியிருந்த எல்லா மிருகங்களும் பறவைகளும் ஒரு மனதாகத் தீர்மானித்தன.

குரங்கு, அந்தக் குழந்தைக்கு ஒரு மேல் சட்டை தேட ஓடியது. குள்ளநரி, கால்சட்டை தயாரிக்கச் சென்றது. மயில், அழகான போர்வையைக் கண்டுபிடிக்கப் போனது. குயில், குழந்தையின் கண்ணுக்கு வேண்டிய கண்மையைக் கவனிக்கச் சென்றது. மான், விளையாட்டுச் சாமான்களைத் திரட்ட முயன்றது. யானை, குழந்தைக்கு விளையாட்டுத்தோழர்களைக்கூப்பிடச்சென்றது. வண்டு, தலைக்கு வைக்கப் பூக்களைப் பறிக்கத் தொடங்கியது. மரங்கொத்தி சாந்து எடுப்பதற்குப் பறந்தது. புலி படுக்கை தயாரிக்க முற்பட்டது. இவ்வாறு ஒவ்வொரு மிருகமும் பறவையும் ஒவ்வொன்றைத் தேட வெவ்வேறு திசைகளில் புறப்பட்டுச் சென்றது.

எல்லோரும்சென்றபிறகு, தனித்து விடப்பட்ட குழந்தை அழுவதற்கு ஆரம்பித்தது. அழுது கொண்டே நடந்த அக்குழந்தை, ஒரு பள்ளத்தில் விழுந்து — பசியால் இறந்துவிட்டது.

குழந்தைக்கு வேண்டியவற்றைத் தேடச் சென்ற மிருகங்களும் பறவைகளும் திரும்பி வந்து பார்த்தன. குழந்தையைக் காணவில்லை! மும்முரமாகக் குழந்தையைத் தேடத் தொடங்கின.



கீரியும் பாம்பும்

ஒரு காட்டில் ஒரு நாகப்பாம்பு இரை தேடிக் கொண்டிருந்தது. அந்தக் காலத்தில் அதற்கும் கீரிக்கும் பகையுமில்லை. நட்புமில்லை. ஆடும் மாடும் இப்போது எப்படிப் பழகுகின்றனவோ அப்படியேதான் அக்காலத்தில் அவை பழகி வந்தன. இரை தேடிக் கொண்டிருந்த அந்தப் பாம்பு, உணவு ஒன்றும் கிடைக்காததால் பெருமூச்சு விட்டுக் கொண்டே

தலையைத்திருப்பிற்று. சற்றுத்தூரத்தில் ஒரு கீரி தன் பல்லை வெளியே காட்டிக் கொண்டிருந்தது. பாம்புக்கு ஒரு சந்தேகம் வந்துவிட்டது. ஒரு வேளை தன்னைப் போல அந்தக் கீரிக்கும் உணவு கிடைக்காததால் தன்னைக் கொல்வதற்காக அது வாயைத் திறக்கிறதோ என்று எண்ணியது. மீண்டும் ஒரு பெருமூச்சு விட்டது.


இரண்டுபெருமூச்சுதன்னைநோக்கி வருவதைக் கண்ட அந்தக் கீரி அதன் உட்பொருளை ஆராய்ச்சி செய்யத் தொடங்கிற்று. அப்போது அது தன்னை அறியாமலேயே தன் வாயைமூடுவதும் திறப்பதுமாக இருந்ததைப் பாம்பு இமைகொட்டாமல் நோக்கிக்கொண்டிருந்தது. அதன் சந்தேகம் வலுத்தது.


அந்தப் பாம்பு சந்தேகத்திற்கும் அச்சத்திற்கும் இருப்பிடம். அந்தக் கீரியோ சந்தேகத்திற்கும் அவசரத்திற்கும் வாழிடம். நேரம் செல்லச் செல்ல இரண்டின் சந்தேகங்களும் வளர்ந்தன. தன்னைக்கொல்லவேமற்றொன்று காத்துக் கொண்டிருக்கிறது; தக்க வாய்ப்புக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது என்று இரண்டும் நினைத்தன.

பாம்பின் 'புஸ்' ஓசையும், கீரியின் திறந்த வாயும் சந்தேக நெருப்பிற்குக் காய்ந்த விறகாய்ப் பயன்பட்டன. அவை இரண்டும் தங்கள் பசியை மறந்தன. எப்படித் தப்புவது என்ற சிந்தனையில் அவை சிக்கிவிட்டன.

'சடுக்'கெனப் பாய்ந்தது கீரி. அதன் பிடிப்பிலிருந்து தப்ப முயன்றது பாம்பு. துள்ளும் வேகமும், சீறும் ஓசையும் ஒன்றையொன்று கட்டித் தழுவிக் கொண்டன. அச்சமயத்தில் காடேகிடுகிடுக்கும்படி மிருக அரசனாகிய சிங்கம் கர்ஜனை செய்தது. அதைக் கேட்டதும் நடுநடுங்கிக் கீரியும் பாம்பும் வெவ்வேறு திசைகளில் ஓடி ஒளிந்தன.

அன்று முதல் அந்தப் பாம்பு தன் இனத்தைச் சேர்ந்த எல்லோரிடத்திலும் 'பாம்புக்குப் பகை கீரி' என்ற பழமொழியைப் பரப்பியது. அது போலவே அந்தக் கீரியும் தன் கூட்டத்தாரிடம், 'பாம்பின்படத்தைக்கடித்துக் கிழிப்பதே கீரியின் வேலை. ஆகையால் 'பாம்பு நமக்குப் பகை' என்று கூறியது. இன்றுவரை இரண்டிற்கும் இக்கருத்துக்களை மறக்கத் தெரியவில்லை.





ஆனந்துவுக்கு அழுகையும் ஆத்திரமும் வந்தன. தலையணையில் முகம் புதைத்து அழுதான். இவர்களுக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டும். எப்படிச் செய்தால் இவர்களைப் பதிலுக்கு அழ வைக்கலாம்?

தினமும் அப்பாவும் அம்மாவும் இந்த மாலுக் குட்டிக்குப் பரிந்து கொண்டு அடித்து நொறுக்குகிறார்களே — என்ன அக்கிரமம்!

இன்றைக்கு அவன் என்ன அப்படிப் பெரிய தப்பு செய்துவிட்டான்? அவனுக்கு என்று வாங்கிய பிரம்பு நாற்காலியில், இந்த மாலுக்குட்டி தான்தான் உட்காருவேன் என்று அடம் பிடிக்கிறாள்; அம்மாவும் அவள் பக்கம் பேசுகிறாள்; அப்பா, அவளுக்கென்று தனியாக ஒன்று வாங்கித் தருவது தானே? கொடுக்க முடியாது என்று பிடிவாதமாக இழுத்ததில் அந்தப் பிரம்பு நாற்காலியில் இரண்டு பிரம்பு பின்னல்கள் உடைந்துவிட்டன. அதற்காகவா அப்பா இப்படிக் கண்மூடித்தனமாக அடிப்பது? இந்த மாலுக்குட்டிக்கும் அம்மாவுக்கும் இப்போது மனம் குளிர்ந்திருக்கும். சே! இனி இந்த வீட்டில் இருக்கக் கூடாது. இவர்களுடன் சேர்ந்து வாழ இனி அவனுக்கு விருப்பமில்லை. வாழ்க்கை ஒரே வெறுப்பாக இருந்தது! என்ன செய்யலாம்?

செத்துப் போய்விட்டால் என்ன? அப்போது இந்த அம்மாவும் அப்பாவும் அழுவார்கள் இல்லையா? இந்த மாலுக்குட்டி வேண்டுமானால் சிரிப்பாள்; அவளுக்குப் போட்டிக்கு ஆள் இல்லையே!

"ஐயோ! ஆனந்து! என் கண்ணே — போய்ட்டியா?" என்று அம்மா மேலே விழுந்து அழுவாள். அப்பா அழுத்தம்; வாய்விட்டு அழ மாட்டார். ஆனால், வாயில் துணியை வைத்துக் கொண்டு, கண்களில் நீர் வழியத் தேம்புவார்! 'நன்றாக வேண்டும்! என்னைத் தினமும் அடித்துக் கொன்றீர்களே! இப்போது ஒரேயடியாகச் செத்துப் போய்விட்டேன். திருப்தி தானே?' என்று கேட்க வேண்டும்.

அட! அவன்தான் செத்துப் போய் விடுவானே! — அப்புறம் எப்படிக் கேட்க முடியும்? அவர்கள் பிழியப் பிழிய அழுவதையும் எப்படிப் பார்க்க முடியும்?

ஊஹூம்! செத்துப் போவதில் பயனில்லை. அதனால், அவனுக்கென்ன லாபம்? அம்மா அப்பா அழுது துடிப்பதைப் பார்க்க முடியாமல் அவனால் எப்படி வஞ்சம் தீர்க்க முடியும்?

வீட்டை விட்டு ஓடிப் போனால் என்ன? சாமியாராகப் போய்

விட்டால் என்ன?

சின்ன வயசிலே சங்கரர் அப்படித் தானே ஆகிவிட்டாராம். அவன் புத்தகத்தில் படித்திருக்கிறானே! மொட்டைத் தலையுடன், மூன்று பட்டையாக விபூதி பூசி, தலையில் முக்காடிட்டுப் பிச்சை கேட்டுச் சாப்பிடுவது! இப்படி அடி உதை தினமும் வாங்குவதைவிட அது எவ்வளவோ மேல்!

பாட்டி சொன்ன சந்நியாசி கதையில், அந்த சந்நியாசி குரல் கொடுக்கிற மாதிரி, ஆனந்து, வீடு வீடாகப் போய், 'பவதி பிட்சாந்தேகி!' என்று குரல்கொடுக்கிறான். பெண்கள் சாதத்துடன் ஓடி வருகிறார்கள். ''யாரோ இளம் சந்நியாசி! முகத்தில் என்ன தேஜஸ்!'' என்று வியக்கிறார்கள். பய பக்தியோடு அவன் கையில் உள்ள நீண்ட அரைவட்ட பிட்சா பாத்திரத்தில் போடுகிறார்கள். இங்கே அம்மா அப்பா, மாலுக்குட்டி எல்லோரும் அவனைக் காணாமல் திகைக்கிறார்கள். எங்கே போயிருப்பான் என்று தேடுகிறார்கள். வெகுநாட்களுக்குஅவர்கள் கண்ணிலேயே அவன் அகப்பட மாட்டான். வடக்கே காசி யாத்திரை போய் விடுவான். இங்கே இவர்கள் அவனைக் காணாது அழுது புலம்புவார்கள்.

அப்பா பேப்பரில் விளம்பரம் கொடுக்கிறார். ''காணவில்லை. ஆனந்தன்—வயது ஏழு—நல்லசிவப்பு நிறம், சுருள் முடி — காணாமல் போன போது நீலக் கால் சட்டையும் வெள்ளைச்சட்டையும் போட்டிருந்தான். கண்டுபிடிப்பவர்கள் தெரிவித்தால் தக்க சன்மானம் தரப்படும்.''

''அன்புள்ள ஆனந்து,

நீ எங்கிருந்தாலும் உடனே வரவும். அம்மா உன் பிரிவால் அழுது கொண்டிருக்கிறாள். நீ போன நாள் முதல் சாப்பிடவில்லை. உன் தங்கை மாலதியும் அழுது கொண்டிருக்கிறாள். நானும் கவலையாய் இருக்கிறேன். உன்னை நானோ அம்மாவோ இனி அடிக்க மாட்டோம். நடந்ததை மறந்து உடனே வரவும்.''

அம்மா அழுகிறாளா? அழட்டும்—நன்றாக அழட்டும்! அவனை அழ வைத்தாரே, அவர் அழ வேண்டாமா? அவரும் அழுகிறவரை வீட்டுக்குப் போகக் கூடாது! மாலுக்குட்டியும் அழுகிறாளாம். எல்லாம் வேஷம்! மனத்துக்குள் சந்தோஷமாகத்தான் இருப்பாள். இனி எதிலும் இரண்டு பங்கு இல்லையல்லவா? தின்பண்டம், விளையாட்டுச் சாமான், எல்லாம்தானே அனுபவிக்கலாமே! அழுவாளா? வெறும் பாசாங்கு! அவன் போகப் போவதில்லை. எல்லோரும் அழட்டும். அவனைத் தினமும் அழவிட்டார்கள் அல்லவா? அவன் வீடு திரும்ப மாட்டான். இப்படிச் சாமியாராகவே ரிஷிகேசம்வரை போவான். இந்தியா முழுவதும் சுற்றுவான்.,

வெகு நாட்கள் கழித்து, தலையை மொட்டையடித்துக் கொண்டு இடுப்பிலே ஒரு சிறு துண்டைக் கட்டிக் கொண்டு இந்தப் பக்கம் வருவான். வீட்டில் எப்படித் தன்னை நினைத்து அழுது கொண்டிருக்கிறார்கள் என்று பார்க்கத் தன் வீட்டிலேயே வந்து பிச்சை கேட்பான்.

'பவதி பிட்சாந்தேகி!' — கணீரென்று குரல் கேட்கிறது. அம்மா, ''அடீ! மாலு! அங்கே யாரோ பிச்சை கேட்கிறாப் போலே இருக்கு, கொஞ்சம் சாதம் கொண்டு போய்ப் போடு!'' என்கிறாள். அவள் குரலில் மகனைப் பிரிந்த ஏக்கம் தெரிகிறது.

''போம்மா! உனக்கு வேற வேலையில்லை. யாரோ தடியன் நிற்கிறான்;

75 மார்க்!

''கணக்குல இதுவரைக்கும் எத்தனை மார்க்!''


''75 மார்க்!''

''பரவாயில்லையே.....!''

''மூணுப் பரீட்சையும் சேர்த்தா.... 75 மார்க் வருதப்பா!''

— பவித்ரா





சின்னப் பையன் மாதிரி தெரியுது. இவனுக்கெல்லாம் போடப்படாது. கிழம் கட்டைன்னு — பாவம், போட லாம். இவனுக்கு என்ன கேடு?'' என்று எட்டிப் பார்த்து விட்டுப் போய்ச் சொல்கிருள். அவனே அவ ளுக்குத் தெரியவில்லை.

''சீ! கொண்டு வந்து போடுடி! பாவம்! யார் பெத்த பிள்ளேயோ? நம்ம ஆனந்துவும் இப்படித்தான் எங்கேயாவது பிச்சை எடுக்கிருனே என்னவோ! ஐயோ! எம் பிள்ளே எங்கே போய்ச் சோத்துக்கு அலே கிருனே! யாராவது இதே மாதிரி, 'தடி'யன்னு போடாமப் போயி என்ன மாத் துடிக்கிருனே என் குழந்தை!''

''போம்மா! ஆனந்து தடியன் அப் படிப் பட்டினி கிடந்தாலும் செத்துப் போயிட மாட்டான்! நீதான் கிடந்து புலம்பறே!'' என்கிருள் மாலுக்குட்டி.

ஆனந்துவுக்கு ரத்தம் கொதிக் கிறது. 'என்ன திமிர் இந்த மாலுக் குட்டிக்கு? தன் மீது இவ்வளவு அலட் சியம் இவளுக்கு?' 'நான்தான் ஆனந்து' என்று கத்திவிடலாமா என்று தோன்றுகிறது.

அதற்குள் அப்பா வந்து விடுகிருர். ''யாரடா தடிப்பயல்! போடா! வேறு வேலே இல்லே உனக்கு? இந்த வயசி லேயே என்ன பிச்சை? உழைச்சுச் சாப்பிட்டா என்ன கேடு? போ போ!'' என்று அவனே நிமிர்ந்து பார்க்கம லேயே விரட்டி விட்டுக் கதவைச் சாத்துகிருர்.

''பார்த்தாயா! இந்த அப்பாவும் மாலுக்குட்டி மாதிரிதான்! இரக்கமில் லாதவர்! தன் பிரிவுக்காகக் கொஞ்ச மும் கலங்கியதாகத் தெரியவில்லே! ஏதோ அம்மா மட்டும் கொஞ்சம் கவலேப்படுகிற மாதிரி தெரிகிறது. சீசீ! சாமியார் ஆனுலும், பலனிருக்காது போலிருக்கிறது! வேறு எப்படி இந்த அப்பாவையும் மாலுக்குட்டியையும் அழ வைக்கலாம்? இனி இந்தப் பக்கமே திரும்பிப் பார்க்கக் கூடாது. என்றென்றும் வராமல் ஓடிப் போய் விட வேண்டும்

— இப்படி எண்ணியபடியே தூங் கிப் போய்விட்டான் ஆனந்து.

பாதி இரவில் யாரோ தன்னே அணேக்கிற மாதிரி உணர்ந்து கண்

விழித்தான். கண்களை முரட்டுக் கரம் ஒன்று தடவிக் கொண்டிருந்தது. யாரு அப்பாவா?

''ஆனந்துகண்ணு! ரொம்பவலிச்சுதாடா?''

— 'ஆமாம்! அப்பாதான்! எப்படி இவ்வளவு கனிவு இவர் குரலில் வந்தது? முரட்டுத் தொண்டைக்கு இவ்வளவு இனிமை எப்படி வந்தது?'

அவன் பதில் பேசாது வியந்து கொண்டிருந்தான்.

''பின்னே வலிக்காதா சின்ன உடம்புக்கு? இந்தமாலுக்குட்டியும் ரொம்பப் பொல்லாததுதான், இவன்தானே பெரியவன் — இவனுக்கு விட்டுக் கொடுத்தா என்னவாம்? அவள் பிடிவாதம் பண்ணப் போய் பாவம், குழந்தையை இப்படி அடிச்சுட்டீங்களே!'' என்று மறுபக்கத்திலிருந்து குரல் கேட்டது.

அம்மா! அவனுக்குவலப்புறம்படுத்திருந்த அம்மா அவனை அணைத்தாள்.

''ஏதோ கோபத்திலே அடிச்சுட்டேன். சின்னக் குழந்தைகிட்டே பிடிவாதம் பண்ணி நாற்காலியை உடைச்சுட்டான்னுட்டுக் கோபம் வந்துட்டுது! அடி, பலம்தான்! ரோஷக்காரனுச்சே எங்காவது ஓடிப் போயிடுவானோன்னு பயந்து போனேன்!'' என்று நெகிழ்ச்சியாகச் சொல்லியபடி இடது கையால் அவனை அணைத்தார் அப்பா.

ஆனந்துக்கு நம்ப முடியவில்லை. 'அப்பாவுக்குத் தன்மீது இவ்வளவு பரிவா?' 'இல்லை அப்பா! நான் எங்கும் ஓடிப்போகமாட்டேன்' என்று எழுந்து கத்த வேண்டும் போல் இருந்தது. ஆனால், விழிப்பு வராதவன் போல— இறுக்கமாகக் 'கண்களை மூடிக் கொண்டு அம்மா, அப்பாவின் அணைப்பின் சுகத்தில் கிறங்கினான்.

ஆமாம்! ஆனந்து ஓடப் போகவில்லை!




செல்வி ஸ்ரீபிரியா ராமதுரையின் நடன அரங்கேற்றம் மிகச் சிறப்பாகச் சமீபத்தில் நடைபெற்றது. காவல்துறை டைரக்டர் ஜெனரல் திரு. கே. ராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமை தாங்கிக் குழந்தையை வாழ்த்துகிறார். அருகில் நிற்பவர் நடன ஆசிரியை திருமதி பாலமீரா சந்திரா.

நடன அரங்கேற்றம்

கிரேக்க நாட்டுக் கதை

பண்டோராவும் பெட்டியும்



தமிழில்: எச். கிருஷ்ணமூர்த்தி

வெகுநாட்களுக்கு முன்னால் இந்த உலகம் வேறு விதமாக இருந்தது. யாருக்கும் கஷ்டங்கள் இருக்கவில்லை. வறுமை இல்லை. நோய் இல்லை. வருத்தம் இல்லை. எல்லோரும் சந்தோஷமாக இருந்தனர். எல்லாரும் குழந்தைகளாகவே இருந்தனர். அவர்களைப் பாதுகாக்க அம்மா, அப்பா தேவைப்படவில்லை. ஏனென்றால் ஆபத்து எதுவும் இருக்கவில்லை. சமையல் வேலை இல்லை. பசிக்கும் போது காய், கனி, கிழங்குகளை உண்டனர். துணிமணிகள் தைக்கவில்லை. மரப்பட்டைகளை அணிந்தனர்.

அந்தக் காலத்தில் குழந்தைகள் சண்டை போடவில்லை. அழவில்லை. இப்போது நமக்குத் தொல்லை கொடுக்கும் கொசு போன்ற பூச்சிகளோ, வேறு கிருமிகளோ எதுவுமே இருக்கவில்லை. நாள் முழுவதும் சிரிப்பு, ஆட்டம், பாட்டு!

அப்போது எபமீ தூஸ் என்று ஒரு சிறுவன் இருந்தான். அவனுடைய குடில் சிறியது. ஆனால் அழகானது. சுற்றிலும் பசுமையான தோட்டம். அருமையான மலர்கள் பூக்கும் செடிகள். பழ மரங்கள். பாடும் பறவைகள். அவனுடைய விளையாட்டுத் தோழி பண்டோரா நல்ல அழகி. பெரிய குறும்புக்காரி. அவளும் அதே குடிலில் தான் இருந்தாள்.

ஒருநாள் அவர்களுடைய குடிலுக்கு ஒரு விசித்திரமான வழிப்போக்கன் வந்தான். ஒரு கனமான பெட்டியைச் சுமந்து வந்தான். பெட்டியைக் கீழே இறக்க எபமீ தூஸ் அவனுக்கு உதவினான். பழங்களும், குளிர்ந்த நீரும் கொடுத்துப் பண்டோரா அவனை உபசரித்தாள். அவனைத் தங்களோடு தங்கும்படி இருவரும் வேண்டினர்.

''நான் வெகுதூரம் போக வேண்டும். ரொம்ப அவசரம். இந்தப் பெட்டியை இங்கே வைக்கலாமா?'' என்று அவன் கேட்டான்.

''தாராளமாக வைக்கலாம். நீங்கள் திரும்பி வரும் வரையில் நாங்கள் அதைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளுவோம்,'' என்று இருவரும் பதில்



அளித்தனர்.

''கடவுள் உங்களைக் காக்கட்டும்!'' என்று வாழ்த்திவிட்டு வழிப்போக்கன் புறப்பட்டான்.

வெகு நாட்கள் ஆயின. அவன் திரும்பி வரவே இல்லை. அவன் வைத்த இடத்தில் பெட்டி அப்படியே இருந்தது.

அந்தப் பெட்டியைப் பார்க்கும் போதெல்லாம், ''உள்ளே என்ன இருக்கிறது?'' என்ற கேள்வி பண்டோராவின் மனத்தில் எழுந்தது. ''அதைத் திறக்கட்டுமா?'' என்று அவள் எபமீதூஸிடம் கேட்டுக் கொண்டே இருந்தாள்.

''அது நம்முடையதில்லை. திறக்காதே. வெளியே போய் விளையாடலாம், வா!'' என்று அவன் பொறுமையாகப் பதில் சொல்லி வந்தான்.

''என்ன மக்குப் பிள்ளை, இவன்! நாலும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வமே இல்லையே!'' எனப் பண்டோரா மனத்திற்குள்ளேயே பேசிக் கொண்டாள்.

பெட்டியின் ரகசியத்தை அறியும் வரையில் தனக்கு நிம்மதி இல்லை என்பதைப் பண்டோரா அறிந்தாள். பாட்டிலும், ஆட்டத்திலும் அவளுடைய நாட்டம் குறைந்தது. நாளுக்கு நாள் அவளுடைய கவலை பெருகியது. உலகிலேயே முதன் முறையாகத் துன்பம் என்ற உணர்வின் நிழல் பண்டோராவின் மனத்தில் படிந்தது.

குடிலில் தனியாக இருந்த போதெல்லாம் புதிராகத் தோன்றிய அந்தப் பெட்டியின் முன்பு அவள் அமர்ந்தாள். நீண்ட நேரம் அதைக் கூர்ந்து நோக்கினாள். நன்றாக இழைக்கப்பட்ட கரிய மரத்தினால் பெட்டி செய்யப்பட்டிருந்தது. அதில் பண்டோராவின் முகம் பளபளத்தது. பெட்டியின் ஓரங்களில் செடிகளும், பூக்களும் செதுக்கப்பட்டிருந்தன. இலைகளை விலக்கி எட்டிப் பார்ப்பது போல ஆங்காங்கே இளம் முகங்கள் இருந்தன. மூடியின் மையத்திலும் ஓர் அழகான முகம். அது பண்டோராவைப் பார்த்துச் சிரிப்பது போலத் தோன்றியது. ''பெட்டியைத் திற, பண்டோரா! திறந்தால் என்ன? உள்ளே அழகான பொருள்கள் இருக்கலாம் இல்லையா?'' என்று அந்த முகம் பேசுவது போலக் காணப்பட்டது.

பண்டோரா குனிந்தாள். ஒரு கையால் பெட்டியைத் தூக்க முயன்றாள். பெட்டி கனத்தது. தூக்க முடியவில்லை. அவள் மறுபடியும் மூடியைப் பார்த்தாள். பூட்டு இருக்கவில்லை. ஒரு பொன் கயிறு முடியப்பட்டிருந்தது. முடிச்சைத் தொட்டுப் பார்த்தாள். அதனுடைய முதலும் தெரியவில்லை; முடிவும் தெரியவில்லை.

வெளியே குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்களுடைய

சந்தோஷமான சிரிப்பும், பாட்டும் பண்டோராவை ஒருபுறம் சுண்டி இழுத்தன.

"இந்தப் பெட்டியைப் பார்த்துக் கொண்டே நேரத்தை வீணடிப்பதை விட விளையாடப் போனால் என்ன?" என்று பண்டோராவின் மனம் எண்ணியது. ஆனாலும், பண்டோராவின் விரல்கள் பொன் முடிச்சின் மீது விளையாடிக் கொண்டிருந்தன. மூடியிலிருந்த முகம் அவளைப் பார்த்து வசீகரமாகச் சிரித்தது. திடீரென அந்த முடிச்சு அவிழ்ந்தது!

"இதைப் பார்த்தால் எபமீதூஸ் என்ன சொல்லுவான்? சீக்கிரமாக இந்தக் கயிற்றை நான் முடிய வேண்டும்," பண்டோரா அவசரப்பட்டாள். ஆனால், அவளால் அதே மாதிரி முடிச்சுப் போட முடியவில்லை.

"நான் பெட்டியைத் திறந்து பார்க்கவில்லை என்று சொன்னால், அவன் நம்பப் போவதில்லை. கடவுளே! நான் என்ன செய்யப் போகிறேன்?" பண்டோரா தவித்தாள்.

"பண்டோரா! எங்களை வெளியே விடு! தயவு செய்து வெளியே விடு! உன்னோடு விளையாடப் போகிறோம்!" என்று பல மெல்லிய குரல்கள் பெட்டியின் உள்ளிருந்து ஒலிப்பது போலத் தோன்றின.

"ஒரே புதிராக இருக்கிறதே? பெட்டியைத் திறந்து ஒருமுறை உள்ளே பார்ப்பேன். பிறகு கவனமாக மூடிவிடுவேன். ஒரே ஒருமுறை உள்ளே பார்த்தால் என்ன? தலையா போய்விடும்?" என்ற நினைவு அலைகளில் பண்டோரா நீந்தினாள்.

இவ்வளவு நேரமாக எபமீதூஸ் எங்கே போயிருந்தான்? என்ன செய்து கொண்டிருந்தான்?

அவன் குடிலுக்கு வெளியே மற்றக் குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருந்தான். திடீரென ஒரு கறுப்பு மேகம் வானத்தை மூடியது. எங்கும் இலேசான இருள் பரவத் தொடங்கியது.

எபமீதூஸ் குடிலின் உள்ளே நுழைவதற்கும், பண்டோரா மூடியின் மேல் கையை வைத்துப் பெட்டியைத் திறக்க நினைப்பதற்கும் சரியாக இருந்தது. எபமீதூஸ் அவளைப் பார்த்தான். ஆனால், எச்சரிக்கை செய்யவில்லை. ஒருவேளை அவ்வாறு செய்திருந்தால், பண்டோரா பெட்டியை விட்டு உடனே நீங்கியிருக்கலாம். அந்த அதிசயப் பெட்டியின் ரகசியம் தெரியாமலே போயிருக்கலாம்.

பதறிப்போய் எபமீதூஸ் கூச்சலிட்டானா? இல்லை! இல்லவே இல்லை! உண்மையில் பண்டோராவைப்போல அவனும் பெட்டியின் ரகசியத்தை அறிய ஆவலாக இருந்தான்!

திறந்தாள் மூடியை! பார்த்தாள் உள்ளே! சிறகுகளை அடித்துக் கொண்டு ஆயிரக்கணக்கான ஜீவராசிகள் பெட்டியிலிருந்து புறப்பட்டுப் பண்டோராவைத் தாண்டிப் பறந்து சென்றன! அதே சமயத்தில் எபமீதூஸ் மிகுந்த வேதனையோடு கூக்குரலிட்டான்!

"ஐயோ! என்னைக் கொட்டிவிட்டதே! என்னைக் கொட்டிவிட்டதே! பண்டோரா! அந்தக் கொடிய பெட்டியை ஏன் திறந்தாய்?" எபமீதூஸ் அலறினான்.

பண்டோரா மூடியைக் கீழே போட்டாள். பெட்டி மூடிக்கொண்டது. எபமீதூஸுக்கு என்ன ஆயிற்று என்று அவள் திரும்பிப் பார்த்தாள். விகாரமான ஒரு பூச்சி தன் கொடிய சிறகு

அம்மாவுக்குச் செய்தி

"எலே! உனக்கு தம்பி பாப்பா பிறந்திருக்கான்...."

"அப்படியா அப்பா? கொஞ்சம் இருங்க. அம்மாகிட்டே போய் சொல்லிட்டு வறேன்!"

— விக.



களை அடித்துக் கொண்டு பண்டோராவின் தலையில் உட்கார்ந்தது. பண்டோரா அலறித்துடித்து அழத்தொடங்கினாள். எபமீதூஸ் ஓடிவந்து அதை விரட்டினான்.

அந்த விகாரமான ஜீவராசிகள் எல்லாம் என்ன? பூமியில் இப்போது உள்ள துன்பங்களின் பல்வேறு வடிவங்களே அவை. சந்தோஷமான குழந்தைகள் எல்லாம் சில விஷயங்களைத் தெரிந்து கொள்ளாமல் இருப்பதே நல்லது இல்லையா? அதன் காரணமாகத்தான் ஆசை, கோபம், துயரம், கவலை, நோய், வலி, வருத்தம், அழுகை முதலிய விஷயங்கள் பத்திரமாக அந்தப் பெட்டியின் உள்ளே அடைத்து வைக்கப்பட்டிருந்தன. ஆனால், துரதிர்ஷ்டவசமாகப் பண்டோரா அவற்றை வெளியே விட்டுவிட்டாள்!

அந்தத் தொந்தரவுகளை எல்லாம் எபமீதூஸும், பண்டோராவும் வீட்டிற்குள்ளேயே வைத்துக் கொள்ள முடியுமா என்ன? அவை வெளியே தொலையட்டும் என்று எண்ணி அவர்கள் கதவுகளையும், ஜன்னல்களையும் திறந்து விட்டனர்.

சிறகுகளை விரித்துக் கொண்டு துன்பங்களெல்லாம் ஜிவ்வென்று உலகம் முழுவதும் பரவின. குழந்தைகளை எல்லாம் கொட்டின. அதன் பிறகு அந்தப் பிஞ்சு முகங்கள் பல நாட்களுக்குச் சிரிப்பை மறந்தன. களை துறந்தன; ஒளி இழந்தன.

அந்தக் குழந்தைகளுக்கு நாளுக்கு நாள் வயது வளர்ந்தது. அவர்கள் இளைஞர்களாகவும், அடுத்து நடுத்தர வயதினர்களாகவும் மாறினர். முதுமைஎய்தினர். அது மட்டும் அல்ல. அதுவரையில் உலகில் பசுமையாகவே இருந்த இலைகள் பழுக்கத் தொடங்கின; கீழே விழுந்தன. வாடாமலே இருந்த மலர்கள் வாடத் தொடங்கின; உதிர்ந்தன.

பண்டோராவும், எபமீதூஸும் வழக்கம்போல விளையாடப் போகவில்லை. குடிலின் உள்ளேயே தங்கினர். இருவருக்கும், உடலும், உள்ளமும் வலித்தன. உலகம் தொடங்கிய பிறகு முதன்முறையாக உணரப்பட்ட வலி அல்லவா? ஆகவே, அது அவர்களுடைய மனத்தை அரித்தது. இருவருக்கும் கோபம். தங்கள் மீதே கோபம். அடுத்தவர் மீதும் கோபம்.

பண்டோராவைப் பார்க்க விரும்பாத எபமீதூஸ் சுவரைப் பார்த்துக் கொண்டு அறையின் ஒரு மூலையில் அமர்ந்திருந்தான். பிழையை உணர்ந்த பண்டோரா பெரிதாக அழுது கொண்டிருந்தாள். அவளுடைய தலை அந்தப் பொல்லாத பெட்டியின் மேல் மோதியது.

திடீரெனப் பெட்டியின் உட்புறத்திலிருந்து யாரோ மூடியைத் தட்டும் சப்தம்கேட்டது. ஒருசின்ன ஒலி உள்ளிருந்து எழுந்தது.

''யார் நீ? இந்தக் கொடிய பெட்டியின் உள்ளே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?'' பண்டோரா கேட்டாள்.

புத்தகம் பற்றி...

* நல்ல புத்தகங்களைப் படிப்பது, சென்ற நூற்றாண்டுகளில் வாழ்ந்த மிகச் சிறந்த அறிவாளிகளுடன் பேசுவதற்கு ஒப்பாகும்.

— டெஸ்கார்டில்

* சில புத்தகங்கள் வெறுமனே ருசி பார்க்கப்பட வேண்டியவை. மற்றும் சில விழுங்கப்பட வேண்டியவை. மிகச் சிறந்த புத்தகங்களே மென்று தின்று ஜீரணிக்கப்பட வேண்டியவை

— பிரான்ஸிஸ் பேகன்

* காலம் என்னும் ஆழ் கடலில் நீந்துபவருக்கு, விரும்பும் துறைமுகத்தை அடையக் கலங்கரை விளக்கமாக அமைவது அறிஞர்களின் உயர்ந்த நூல்கள்தாம்.

— காண்டேகர்.

தொகுப்பு: அ. நடராஜன், அண்ணாமலைநகர்.





''மூடியைத் திறந்தால் நீயே பார்க்கலாம்!'' ஒலி பதிலளித்தது.

''வேண்டாம், வேண்டாம்! நான் பட்டது போதாதா?'' என்று கூறிப் பண்டோரா தன் அழுகையைத் தொடர்ந்தாள்.

''ஓ, பண்டோரா! என் கண்ணே! என்னை வெளியே விடம்மா! நீ நினைப்பது போல நான் ஒரு கொடிய ஜீவன் அல்ல. என்னை வெளியே விட்டால் உனக்குத்தான் நன்மை!'' என்று அந்த இனிய ஒலி பேசியது. எபமீதூஸும் அதைக் கேட்டான்.

''எபமீதூஸ்! வருவது வரட்டும்! நான் பெட்டியைத் திறக்கப் போகிறேன்!'' பண்டோரா தீர்மானமாகக் கூறினாள். எபமீதூஸ் உதவினான். இருவருமாக மூடியைத் திறந்தனர்.

தேவதையைப் போன்று ஒளிமயமான ஓர் உருவம் பெட்டியின் உள்ளிருந்து பறந்து வந்தது! பண்டோராவின் நெற்றியில் முத்தமிட்டது! உடனே பண்டோராவின் மனத்தில் மகிழ்ச்சி வெள்ளம் பாய்ந்தது! எபமீதூஸிடம்பறந்துசென்றுதன் ஒளிவீசும் விரல்களால் அவனைத் தொட்டது. அவனுடைய வலி எல்லாம் மாயமாக மறைந்தன.

''ஒளி வடிவே! நீ யார்?'' பண்டோரா கேட்டாள்.

''நம்பிக்கை என்று என்னை அழைப்பார்கள். துன்பத்தால் துவளுகிற மனித குலத்திற்கு இன்பம் சேர்ப்பதற்காகவே நான் இந்தப் பெட்டியில் அடைத்து வைக்கப்பட்டேன்.''

''உன் சிறகுகள் வான வில்லைப் போல எழில் வீசுகின்றனவே!''

''ஆமாம், அப்படித்தான்! கண்ணீரையும், களிநகையையும் கூட்டியே நான் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறேன்!''

''நிரந்தரமாக நீ எங்களுடன் தங்குவாயா?'' எபமீதூஸ் கேட்டான்.

''உங்களுக்குத்தேவைப்படும்வரையில் நான் இங்கு தங்குவேன். உங்களைவிட்டுப்பிரியமாட்டேன். என்னை நம்புங்கள். இது உண்மை!'' என்றது ஒளி.

இன்றைக்கும் அது உண்மைதான். நம்பிக்கைதானே நமக்குப் புத்துயிர் அளிக்கிறது?



சோமு படிப்பிலே கெட்டிக்காரன். குணத்திலேயும் தங்கக் கம்பியாகத் தான் முன்பு இருந்தான். ஆனால், இப்போது?

சோமுவின் தெருக்கோடியில் வாசு என்று ஒரு பையன். அவன் தினமும் பள்ளிக்கூடத்திற்குப் புறப்படுவான். ஆனால், அங்கு போய்ச் சேர மாட்டான். வழியில் எங்காவது ஒரு மரத்தடியில் படுத்துத் தூங்குவான்; அல்லது, பள்ளிக்கூடம் போகாத பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடுவான். ஆனால், சாயங்காலம் பள்ளி விடும் நேரத்திற்குச் சரியாக வீட்டுக்கு வந்துவிடுவான்! இப்படி எத்தனை நாட்களுக்குத்தான் களவடிக்க முடியும்? அவன் அப்பாவுக்கு இது தெரிந்ததும், அவர் அவனை அடி அடி என்று அடித்தார். அடி அதிகமாக ஆக அவன் பள்ளிக்கூடம் போவதையே நிறுத்திவிட்டான்; ஊர் சுற்றியானான்.

அந்த வாசு, சோமுவை எப்படியோ சிநேகம் பிடித்துவிட்டான். மாலையில் மணி ஐந்தடித்தால் போதும்; சோமு வீட்டுக்குச் சிறிது தூரத்திலுள்ள அரச மரத்தடியில் வந்து நிற்பான். சோமு அவன் நிற்பதைப் பார்த்ததும், வீட்டிலிருந்து மெதுவாக நழுவி அவன் அருகிலே போவான். இருவரும் ஊருக்குக் கடைசியிலுள்ள மாந்தோப்புக்குப் போய்விடுவார்கள்.

அங்கு போய் மாம்பழங்களைத் திருடித் தின்பார்கள். அத்துடன் அந்தப் பக்கமாகப் பறந்து வரும் பறவைகளையும் குறி பார்த்து அடிப்பான் வாசு. சும்மா அடிக்க மாட்டான். உண்டிவில்லால் அடிப்பான். ஒரு நாளுக்கு ஒன்றிரண்டு பறவைகளையாவது அடிக்காமல் வீடு திரும்ப மாட்டான். இந்த வித்தையை அவன் சோமுவுக்கும் கற்றுக் கொடுக்காமல் இருப்பானா? சோமுவுக்கும், ஓர் உண்டிவில் தயாரித்துக் கொடுத்து, அவனையும் நன்றாகப் பழக்கிவிட்டான்.

காக்கை, குருவி, மைனா, கிளி, கொக்கு இவைகளில் தினமும் இரண்டு மூன்று பறவைகளையாவது அடிக்காமல் அவர்கள் வீடு திரும்ப மாட்டார்கள். இது அவர்களுக்குக் கொண்டாட்டம். ஆனால், பறவைகளுக்கோ? திண்டாட்டம்!

இது எப்படியோ சோமுவின் அப்பாவுக்குத் தெரிந்துவிட்டது. ''சோமு, நீ நல்லாப் படிக்கிறாய். படிப்பு மட்டும் போதுமா? நல்ல குணமும்

வேண்டாமா? அந்த வாசுவோ கெட்ட பையன். படிப்பிலே அக்கறையில்லாதவன். ஊர் சுற்றி. அவனோடே சேர்ந்து பறவைகளை அடிக்கலாமா? உனக்கு அந்தப் பறவைகள் ஒரு கெடுதலும் செய்யாதபோது, அவைகளுக்குத் தொல்லை கொடுக்கலாமா? இனி, வாசுவோடு சேராதே. பறவைகளை அடிக்காதே'' என்று அடிக்கடி புத்திமதி கூறுவார். அப்பா பேச்சைக் கேட்ட சோமு, அடுத்த இரண்டு மூன்று நாட்கள் நல்ல பிள்ளையாக நடந்து கொள்வான்; அப்புறம்?

வாசுவின் பேச்சில் மயங்கி, அவனுடன் மாந்தோப்புக்கு உண்டிவில்லுடன் புறப்பட்டுவிடுவான்!

கோடை விடுமுறை வந்தது. சோமு அந்தக் கிராமத்திலே இருந்தால் கெட்டுப் போய்விடுவான் என்று அவன் அப்பா பயந்தார். ஆகையால், விடுமுறையைக் கழிக்கச் சென்னையிலுள்ள தம்முடைய தம்பி வீட்டுக்கு அவனை அனுப்பி வைத்தார்.

சோமுவின் சித்தப்பா வீடு சென்னை அண்ணா நகரில் இருந்தது. நல்ல பெரிய வீடு. எல்லா வசதிகளும் அங்கே உண்டு.

சோமு சென்னை வருவதை முன்னதாகவே எழுதியிருந்ததால், அவன் சித்தப்பா ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்து, அவனை வீட்டிற்கு அழைத்து வந்தார். வீட்டின் முன்புறம் இருந்த பெரிய வரவேற்பு அறையில் அவனை உட்கார வைத்தார். உடனே, அவனுடைய சித்தி வந்து, அவனை வரவேற்று, காப்பி கொடுத்தாள்.


சோமு காப்பி சாப்பிட்டதும் உடம்பு வியர்த்தது. மேலே நிமிர்ந்து பார்த்தான். அங்கிருந்த மின்விசிறியைக் காணோம்! ''சித்தப்பா, இந்த ஹாலிலே ஒரு ஃபேன் இருக்குமே! எங்கே காணோம்?'' என்று கேட்டான்.


''நீ குளிச்சு சாப்பிடு. அப்புறம் சொல்றேன்,'' என்றார்.

சோமு குளித்து, சாப்பிட்டு முடித்ததும், மின்விசிறியைப் பற்றி மீண்டும் கேட்டான்.

சித்தப்பா ஒரு பெருமூச்சுடன் சொல்ல ஆரம்பித்தார்:

''அதோ பார். அந்த முருகன் படத்துக்குப் பின்னாலே ஒரு குருவி போன மாதம் கூடு கட்டியிருந்துச்சு. கொஞ்ச நாளிலே, அது முட்டையிட்டுக் குஞ்சு





பொரிச்சுது. குஞ்சுகளுக்கு அது தினமும் இரை கொண்டு வந்து கொடுக்கும்.

ஒருநாள் நானும் உன் சித்தியும் இந்த ஹாலிலே உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம். அப்போதுமேலே 'டம்'னு ஒரு சத்தம் கேட்டது. மறு விநாடி கீழே 'தொப்'னு ஓர் ஓசை கேட்டது.

என்னன்னு பார்த்தோம். குஞ்சு களுக்கு இரை எடுத்துக்கிட்டு வந்த அம்மாக் குருவிதான் மேலே சுழன்று கொண்டிருந்த விசிறியிலே அடி பட்டுக் கீழே விழுந்து கிடந்துச்சு! அதைப் பார்த்து நாங்கள் திடுக்கிட் டோம். உடனே நான் ஓடிப்போய் அதைக் கையிலே எடுத்தேன். உற்றுப் பார்த்தோம். கொஞ்சம் உயிர் இருக்கிற மாதிரி தெரிஞ்சுது. உன் சித்தி உடனே ஓடிப் போய்த் தண்ணீர் கொண்டு வந்து, அதன் வாயிலே ஊத்தினாள்; முகத்திலேயும் தெளித்தாள். என்ன! செய்தும் அது பிழைக்கல்லே. செத் துப் போச்சு! அப்போதே நான் விசி றியை நிறுத்திட்டேன்.

தாய்ப் பறவையைக் காணுமே, குஞ்சுகளெல்லாம் அன்னிக்கு இரவு முழுவதும் 'கீச் கீச்'னு கத்திக்கிட்டே இருந்தன. அது பரிதாபமாய்க் கத்து றதைக் கேட்கக் கேட்க எங்களுக்கு ரொம்ப வருத்தமாயிருந்திச்சு.

'நம்ம ஃபேன் அடிச்சுத்தானே தாய்ப் பறவை செத்துப் போச்சு? இந்தப் பாவமெல்லாம் நமக்குத் தானே'ன்னு துக்கப்பட்டோம். அன் னைக்கு நானும் சாப்பிடல்லே. உன் சித்தியும் சாப்பிடல்லே. ராத்திரி வெகு நேரம் விழிச்சிருந்தோம். அப் புறம் அப்படியே ஹாலிலே தூங்கிட் டோம்.

அதிகாலையிலே முழிச்சுப் பார்த் தோம். சத்தத்தைக் காணும். கத்திக் கத்தி ஓய்ந்து போச்சோன்னு நினைச் சோம்.

அப்போ, ஒரு பெரிய பறவை படத் துக்குப் பின்னாலேயிருந்து பறந்து வந்ததைப் பார்த்தோம். குஞ்சுகள் கத்துறதைக் கேட்டு, வேறே ஒரு தாய்ப் பறவை இரை கொண்டு வந்து கொடுத் திருக்கணும்னு நினைச்சோம். இரை யைத்தான் அது கொடுத்திடுச்சு; செத் துப் போன அம்மாவைக் கொடுக்க முடியுமா?

தினமும் அந்தப் பெரிய பறவை வந்து குஞ்சுகளுக்கு இரை கொடுத் திச்சு. கொஞ்ச நாளிலே குஞ்சுகளுக்கு இறக்கை முளைச்சுப் பறந்து போயி டுச்சு.

அம்மாக் குருவி செத்ததிலேயிருந்து நாங்க ஃபேனைப் போடாமலே இருந் தோம். அந்தக் குஞ்சுகள் பறந்து போன துக்கப்புறம், வேறொரு குருவி அடிக் கடி வந்து அதே படத்துக்குப் பின் னாலே உட்காருது. அதுவும் அங்கேயே முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கப் போகுதுன்னு தெரிஞ்சுக்கிட்டோம்.

நாங்க ஃபேனைப் போட மாட் டோம். ஆனால், யாரும் புதுசா வரு கிறவங்க ஃபேனைப் போட்டுட்டால்...? இந்தக் குருவிக்கும் ஆபத்தாயிடுமே! அதனாலே ஃபேனைக் கழற்றி உள் அறைக்குள்ளே வச்சுட்டோம்.''

சித்தப்பா சொன்னதைக் கேட்கக் கேட்க, சோமுவுக்கு ரொம்ப வருத்தமாக இருந்தது. 'தாய்ப் பறவை இறந்ததும், அந்தக் குஞ்சுகளெல்லாம் என்ன பாடுபட்டிருக்கும்? எப்படிப் பசியாலே துடிதுடிச்சிருக்கும்? அதுகளுக்காக நம்ம சித்தப்பாவும் சித்தியும் எவ்வளவு கவலைப்பட்டிருக்காங்க! அடுத்த குருவி அடிபடக் கூடாதேன்னு ஃபேனையே கழற்றி வச்சிட்டாங்களே!' என்று நினைத்துப் பார்த்தான். கண்கள் கலங்கின.

சித்தப்பாவின் வீட்டிலே இருந்த இருபது நாட்களும் சோமு, தான் செய்த தப்பை நினைத்து நினைத்து வருத்தப்பட்டான்.

ஊருக்குத் திரும்பினானோ இல்லையோ, முதல் வேலையாக அந்த உண்டி வில்லை எடுத்துக் கொண்டு நேராக வாசு வீட்டுக்கு எதிரிலே போய் நின்றான். சோமுவைக் கண்டதும், வாசு அவனைக் குதூகலமாக வரவேற்றான்.

''சீ, பன்றியோடு சேர்ந்த கன்றும் கெடும்னு என் அப்பா அடிக்கடி சொல்லுவாங்க. உன்னோடே சேர்ந்து நானும் புத்தி கெட்டுப் போனேன். ஐயோ! எத்தனை பறவைகளைத் துடி துடிக்கக் கொன்னுட்டேன்! அதுகளுடைய குஞ்சுகள், என்ன பாடுபட்டிருக்கும்? இனிமேல், இந்த உண்டி வில்லுக்கு வேலையில்லை'' என்று ஆவேசம் வந்தவன் போல் பேசிவிட்டு அந்த உண்டி வில்லை அங்கே கிடந்த ஒரு கல்லின் மேலே வைத்தான். இன்னொரு கல்லாலே அதைத் தூள் தூளாக உடைத்தான்.

''உண்டி வில் முறிஞ்ச மாதிரி நம்ம சிநேகமும் இன்னியோடு முறிஞ்சுது'' என்று சொல்லிவிட்டு வேக வேகமாக வீட்டுக்குத் திரும்பினான். பிறகுதான், அவன் மனம் ஓரளவு நிம்மதி அடைந்தது.

விடுகதைகள்

1. இரவிலே ஒளி வீசும் கண்களுண்டு; பாய்ந்து வரும்; நிற்பதற்கும் ஓடுதற்கும் கால்கள் உண்டு. வால் இல்லை; வாய் உண்டு; குடிப்பதற்கு நீர் வேண்டும்; சுமை தாங்கும் உடல் உண்டு. அது என்ன?

2. எங்களப்பன் செந்தலை, செந்தலை. எங்களாத்தாள் முழுமொட்டை. முழுமொட்டை வயிற்றிலே கொழுக்கட்டை. கொழுக்கட்டை வயிற்றிலே கீச்சு, கீச்சு. அது என்ன?

விடை: 1. லாரி, 2. கோழிக் குஞ்சு.

— ப. தினேஷ்குமார் (3321), புரசைவாக்கம்.

பாரதி புதிர்–11–விடை

ஓங்கி வளர்ந்ததோர் கம்பம் — அதன்
உச்சியின் மேல் 'வந்தே மாதரம்' என்றே
பாங்கின் எழுதித் திகழும் — செய்ய
பட்டொளி வீசிப் பறந்தது பாரீர்.

(பாடல்: தாயின் மணிக்கொடி பாரீர்)

1. மணிப்புரி நடனம்
2. 18, 19, 20, 21, 22
3. லாமா.
4. ஸ்ரீராமர்
5. நீங்களே கண்டுபிடிக்கலாமே!

சித்திரப் புதிர்–12 விடைகள்

உங்களுக்குத் தெரியுமா?

விமலன்



உலகில் அதிக தூரம் தாண்டும் விலங்கு கங்காரு, தாண்டும் தூரம் 42 அடிகள். இது ஒலிம்பிக் ரிக்-கார்டை விட அதிகம்.


சிறுத்தை மணிக்கு 70 மைல் வேகத்தில் ஓடுமாம். இதுதான் மிருகங்களில் அதி வேகமாக ஓடும் மிருகமாம்.




நாய் தன் உடலின் எப்பகுதியில் அடிபட்டாலும் தனது பின்னங் கால்களைத் தூக்கிக் கொண்டு கத்தும் மனநிலையுடையது.



உலகின் அதிக நீளமும் எடையுமுள்ள கடல் பிராணி நீலச் சுறவாகும் நீளம் 106 அடி, எடை 195 டன்கள் கொண்டது.






முதலைகளின் உடலில் உள்ள தேவையில்லா உப்பு நீரை கண் வழியாக வெளியேற்றும். இதனையே முதலைக் கண்ணீர் என்கிறோம்.

மயக்கம் தெளிந்தது!

அரசு மணிமேகலை



"பாலா! பாலாக் கண்ணு! பொங்கல் சாப்பிட வாடா கண்ணு!"

அன்பாக அழைத்தார் அப்பா.

எட்டாம் வகுப்பு படிக்கிற பாலா எரிச்சலும், ஆத்திரமுமாய் எழுந்தாள்.

"எனக்குப் பொங்கலும் வேணாம்! ஒண்ணும் வேணாம்! நான் பள்ளிக்கூடம் கிளம்பறேன்."

யார்முகத்தையும்பார்க்காமல் 'விடு விடு'வென்று கிளம்பினாள்.

அப்பா திகைத்தார். பாலா இப்படித் திமிராகப் பேசுகிறவள் இல்லை.

அம்மா கோபத்துடன் சமையற்கட்டிலிருந்து வந்து வெளியே எட்டிப் பார்த்தாள்.

அப்பா கெஞ்சினார்.

"பாலாக் கண்ணு! என்னம்மா கோபம்? ஏன் கண்ணு சாப்பிடாமே போறே?"

"எனக்கொண்ணும் கோபமில்லை. எனக்கு ஸ்கூலுக்கு நேரமாயிட்டுது. மத்தியானம் வந்து சாப்பிட்டுக்கறேன்."

முகஞ்சுளித்தவாறே பாலா கிளம்பினாள்.

"ஏம்மா! சாப்பிடாமே போனா..."

அப்பா கூப்பிடக் கூப்பிட, அவசரமாக வெளியே நடந்தாள் பாலா.

அம்மா வந்து வாசலில் நின்றாள்.

இவரானால், இப்படிக் கெஞ்சிக் கெஞ்சி, சாப்பிட அழைக்கிறார். இவள் என்னவோ அப்படித் திமிராக நடக்கிறாளே...

"எதுக்குஅந்தக்கழுதையைஅப்படி நீங்க கெஞ்சணும்? பசிச்சா மத்தியானம் வந்து சாப்பிடறா?"

"அதுக்கு இல்லே வள்ளி... பாலாவுக்குப் பொங்கல்னா உசிராச்சே! அது தான்., குழந்தை அப்பா அப்பான்னு ஆசையா சுத்தி வருவா! இந்த ரெண்டு நாளா என்ன ஆச்சு?"

"அது என்னவோ தெரியலைங்க... ரெண்டு நாளாத்தான் இப்படிக் கடுகடுன்னு இருக்கிறா... பாடம் கூட, சரியாப் படிக்கிறதில்லை!"

"வள்ளி, குழந்தைகள் வளர வளர அறிவும் அடக்கமும் வளரணும்! இந்தப் பொண்ணு நான் சொல்லச் சொல்ல, எதுவுமே பேசாமே போகுதே... இதுங்க என்னத்தைக் கத்துக்கறாங்களோ பள்ளிக்கூடம் போயி..."

தளர்ந்து போய் உட்கார்ந்தார்.

"நீங்க கிளம்புங்க ஆபீசுக்கு! இதுக்குப் போய்க் கவலைப்பட்டுக்கிட்டு... நான் விசாரிக்கிறேன்!"

"விசாரிக்கிறேன்னு சொல்லிட்டு குழந்தையை அடிச்சுடக் கிடிச்சுடப் போறே..."

"குழந்தை... இடுப்பிலே தூக்கி



வெச்சுக்கிட்டுக் கொஞ்சுங்க...''
வள்ளி கிண்டல் செய்தாள்.

• • •

மத்தியான வேளை வந்தது. ஆனல், பாலா சாப்பாட்டிற்கு வரவில்லை.

பள்ளி முடிந்து மூன்று மணிக்கு வழக்கம் போல, வந்து சேர்ந்தாள்.

அதே சிடுசிடுப்பு... வாசலில் செருப்புக்களை உதற, மூலைக்கொன்ருய்ப் போய் விழுந்தன.

பையைத் தூக்கி, சுவர் ஓரமாய் எறிந்தாள்.

வள்ளி ஒரு வார்த்தையும் பேசாமல் சாப்பாட்டைப் போட்டு வைத்து விட்டு, கூடத்திற்கு வந்துவிட்டாள்.

சற்று நேரத்தில் சாப்பிட்டு முடித்து விட்டு, கையைக் கழுவிக் கொண்டு வெளியே வந்தாள் பாலா.

''இப்பச் சொல்லு...'' வள்ளி கேட்டாள்.

''என்னம்மா?''

''பின்னே என்ன பாலா? ரெண்டு நாளா என்னவோ சிடுசிடுன்னு அப்படி எரிஞ்சு விழறே?''

''ம்! ஏன் எரிஞ்சு விழ மாட்டேன்? நம்ம வீட்டுலே ஒரு கலர் டீ. வி., ஒரு வீடியோ உண்டா? ஒரு கார்தான் இருக்கா? அட! இருக்கிற வீடாவது அழகா இருக்கா?''

அம்மா நொடியில் புரிந்து கொண்டாள். ''அட மக்கு! கார் இல்லே, டீ. வி. இல்லே, வீடியோ இல்லேன்னு அது வீடே இல்லேன்னு ஆயிடுமா?''

''பின்னே என்னவாம்! ம்! கொடுத்து வெச்சவங்களுக்குத்தானே அதெல்லாம் கிடைக்கும்?''

''அப்படி நினைக்கிறது தப்பம்மா! கார், பங்களா இருந்தா, சந்தோஷம் தானு வந்திடும்னு நினைக்காதே! ஒண்ணு இருந்தா ஒண்ணு இருக்காது! அதுதான் வாழ்க்கை பாலா...''

''ஆமாம்! நீ இப்படித்தான் சொல்வே! என் கிளாஸ் அனுபமா காரைப் பாரு! அப்படியே அசந்து போயிடுவே... படகாட்டம் என்ன பிரும்மாண்டமான கார் தெரியுமா?''

''ஓ! பிளாஸ்டிக் இண்டஸ்ட்ரீஸ் ராஜ்குமார் பொண்ணு அனுபமாவா? அவ அம்மா ஷீலா என் ஃப்ரெண்டு தான்...''

''அம்மா! அம்மா! ப்ளீஸ்! அவங்க வீட்டுக்கு ஒருநாள் போய்ட்டு வரலாமா?''

அம்மா மனத்திற்குள் சிரித்துக் கொண்டாள். பங்களாவைப் பார்க்க ஆசைப்படுகிருள். அதன் பணக்காரத்தனத்தைப் பார்க்க ஏங்குகிருள்.

''ஒரு நாள் என்ன? இன்னிக்கே போலாம்மா பாலா! கிளம்பு.''

• • •

சிவப்புச் சூடிதாரில் பளபளப்புடன் கிளம்பினுள் பாலா.

நுங்கம்பாக்கத்தில் பெரிய பங்களா. எப்படியும் ஏழு கிரவுண்ட் இருக்கும். முன்னே அழகான புல் வெளி!

வள்ளியும், பாலாவும் உள்ளே நுழைந்தார்கள்.

வாசலில் இரண்டு கார்கள்... அட்டகாசமாக 'செண்ட்' மணக்க ராஜ்குமார் வந்தார்.

அவருக்கு மிக அருகிலே தோளுடன் தோள் உரச ஒரு பெண்மணியும் கூடவே வந்து, காரில் ஏறிக் கொண்

டாள். அவள் ஏதோ சொல்ல, அனுபமா அப்பா அப்படி விழுந்து விழுந்து சிரித்தார். கார் பறந்தது.

''ஐயையோ! பாலாவோட அப்பாவும், அம்மாவும் வெளியிலே கிளம்பிட்டாங்க போல இருக்குதே...!''

அதே புன்னகையுடன் வள்ளி உள்ளே நடந்தாள்.

''வா, வா! வாம்மா வள்ளி!''

ஓடி வந்து வரவேற்ருர் ஒரு பெண்மணி. அனுபமா ஓடிவந்து, ''ஹாய்'' என்ருள்.

''என்ன ஷீலா உன் கணவர் வெளியிலே கிளம்பிட்டாரா?''

''ஆமாம் வள்ளி! இப்ப மணி என்ன? நாலரையா? ம்! திரும்பி வர்றப்போ இரவு மணி ஒண்ணுகுதோ, ரெண்டாகுதோ? கண்ட இடம் — கண்ட பார்ட்டி! ம்! உனக்குத்தான் என் நிலைமை தெரியுமே?''

பாலா குழம்பித் தவித்தாள். இவர்கள் தான் அனுபமாவின் அம்மாவா? அப்படியானல் காரில் கூடச் சென்றது யார்?

''ஆமாம்ஷீலா! நீ என்ன இளைச்சுப் போயிருக்கே? டாக்டர் கிட்டே அவரைக் கூட்டிக்கிட்டுப் போகச் சொல்றதுதானே?''

''அவரா? உடனே வந்திடுவாரா? என்னை டாக்டர் கிட்டே கூட்டிக்கிட்டுப் போக அவருக்கு ஏது நேரம்? இதோ இவ கிட்டே அன்பா நின்னு பேசி எத்தனை மாசமாச்சு தெரியுமா?''

பாலா அனுபமாவைத் திரும்பிப் பார்த்தாள்.


அனுபமா கண்ணில் கடல் அளவு சோகம். ஓ! இவளுக்கும் கூடவா ஏக்கம்?

பாலா அவளையே பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள்.

''அன்னிக்கு அனுபமா ஸ்கூல் டிராமாவிலே நடிச்சா. அதைப் பார்க்க அவங்க அப்பாவை வரச் சொல்லி, அப்படிக் கெஞ்சினு... அவருக்கு எங்கே இதெல்லாம் ஞாபகம் இருக்கப் போகுது? வழக்கப்படி ராத்திரி பன்னிரண்டு மணிக்கு வந்து நின்ருர்.''

அனுபமாவின் அம்மா பேசிக் கொண்டே போனுள்.

பாலாவுக்குப் பங்களாவின்



வெறுமை எதையோ உணர்த்திற்று. அங்கே எல்லாப் பொருட்களும் இருந்தன. இல்லாதது ஒன்று மட்டுமே. ஆம்! மகிழ்ச்சியை மட்டுமே காணோம்!

அனுபமா பாலாவை மாடிக்கு அழைத்துச் சென்றாள். "ம்! உன் பாடு ஜாலி பாலா! உங்க அப்பா, அம்மா அன்னிக்கு டிராமா முடியறவரைக்கும் இருந்து உன்னை ஆட்டோவிலே கூட்டிக்கிட்டுப் போனாங்க இல்லே! நடுவிலே நீ ஜம்முன்னு ஒக்காந்துக்கிட்டுப் போனே! எத்தனை சினிமா, எத்தனை டிராமா நீ அப்பா அம்மாவோட போறே? எங்கப்பாவோட நான் எங்கேயுமே போனதில்லே?"

"ஒங்கம்மா எங்கேயும் கூட்டிக்கிட்டுப் போக மாட்டாங்களா?"

"அப்பா வீட்டிலே தங்கறதில்லே. அங்கே இங்கே அலையறது அம்மாவுக்குக் கொஞ்சங் கூடப் பிடிக்கலே. எந்நேரமும் சண்டை, அடிக்கடி அழுகைதான்! ம்! இந்த வீடே எனக்குப் பிடிக்கலே..."

மெள்ள ஏதேதோ புலம்பினாள் அனுபமா.

° ° °

வீட்டுக்குத் திரும்பும்போது மனது இலேசாகியிருந்தது.


"ஏம்மா? அப்பா வந்துட்டிருப்பார் இல்லையாம்மா?"

ஆவலுடன் கேட்டாள் பாலா.

தற்காலிக மயக்கம் தெளிந்து விட்டது என்பதைப் புரிந்து கொண்டாள் வள்ளி.

அவள் உதடுகளில் ஆனந்தப் புன்னகை மிளிர்ந்தது.

இராஜபாளையம் கோகுலம் சிறுவர் சங்கம்



இராஜபாளையம் கோகுலம் சிறுவர் சங்கம், குழந்தைக் கவிஞர் வள்ளியப்பா மணிமலர் மன்றம் இரண்டும் சேர்ந்து தங்களின் மூன்றாவது ஆண்டு விழாவை, காந்தி கலை மன்றத்தில் சிறப்பாகக் கொண்டாடின. அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் டாக்டர் விக்கிரமன் தலைமை தாங்க, சங்க உறுப்பினர்கள் கொ. மா. கோ. இளங்கோவும், ஜெ. முத்துக்குமாரும் தங்கள் கவிதைகளை அரங்கேற்றினர். பாரதி பாடலை செல்வி உமாவும், குழந்தைக் கவிஞர் பாடலை செல்வி மீராவும் பாடினார்கள்.

கல்லூரி முதல்வர் டாக்டர் வேங்கடேசன், பன்மொழிப் புலவர் மு. கு. ஜெகந்நாத ராஜா, டாக்டர் கு. கணேசன், கவிஞர் ரா. பொன்ராசன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

எழுத்தாளர் பூ. அ. துரைராஜா, கம்பன் கழகத் தலைவர் S.M.R.D. ராமசுப்பிரமணிய ராஜா, ஆனந்தாஸ் பீமராஜா, மு. சிவம், N. S. முத்துக்கிருஷ்ண ராஜா, குன்றக்குடி பெரிய பெருமாள் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

அமைப்பாளரான கவிஞர் கொ. ம. கோதண்டமும், கோ. குறளமுதனும் விழாவின் வெற்றிக்குப் பெரிதும் பாடுபட்டனர்.



அக்கினி பூதம்

தங்கமணி

6. அக்கினி மலையில் ஐவரும் ஏறினர்!

மலைக் கழுகுகள் சண்டைபோட்டு ஓய்ந்த பிறகு—

இடியோசை அடங்கிய மாதிரி—

பூகம்பம் தணிந்த மாதிரி—

அமைதி தவழ்ந்தது!

எல்லோரும் வந்தார்கள்; பார்த்தார்கள். அக்கினி மலைச் சரிவை, யாரோ துப்புரவுசெய்தமாதிரி வெறும் செம்மணல் சரிவாகக் காட்சியளித்தது!

''அட.....!'' ஆச்சரியமாய்க் கூவினான் ஆதி.

''கழுகுகளுக்கு நன்றி!'' என்றான் வால்மீகி.

ஆற்றங்கரையில் சரிந்து புரண்டு குவிந்திருக்கிற பாறைகளுக்கு இடையில், நசுங்கிச் சிதைந்து காணும் கழுகுகளைப் பார்த்து, ''பாவம்...!'' என்று உருக்கமுடன் அனுதாபப்பட்டாள், வீராயி.

அனலும் கனலும் பொறி பறக்க அக்கினியாய்ப் பொழியும் சூரிய கோளம், உச்சிவானை விட்டு மேற்குச் சரிவில் நழுவிக் கொண்டிருந்தது.

ஆதி, இத்தனை நேரமும் கவனிக்கவில்லை. அப்போதுதான் பார்த்தான். பார்த்தவுடனே, நெஞ்சம் துள்ளிக் குதித்தது! ''ஓ...! இந்த மலைக் கழுகுகளின் காட்டுமிராண்டித்தனமான சண்டையினால், முதலைகள் நிறைந்த இந்த ஆற்றங்கரைக்கு மேலே...'' என்றுமேலும்சொல்லுவதற்குள்ளே—

எல்லோரும் அதைக் கவனித்து விட்டார்கள்!

எதை...?

மலைச் சரிவில் உருண்டோடிப் பாய்ந்து வந்த பிரும்மாண்டமான பாறைகள் அடிவாரத்திலுள்ள ஆற்றங்கரையின் அசோக மரங்களை, 'மடேர்! மடேர்...!' என்று மோதி இடித்து வேரோடு சாய்த்திருந்தன. அம்மரங்கள், ஆற்றுக்குக் குறுக்கே, பாலம்போல விழுந்து கிடந்தன!

மரப் பாலத்தைக் கண்டதும்—

''புலே...!'' என்று மகிழ்ச்சிப் பெருக்குடன் கூவிக் குதித்தவாறே தாவியோடினாள். அசோக மரத்தின் மீதேறி, ஆற்றைக் கடந்து சென்றாள், வீராயி. அவளைத் தொடர்ந்து எல்லோரும் அக்கரைக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

ஓரிரண்டு விநாடி நேரம், மலைச் சரிவை மேலும் கீழுமாய்க் கவனித்த பீமன், ''ம், ஏறலாமா...?'' என்றான்.

''சூரியன் மறைவதற்குள், உச்சிக்குப் போய்விட வேண்டும், ம்...

ஏறுங்கள்...!'' என்றவாறே முன்னே நடந்தான், நாகன்.

''வேண்டாம், நில்...'' என்றான், வால்மீகி.

''ஏன்...?'' என்றான், ஆதி.

''எதற்காக...?'' என்றாள், வீராயி.

வால்மீகி, என்னவோ தயக்கத்துடன் அங்கும் இங்குமாய்ப் பார்த்தான். அவனது திருதிருக்கிற விழிகளைப் பார்த்து, ''என்னடா, பார்க்கிறாய்...?'' என்றான், ஆதி.

வால்மீகி, அதிர்ச்சியுடன் கேட்டான்: ''பீமன் எங்கே...?''

மறுநொடி —

தங்களுக்குள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டு, ''ஆமாம், பீமன் எங்கே...? பீமன் எங்கே...?'' என்று எல்லோரும் ஏக காலத்தில் கூவியபடியே, அப்படியும் இப்படியுமாகப் பார்த்...

''அதோ...!'' எனக் கிறீச்சிட்டாள், வீராயி.

பார்த்தார்கள்.

தென்னை மரக்கிடை தூரத்தில் —

அக்கினி மலையை ஒட்டி உயர்ந்திருக்கிற சிக்கிமுக்கிக் கல் பாறைகளுக்கு அடியில், மண்ணிலும் கல்லிலுமாகப் படர்ந்துவெகுதூரத்திற்குச் செழித்துப் பரவியுள்ள கொடிகளுக்கு நடுவில், இடையளவு உயரமுள்ள ஒரு கருங்கல் பாறையில் அமர்ந்து, எதையோ தின்று கொண்டிருந்தான், பீமன்...!

அவனைக் கண்டதும் —

''அங்கே போய்... தன்னந்தனியே எதைத் தின்று கொண்டிருக்கிறாய்..?'' எனக் கேட்டவாறே, அவனை நோக்கி நடந்தான் ஆதி.

''ஹூம்!... சோம்பேறிக்குப் புசிக்கக் கிடைக்கிற வேளையில், பசி இருக்காது! பசித்திருக்கிற வேளையில், புசிக்கக் கிடைக்காது! — என்பார்கள். அந்த மாதிரி... இந்தப் பயங்கர மலைச்



சரிவில் எப்படி ஏறுவது? மலையின் மீது எப்போது போவது? — என்று நாம்எல்லோரும்தத்தளித்துக்கொண் டிருக்கையில், இந்தத் தடியன் மட்டும் பசிக்குத் தீனி ஏதேனும் கிடைக்குமா? இரை எங்கேயாவது அகப்படுமா? — என்று அலைகிறான்...!'' குறும்பாகச் சிரித்தாள், வீராயி.

''பசி வந்தால் பத்தும் பறக்கும் என்பது பழமொழி. பத்து மட்டும் அல்ல—நூறு இருந்தால்கூடப் பாய்ந்து பறந்தோடி விடும்...!'' புன்சிரிப் புடன் சொல்லிய பீமன், கையிலிருக் கும் முலாம் பழத்தைக் கவ்விக் குதப்பி விழுங்கினான்.

எல்லாரும் வந்தார்கள்.


பசுமையாகப் பரந்து படர்ந்திருக் கிற கொடியில் அங்கும் இங்கும் குண்டு குண்டாய்க் காணும் முலாம் பழங்களை, ஆளுக்கு ஒன்றாகப் பறித் தார்கள். பட்டினித் துடிப்பும், பசித் தவிப்புமாகச் சாப்பிடத் தொடங்கி னார்கள்.

பத்துப் பதினைந்து நிமிஷங்களுக் குள் —

வெயில்வெம்மைதணியத்தொடங் கியது.

எல்லோரும் பசியாறிய தெம்புடன் மலைச் சரிவுக்கு வந்தார்கள். வால்மீகி, எல்லோரிடமிருந்தும்கயிற்றுச்சுருளை களை வாங்கினான். பிரித்தான். கயிற் றின் முனைகளை இணைத்து இறுக்கமாக முடியிட்டு, ஒரே நீளக் கயிறாக்கினான். அப்புறம், எல்லோரிடமிருந்தும் கைத் தடிகளை வாங்கினான். தடிகளை ஒன் றாகச் சேர்த்து, கயிற்றின் முனையில்





ஹெல்மெட் எங்கே?

''இந்தா! நீ கேட்ட பொம்மை ஸ்கூட்டர்!''

''இதைத் தந்தால் மட்டும் போதுமா? ஹெல்மெட் எங்கே?"

—சுதர்ஸன்.

சுருட்டிக் கட்டினான். மற்றொரு முனையைத் தனது இடுப்பைச் சுற்றிக் கட்டிக் கொண்டான். ''எல்லோரும் இங்கேயே நில்லுங்கள். முதலில், நான் மட்டும் சரிவில் ஏறிப் போகிறேன். சரிவில் ஏறி உச்சிக்குப் போனதும், நீங்கள் ஒவ்வொருவராக ஏறி வாருங்கள்...'' எனச் சொல்லிவிட்டுப் போனான். மலைச் சரிவில் ஏறினான். கரடி மாதிரி, குரங்கு மாதிரி கைகளையும், கால்களையும் ஊன்றிப் பற்றிக் குனிந்தபடியே மெல்ல மெல்ல நகர்ந்து நகர்ந்து, நழுவி நழுவிச் சென்றான்.

சற்று நேரத்திற்குள் —

சுமார் முப்பது, முப்பத்தைந்து மீட்டர் உயரமுள்ள நெட்டுக் குத்தான மலைச்சரிவைத் திறமையும், தீரமுமாக ஏறிய வால்மீகி, இன்னும் ஒரு பத்துப் பதினொரு அடிச் சரிவைக் கடந்து கொண்டிருக்கும்போது...

திடீரென்று கால் வழுக்கியது!

ஆ...!

'சாண் ஏறினால் முழம் சறுக்கும்!' என்பார்களே,

'வரவு எட்டணா, செலவு பத்தணா!' என்பார்களே;

அந்த மாதிரி —

நெட்டுக் குத்தான, பயங்கர மலைச் சரிவைத் திறமும் தீரமுமாக, உரமும் ஊக்கமுமாக ஏறிப் பெரும் பகுதியைக் கடந்த வால்மீகி, உச்சியை நெருங்குகிற சமயத்தில் —

கைப்பிடி வழுவி —

கால் தடம் நழுவி —

தடம் மாறி, இடம் மாறிச் சரசரவெனப் புரண்டு, உருண்டு விழுந்...

ஓரிரண்டு மீட்டர் தூரம் சரிந்து விழுந்த வால்மீகி, நிதானத்தை இழக்கவில்லை. நெஞ்சுரத்தை மறக்கவில்லை. செம்மண் சரிவில் அங்கும் இங்குமாய்க் கொத்துக் கொத்தாய் காணும் கோரைப் புற்களை, எம்பித் தாவி எட்டிப் பிடித்துக் கொண்டு, சமாளித்தான். நொடி நேரத்திற்குள் தன்னைச் சுதாரித்துக் கொண்டு மீண்டும் ஏறினான். சரிவைக் கவ்வியபடி மார்பை நெளித்து, மெல்ல மெல்ல ஊர்ந்து நகர்ந்து, பையப் பைய ஏறினான்... ஏறினான். ஏறினான்...

நாலைந்து நிமிஷங்களுக்குள் —

சரிவைக் கடந்து, மலை உச்சியில் கவிழ்ந்து தாவி, பாறைத் தடத்தில் துள்ளி எழுந்து, நின்றான், வால்மீகி.

மறுநொடி —

மலைச்சரிவில் எதிர்பாராமல் நிகழ்ந்த விபத்திலிருந்தும், விபத்தினால் நேரக்கிடந்த உயிராபத்திலிருந்தும்அறிவாற்றலுடன் தப்பி, மலை உச்சியில் செம்மண் புழுதியும், சிரிப்புமாக நிற்கிற வால்மீகியைப் பார்த்ததும் —

நெஞ்சமெல்லாம் திகில் குமுற, நேத்திரமெல்லாம் நீர் ததும்ப, சரிவின் அடிவாரத்தில் நின்று, கனலில் விழுந்த புழுவாய்த் துடித்துக் கொண்டிருந்தவர்களுள், உணர்ச்சி கொந்தளிக்கக்கூவினான், ஆதி: ''வால்மீகி வாழ்க...!''

அடுத்த நொடியே பேரானந்தக் கொந்தளிப்புடன் ஆவேசமாய்க்கிறீச்சிட்டாள், வீராயி: ''வீராதி வீரன் வால்மீகி வாழ்க! வாழ்க!''

அவர்களது பெருமிதமான கூக்குரலைக் கேட்ட வால்மீகி, சிரித்தான். ''கள்ளங்கபடமற்ற நம்மைப் போன்ற சிறுவர், சிறுமியருக்கெல்லாம்கடவுள் நிச்சயமாகக் கருணை காட்டுவார்..!'' எனக் கைகுவித்துக் கடவுளை நம்பிக் கும்பிட்டான். அப்புறம், மலை உச்சியைச் சுற்றும்முற்றும் கவனித்தான்.

அருகில், கூம்பு வடிவிலிருக்கிற செம் பூராங்கல் பாறையைப் பார்த்தான்: உடனே, தனது இடுப்பைச் சுற்றிப் பிணைத்திருக்கிற கயிற்றை அவிழ்த்தான். செம்பூராங்கல் கூம்பைச் சுற்றி இறுக்கிக் கட்டிவிட்டு வந்தான். அடிவாரத்தில்நிற்கிற தனது தோழர்களைப் பார்த்தான். ''எல்லோரும் கயிற்றைப் பற்றிக் கொண்டு, ஒவ்வொருவராக ஏறி வாருங்கள்...!'' எனக் கூவினான்.

உடனே —

வீராயி,

நாகன்,

ஆதி,

பீமன்.

என ஒவ்வொருவராகக் கயிற்றைப் பற்றிக் கொண்டு மெல்ல மெல்ல ஏறி, மலை உச்சியை அடைந்தார்கள். பிறகு, சரிவில் தொங்குகிற கயிற்றை இழுத்து, மறுமுனையில் சுருட்டிக் கட்டப்பட்டிருக்கிற கைத்தடிகளை அவிழ்த்து, ஆளுக்குஒன்றாகக்கொடுத்தான், ஆதி. எல்லோரும் சேர்ந்து, நெடுங்கயிற்றின் இடையிடையே காணும் முடிச்சுக்களை அவிழ்த்தார்கள். ஆளுக்கு ஒரு கயிறாகப் பிரித்து வளையமாகச் சுருட்டித் தோளில் மாட்டிக் கொண்டார்கள்.

வெயிலில் மஞ்சள் ஊடுருவியது.

எல்லோரும் நடந்தார்கள்.

கல்லும், கரடும், புல்லும் செடியுமாகச் செருமிக் கிடக்கிற மலைப் பூமியில், அப்படியும் இப்படியுமாகப் பராக்குப்பார்த்தபடியேநடந்தார்கள்.

சற்றுத் தூரம் சென்றதும் —

ஒரு தென்னை மர உயரத்திற்குப் பிரும்மாண்டமான கருநீலப் பாறைகள் அடுக்கு அடுக்காகக் குவிந்து கிடந்தன. அவைகளைப்பார்த்ததும் —

''இப்போது நாம் இருப்பது, அக்கினி மலைச் சரிவின் ஒரு பகுதிதான்... இந்த மலைப் பாறைகளை ஏறிக் கடந்தால்தான், அக்கினி மலையின் சிகரத்தை அடைவோம்...'' என்று என்னவோ தீவிர யோசனையுடன் சொன்னான்; ஆதி.

''ம்... ஏறலாம் வாருங்கள்...'' என்றாள், வீராயி.

அடுத்த நொடி —

குபுகுபுவெனத் திரண்டு வந்த வெண்ணிற மேகப்படலங்கள், பாறைகளைத் தழுவித் தவழ்ந்து, மலைச் சிகரத்தில் நழுவி நகர்ந்து, ஊர்ந்து மிதந்து போயின.

மேகங்களைப் பார்த்து —

எல்லோரும் வியப்பில் அமுங்கித் திணறினார்கள்!

''ம்... இருட்டுகிற நேரமாயிற்று. பாறைகளை ஏறிக் கடந்து உச்சிக்குப் போய்விடலாம், வாருங்கள்...!'' எனத் துரிதப்படுத்தினான், பீமன்.

உடனே —

எல்லோரும் சுருக்காகப் பாய்ந்தார்கள். மலைப்பாறைகளில் ஏறினார்



கள். கவ்விப் பிடித்துத் தாவித் தழுவி, எம்பிக் குதித்து, எகிறிப் பறந்து, நழுவி நகர்ந்து ஏறினார்கள்... ஏறினார்கள்... ஏறினார்கள்...

இருபது, இருபத்தைந்து நிமிஷங்களுக்குள்

பாறைகளை ஏறிக் கடந்து, மலை உச்சியின் சமதளமான பூமியை அடைந்து, சுற்றுப்புறச் சூழ்நிலைகளை எச்சரிக்கையுடன் கவனித்தார்கள்.

நிழலில் இருள் படர்ந்தது.

"மலை உச்சிக்கு வந்தாயிற்று. இன்றைய இரவை, இந்த உச்சிப் பூமியிலே கழித்த பிறகு, காலையில்... அக்கினி பூதத்தைச் சந்திப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்..." என்று ஏதோ ஒரு புத்துணர்வுடன் சொன்னான், பீமன்.

"ஹூம்ம்...!" நெடிய பெருமூச் செறிந்த ஆதி, முகத்தில் குறுஞ்சிரிப்பும், அகத்தில் குறுகுறுப்புமாகச் சொன்னான்: "வந்து... எனக்கு... ஆகாச வெளியிலே, அந்தரத்திலே இருக்கிற மாதிரி தோன்றுகிறது...!"

"டேய்..." குளிர்ந்த காற்றில் தவழ்ந்து வந்த மெல்லிய குரலைக் கேட்டதும், எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள்.

கூப்பிடு தூரத்திலே, நாலைந்து பப்பாளிப் பழ மரங்கள். அவைகளுக்கு அருகிலே தாறுமாறாகக் குவிந்திருக்கிற கருநீலப் பாறைகளுக்கு எதிரில் நின்று, கையை அசைத்துக் கூப்பிட்டாள், வீராயி.

அவளை அணுகினார்கள்.

பாறைக் குவியலுக்குள்ளே, சின்னஞ்சிறு குகை மாதிரி காணும் இடத்தைக் காட்டி, "இன்றைய இரவைக் கழிப்பதற்கு, இது பாதுகாப்பான இடந்தானே,...?" எனக் கேட்டாள், வீராயி.

"பாதுகாப்பான இடந்தான். ஆனால்..." என்று மென்று விழுங்கினான், நாகன்.


"என்ன ஆனால்...?" என்றான், ஆதி.

(தொடரும்)



பழைய கதை; புதிய பாடல்!

சிங்கமும் புலியும்



குழந்தைக் கவிஞர்

நல்ல வெயிலில் நடுப்பகலில்
நாக்கு வறண்ட புலியொன்று,

தண்ணீர் தேடிக் காடெல்லாம்
தவித்தே அலையும் வேளையிலே

குட்டை ஒன்றைக் கண்டதுவே.
கொஞ்சம் நீர்தான் இருந்ததுவே.

ஆவல் கொண்டு தண்ணீரை
அருந்தப் போகும் சமயத்தில்,

எங்கோ இருந்து சிங்கமுமே
இரைக்க இரைக்க வந்ததுவே.

அதுவும் தண்ணீர் அருந்திடவே
ஆசை மிகவும் கொண்டதுவே.

தண்ணீர் குடிக்கும் போட்டியிலே
சண்டை இரண்டும் போட்டனவே.

ஒன்றை ஒன்று தாக்கினவே;
ஓங்கி ஓங்கி அறைந்தனவே.

சிங்கம் செய்த கர்ஜனையும்
சீறும் புலியின் உறுமல்களும்

அங்கே, அந்தப் பகுதியையே
அதிரச் செய்து விட்டனவே.

அரைமணி நேரச் சண்டையிலே
அயர்ந்தன, சற்றே அமர்ந்தனவே.

எதிர்எதி ராகப் படுத்தனவே;
இரண்டும் முறைத்துப் பார்த்தனவே.

அந்தச் சமயம் வானத்தில்
ஆசை யாக வட்டமிடும்

கழுகுக் கூட்டம் ஒன்றினையே
கண்டன புலியும் சிங்கமுமே.

உடனே சிங்கம் நிலைமைதனை
உணர்ந்தே புலியிடம் உரைத்ததுவே!

“நண்பா, நமக்குள் ஏன்சண்டை?
நன்றாய் நீயே நீர்குடிப்பாய்.

மிச்சம் இருந்தால் நான்குடிப்பேன்
மேலே பார்பார் கழுகுகளை.

சண்டை போடும் இருவரிலே
சாவது ஒருவர் நிச்சயமே.

‘செத்துக்கிடக்கும் உடம்பின்மேல்
சென்றே நாமும் அமர்ந்திடலாம்.

கொத்திக் கொத்தி இரத்தமெலாம்
குடித்துக் குடித்து மகிழ்ந்திடலாம்.’

என்றே எண்ணிக் கழுகுகளும்
இங்கே வட்டம் இடுவதனைக்

காண்பாய் நண்பா, இனியும்நாம்
கடும்போர் புரிவது சரியாமோ?”

இப்படிச் சிங்கம் கூறியதும்
எழுந்தே புலியும் உரைத்ததுவே:

“ஆமாம், ஆமாம், உண்மைதான்.
அறிந்தேன், நன்றாய் உணர்ந்தேன் நான்.

தண்ணீர் குடிக்க நமக்குள்ளே
சண்டை வேண்டாம். இருவருமே,

ஒன்றாய்த் தண்ணீர் குடித்திடுவோம்;
ஒற்றுமை யாகப் பழகிடுவோம்.”

என்றதும், உடனே புலி,சிங்கம்
இரண்டும் ஒன்றாய்க் கூடினவே.

தண்ணீர் தன்னைக் குடித்தனவே.
தாகம் தீர்த்துக் கொண்டனவே!

கண்டதும் இதனை ஏமாந்தே
கழுகுகள் பறந்து மறைந்தனவே!



ரவி, மோகன், முரளி மூவரும் நண்பர்கள். இம்மூவரில் மோகன் மாத்திரம் பேராசை பிடித்தவன்.

ஒருநாள் ரவியும் மோகனும் கடைத் தெருவுக்குச் சென்றார்கள். ரவியிடம் சற்று அதிகப் பணம் இருந்தது. மோகனிடம் பணம் குறைவாக இருந்தது. எனவே, ரவி ஐந்து கேக்குகளை வாங்கினான். மோகன் மூன்று கேக்குகளை வாங்கினான்.

இருவரும் அருகே உள்ள பூங்காவுக்குச் சென்றனர். கேக்குகளைச் சாப்பிட ஆரம்பித்தனர். அப்பொழுது, முரளி தற்செயலாக அங்கு வந்தான். இருவரையும் பார்த்து, ''எனக்கும் சாப்பிட கேக் தாருங்கள். என்னிடம் பணம் இருக்கிறது. அதை உங்களிடம் தருகிறேன். பணத்தை நீங்கள் பிரித்துக் கொள்ளுங்கள்'' என்றான்.

எட்டு கேக்குகளை எப்படி மூவருக்கும் சமமாகப் பிரிப்பது? ஒருவருக்கும் விளங்கவில்லை. இறுதியாக ரவி ஒவ்வொரு கேக்கையும் மூன்று துண்டுகளாக்கினான். எட்டுக் கேக்குகளுக்கு மொத்தம் இருபத்து நான்கு துண்டுகள் கிடைத்தன. இப்பொழுது ஒவ்வொருவரும் எட்டுத் துண்டுகளை எடுத்துக் கொண்டார்கள்.

சாப்பிட்டு முடிந்த பிறகு, முரளி தன்னிடம் இருந்த எண்பது பைசாக்களை ரவியிடம் கொடுத்தான். ஐந்து கேக்குகள் வாங்கிய ரவி, தன்னிடம் ஐம்பது பைசாக்களை வைத்துக்கொண்டான். மூன்று கேக்குகளை வாங்கிய மோகனிடம் முப்பது பைசாக்களைக் கொடுத்தான்.

ஆனால், மோகன் தனக்கு இன்னும் அதிகப் பணம் தரவேண்டும் என்றுவாதாடினான். எண்பது பைசாக்களை எப்படிப் பிரிப்பது என்று ஒருவருக்கும் விளங்கவில்லை.

அப்பொழுது அவர்களின் கணித ஆசிரியர் பெருமாள் அந்த வழியாக வந்து கொண்டிருந்தார். அவரிடம் சென்று தங்கள் பிரச்னையைக் கூறினர்.

கணித ஆசிரியர் எழுபது பைசாக்களை ரவியிடம் கொடுத்தார். மோகனிடம் பத்துப் பைசாவை மாத்திரம் கொடுத்தார். ''இதுதான் ஒவ்வொருவருக்கும் கிடைக்க வேண்டிய சரியான தொகை,'' என்றார்.

பத்து பைசாதான் தன் பங்கு என்று அறிந்த மோகனுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

''சார்! நீங்கள் எப்படிப் பங்கு பிரித்தீர்கள்?'' என்று மோகன் கேட்டான்.

கணித ஆசிரியர் சிரித்துக் கொண்டே, ''ரவியின் ஐந்து கேக்குகளைப் பதினைந்து துண்டுகளாகச் செய்திருக்கிறீர்கள். அதில் எட்டுத் துண்டுகளை ரவி சாப்பிட்டு விட்டான். ஏழு துண்டுகளைச் சாப்பிடவில்லை. உன்னுடைய மூன்று கேக்குகள் ஒன்பது துண்டுகளாக்கப்பட்டன. இதில் நீயே எட்டுத் துண்டுகளைச் சாப்பிட்டுவிட்டாய். ஒரே ஒரு துண்டைத்தான் நீ சாப்பிடவில்லை., எனவே முரளி சாப்பிட்ட எட்டுத்துண்டுகளில் ஏழு ரவிக்குச் சொந்தமானது. ஒன்றே ஒன்றுதான் உனக்குச் சொந்தமானது. எனவே, ரவிக்கு எழுபது பைசா. உனக்குப் பத்துப் பைசா."

பேராசைக்கார மோகன், ரவி முன்னர் கொடுத்த முப்பது பைசாக்களையே வைத்திருந்தால் பரவாயில்லையே என்று நினைத்து, திருதிரு என்று விழிக்க ஆரம்பித்தான்!

இரா. வசந்தராஜன்

ஒரு புரியாத்துக் கதை

மு. டேவிட் ஜான் ரீட்டா



ஒன்பது மணி பஸ் ஹாரன் ஒலி யெழுப்பிக் கொண்டு மேற்குப் பக்க மாய் விரைந்தது. அந்த ஊர் மக்க ளுக்கு, தினம் எட்டுமுறை ஊரைக் கடக்கின்ற அந்த பஸ்தான் 'நடமாடும் கடிகாரம்!'

''மணி ஒன்பதாச்சுடி... ஸ்கூலுக்கு நேரமாச்சு... சீக்கிரம் சாப்பிடு...'' சாரதா அம்மாள் தன் மகள் உமாவைத் துரிதப்படுத்தினுள். உமா வேண்டா வெறுப்பாகச் சாப்பிட அமர்ந்தாள். பள்ளிக்குப் போவதென்ருலே கசப் பாக இருந்தது அவளுக்கு. 'பாடம் படிக்கணும். பக்கத்துப் பிள்ளேயோடு பேசக் கூடாது. இஷ்டத்துக்கு விளே யாட முடியாது.. குறும்பு பண்ணிஞ டீச்சர் அடிப்பாங்க... ச்சே!' என்று மனத்துக்குள் அலுத்துக்கொண்டாள். தட்டுக்கும், வாய்க்கும் கை தாஞகப் போய் வந்தது.

மூன்ரும் வகுப்புப் படிக்கிருள் உமா இந்த வருஷம்தான் இப்படி. சென்ற ஆண்டும், அதற்கு முந்தைய ஆண்டும் கட்டாயமாகப் பள்ளிக்குச் செல்ல வேண்டியதில்லை... 'போக மாட்டேன்' என்று என்ருவது அடம் பிடித்தால், சின்னப் பிள்ளேதானே என்று அம்மா விட்டுவிடுவாள். சமயங் களில் வயிற்று வலி, ஜுரம் என்று சொல்லிவிட்டுப் படுத்துக் கொள் வாள். அம்மாவுக்குத் தெரியும், அவள் சொல்வது பொய்யென்று...

''திருட்டுக் கழுதை! ஸ்கூலுக்கு மட் டம் போடறதுக்காகப் பொய்யா சொல்றே...?'' என்று கடிந்து கொண் டாலும், ''சரிசரி... நாளேக்கு ஸ்கூ லுக்குப் போகலாம்...'' என்று சொல்லி விடுவாள். மூன்ரும் வகுப் பிற்கு உமா வந்ததும், அம்மா சுத்த மாக மாறிவிட்டாள். ஸ்கூலுக்கு மட் டம் என்கிற பேச்சே கிடையாது! கட் டாயம் பள்ளிக்குப் போய் ஆக வேண் டும்.

''முன்னேமாதிரிஇல்லே...நீபெரிய வகுப்புக்கு வந்துட்டே... படிப்பிலே ரொம்ப கவனமாயிருக்கணும்...'' என்று அடிக்கடி சொல்வாள் சாரதாம் மாள். உமாவிற்கு அந்த அறிவுரை கசப்பாய் அவள் காதுகளில் மோதும்.

''இன்னுமா சாப்பிடறே. சீக்கிரம் கிளம்புடி... நேரமாச்சு!'' என்ற அம்மாவின் குரல் அவள் சிந்தனேயைக் கலேத்தது. உமா எழுந்தாள். அதற் குள் அம்மா தயாராக அவளது புத் தகப் பையை எடுத்து வைத்திருந் தாள். பையை வாங்கிக் கொண்டு 'டாடா' காண்பித்துவிட்டு உமா பள் ளிக்குப் புறப்பட்டாள்.

வழியில் இவளோடு சேர்ந்து

கொண்டாள் செல்வராணி. அவளும் மூன்றும் வகுப்புத்தான். சில நாட்களாகப் பள்ளிக்கு வரவில்லை. இன்று தான் உமா அவளைப் பார்க்கிறாள்.

''செல்வராணி, ஏன் நீ ரெண்டு மூணு நாளா ஸ்கூலுக்கு வரலை...? ஊருக்குப் போயிருந்தியா...?'' என்று கேட்டாள் உமா.

செல்வராணி சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, ''யார்கிட்டேயும் சொல்லாதே உமா... சொல்ல மாட்டியே.....'' என்று கேட்டாள்.

''ஊஹூம்... சொல்ல மாட்டேன்.,...''

அப்புறம்தான் செல்வராணி அந்த ரகசியத்தைச் சொன்னாள். ''நானும் தினந்தோறும் வர்றேன். ஆனால் பள்ளிக் கூடத்துக்கு வரமாட்டேன்... பிள்ளையார் கோயிலுக்குப் பக்கத்துலே ஒரு புளியமரம் இருக்குல்ல. அங்க போயி மாடு மேய்க்கிற புள்ளைங்க விளையாடுறதை வேடிக்கை பார்ப்பேன்... புளியம்பழம் பொறுக்கித் தின்பேன்... மணியடிக்கிற சத்தம் கேட்டதும் பள்ளிக்கூடம் முடிஞ்சு போறவங்களோட சேர்ந்து வீட்டுக்குப் போயிடுவேன்...''

செல்வராணி சொன்னதைக் கேட்டதும் உமாவிற்கு அதிர்ச்சியாக இருந்தது. மௌனமாக நடந்தாள். சிறிதுநேரத்திற்குப் பிறகு கேட்டாள்.

''ஏண்டி, இதுவரை நீ செய்யறது வீட்டுக்குத் தெரியாதா...?''

''எப்படித்தெரியும்? அதான் மணியடிச்சதும் வீட்டுக்குப் போயிடுவேனே...?''

உமாவின் மனத்துக்குள் அந்த ஆசை எழுந்தது.

'நாமும் செல்வராணியுடன் போனால் என்ன?'

பின்விளைவுகளைப் பற்றி அவள் யோசிக்கவில்லை.

''செல்வராணி... நானும் உன்கூட வரவா...?''

செல்வராணி யோசித்தாள். 'உமா தன் ரகசியத்தைத் தெரிந்து கொண்டு விட்டாள். இப்போது அவளைத் தன்னோடு வரவேண்டாம் என்று சொன்னால் தான் பள்ளிக்கு வராமலிருப்பதை அவள் யாரிடமாவது சொல்லி விடக் கூடும். அவளையும் தன்னோடு சேர்த்துக் கொண்டால் துணைக்குத் துணையுமாச்சு! தன் செயலும் வெளியில் தெரியாது!'

''சரி, சரி...நீயும்வரலாம்...'' என்று பெரிய மனிதத் தோரணையில் சொன்னவள், ''ஜாக்கிரதை உமா! விஷயம் வெளியில் தெரிஞ்சதுன்னா ரெண்டு பேருக்குமே ஆபத்து!'' என்று எச்சரித்தாள்...

''யார்கிட்டேயும் சொல்ல மாட்டேண்டி...'' என்று தலையாட்டினாள்



உமா.

• • •

''வாங்க, வாங்க...'' என்று வரவேற்ருள் சாரதாம்மாள். வந்தவர் உமாவின் ஆசிரியர்...

''அவர் வீட்டில் இல்லையா...?''

''உமாவின் அப்பாவா? டவுனுக்குப் போயிருக்காங்க... என்ன விஷயம்...?''

''உமாவைப் பற்றிய விஷயம்...'' என்று பீடிகையோடு ஆரம்பித்தார் ஆசிரியர்.

''என்ன சார்... என்ன ஆச்சு...?'' என்று பதறினுள் தாய்.

''ஒண்ணுமில்லே... நம்ம உமா ஒரு வாரமா ஸ்கூலுக்கே வரலே... உடம்பு சௌகரியமில்லாமே இருக்காளோன்னு விசாரிச்சேன். அப்படி எதுவும் இல்லேன்னு மத்தப் பிள்ளைங்க சொன்னுங்க... ஏன் உமா ஸ்கூலுக்கு வர்றதில்லே...? இனியாவது தொடர்ந்து அனுப்பி வைங்கம்மா..''

ஆசிரியர் சென்ற பின்னரும், சாரதாம்மாள் கல்லாய்ச் சமைந்திருந்தாள்...

மெல்ல, மெல்ல, அந்தச் செய்தி தந்த அதிர்ச்சியிலிருந்து மீண்டாள். மனத்துக்குள் பல கேள்விகள் எழுந்தன. உமா பள்ளிக்கே ஒரு வாரமாகப் போகவில்லையாமே? வேறெங்குதான் போகிருள்? சரியாகக் காலையில் ஒன்பது மணிக்குப் போகிருள்... மதியம் சாப்பிட கரெக்டாக வருகிருள்... மாலையில் பள்ளி விட்டுப் பிள்ளைகள் வரும்போது அவளும் வந்து விடுகிருளோ? இடைப்பட்ட நேரங்களில் எங்கே போகிருள்? என்ன செய்கிருள்?

ஒரு தாயின் நியாயமான கவலைகள் அவளுக்கும் வந்தன. 'உமாவை எதுவும் கேட்க வேண்டாம்: அவள் அப்பாவிடமும் சொல்ல வேண்டாம். முதலில், அவள் எங்கு போகிருளென்று நானே கண்டுபிடிக்கிறேன்... பிறகு முடிவு செய்து கொள்ளலாம். என்ன செய்வதென்று,' என்று தீர்மானித்தாள்.

• • •

மறுநாள் காலை வழக்கம் போல் உமா, ''அம்மா... போயிட்டு வர்றேன்... டாடா...'' என்று சொல்லிக் கொண்டு பள்ளிக்குச் சென்ற போது, அவளுக்குப் பற்றிக் கொண்டு வந்தது கோபம். ''என்னையே ஏமாற்றுவதாய் நினைச்சிருக்கா இந்தப் பெண்... இருக்கட்டும், கவனிச்சுக்கறேன்,'' என்று கறுவினுள்.

நீண்ட இடைவெளி விட்டு உமாவுக்குத் தெரியாமல் அவளைப் பின் தொடர்ந்தாள் சாரதா.

அம்மா தன்னைப் பின் தொடர்வதை அறியாத உமா உற்சாகமாய்ச் சென்ருள். வழியில் தனக்காகக் காத்திருந்த செல்வராணியுடன் சேர்ந்து கொண்டாள். இருவரும் நேராகப் புளிய மரத்தடிக்குச் சென்றனர். உடனடியாகத்தங்கள் விளையாட்டுக்களைத் தொடங்கினர். நொண்டிக் கோடு விளையாடிக்கொண்டேபாட்டுப்பாடினர்.

''கத்திரிக்கா விக்கப் போறேன்
விஜயாம்பா
அம்மாகிட்ட சொல்லாதடி
விஜயாம்பா
உன்னையும் என்னையும் பெத்தாளே
கண்ணுக்குக் கண்ணு வளர்த்
தாளே...''

மரத்தின் பின்னல் மறைந்து நின்று சிறிது நேரம் இக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த சாரதாம்மாள் திடீரென அவர்கள் எதிரே வந்தாள்.

''நிறுத்துங்கடி பாட்டை...''

இருவரும் திடுக்கிட்டுத் திரும்ப, அங்கே கோபாவேசத்துடன் சாரதாம்மாள் நின்ருள். அம்மாவைக் கண்டதும் உமா திருதிருவென விழித்தாள்.

''எங்கேடி வந்தே உமா?''

''......''

''சரி நட வீட்டுக்கு.''

மகளை இழுத்துக் கொண்டு வீட்டுக்கு நடந்தாள்...

அம்மா அங்கேயே தன்னை அடிப்பாள் அல்லது பள்ளிக்குக் கூட்டிச் சென்று ஆசிரியரிடம் சொல்லி, தண்டனை வாங்கித் தருவாள் என்று நினைத்த உமாவிற்கு, அவள் தன்னை வீட்டுக்கு அழைத்துப் போவது ஏன் என்று குழப்பமாக இருந்தது. ஒரு வேளை, வீட்டில் சூட்டுக் கம்பியால் சூடு எதுவும் போட்டுவிடுவாளோ?

ஆனால், வீட்டுக்கு வந்ததும் அம்மா தண்டனை ஏதும்தரவில்லை...மாலையில் அப்பாவிடமும் சொல்லவில்லை. உமா நெருப்பின் மேல் இருப்பது போலத் தவித்தாள். அம்மா ஏதேனும் தண்டனை கொடுத்தால் தேவலாம்... அப்பொழுதாவது இதயப் படபடப்பும், திகிலும் குறையும் போலிருந்தது. ஆனால், அம்மா இதைப் பற்றிப் பேசவேயில்லை — இரவு தூங்கப் போகும்வரை.

பொழுது விடிந்தது.

அம்மா உமாவை எழுப்பினாள்.


"சாணி கரைச்சுப் போட்டு வாசலைக் கூட்டுடி," என்று கட்டளை பிறந்தது.

உமா மௌனமாக எழுந்து, முகம் கழுவிவிட்டு, பிளாஸ்டிக் வாளியில் நீரெடுத்துச் சாணம் கரைத்து, வாசலில் தெளித்தாள்; கூட்டினாள். பிறகு அம்மா வந்து கோலம் போட்டாள். உமா அதைப் பார்த்துக் கொண்டே நின்றாள்.

"ஏண்டி நிக்கறே... போ! போயி பாத்திரமெல்லாம் கழுவிவை...கொல்லைப்பக்கம் அள்ளிப் போட்டிருக்கேன்," என்றுகடுரமாய்ச் சொன்னாள் சாரதாம்மாள்.

கொல்லைப்புறம் முந்தின நாள் பயன்படுத்திய பாத்திரங்கள் மலை போல் குவிந்து கிடந்தன.. 'இவ்வளவையும் என்று துலக்குவது...?' என்ற மலைப்பேற்பட்டாலும், வேறு வழி? கடனே என்று பாத்திரங்களைத் துலக்க ஆரம்பித்தாள். துலக்கி முடிப்பதற்குள் கை இற்றுப் போனது போலிருந்தது.

அப்புறம் அம்மா காப்பி தந்தாள்.



"குடிச்சுட்டு, நாலு குடம் தண்ணீர் அடிச்சுட்டு வா..."

வீட்டிலேயே கை பம்பு இருந்தது. ஆனால், நாலு குடம் தன்னால் அடிக்க முடியுமா...?

"அம்மா..."

"என்னடி...?"

"கையெல்லாம் வலிக்குதும்மா..." பலஹீனமாக வெளிவந்தது அவள் குரல்...

"அப்படித்தாண்டி இருக்கும்... வேலைன்னா அப்படித்தான். படிக்கப் பிடிக்காதவளுக்கு, பள்ளிக்கூடம்னா கசப்பா இருக்கிறவளுக்கு வேலையும் கசக்குதோ? இதோ பாருடி... படிப்பு இல்லேன்னா நீ கடைசி வரைக்கும் இந்த மாதிரி வேலைதான் செய்யணும்... இங்கே மட்டுமில்லே.. பெரிய மனுஷியாகி புருஷன் வீட்டுக்குப் போனாலும் நாலு வீட்டிலே பத்துப் பாத்திரம் தேய்ச்சுத்தான் பிழைக்கணும். நீ நாலெழுத்துப் படிச்சா உனக்கும் நல்லது. நீ போகிற இடத்துக்கும் நல்லது. தேவையானா, நீ வேலைக்குக் கூடப் போகலாம். கைநிறையச் சம்பாதிக்கலாம். நீ கஷ்டப்படாமே, வசதியா இருக்கணும்னுதானே ஸ்கூலுக்கு அனுப்பறோம்... நீ என்னடான்னா..." அம்மாவின் குரல் திடீரென்று கரகரப்பாகி... கண்களிலிருந்து நீர் பெருகியது. அழுகிறாள்.


"அம்மா... அழாதம்மா..." உமாவிற்கும் அழுகை வந்தது...

"அழாதேம்மா... அழாதே..." என்று தேம்பினாள்...

"உமா... பொம்பளைன்னா அடுப்பூதறதுக்கும், வீட்டு வேலைக்கும் மட்டுமில்லே... ஆண்களுக்குச் சமமா பெண்களும் படிச்சு, உத்தியோகம் பார்க்கிற காலம்மா இது... நீ ஸ்கூலுக்குப் போகாட்டி, நல்லா படிக்காட்டி... உன் எதிர்காலம்தான் பாழாகும். புரிஞ்சு நடந்துக்கம்மா..." என்று கண்ணீருடன் சொன்னாள் சாரதாம்மாள்.

உமாவிற்கு அம்மாவின் கண்ணீருக்கு அர்த்தம் புரிந்தது. அவள் படிக்க வேண்டிய அவசியம் புரிந்தது.

"என்னை மன்னிச்சுடும்மா. இனிமே நான் தவறாம ஸ்கூலுக்குப் போகிறேன்," என்றாள்.



அந்தப் பிச்சைக்காரனும், அந்தக் குழந்தையும் இவ்வளவு நேரம் என்ன பேசியிருப்பார்களோ என்னவோ! இருவருமே சளைத்ததாகத் தெரியவில்லை. நேரமோ ஆகிக்கொண்டிருந்தது. குழந்தைக்குப் பதில் சொல்லிச் சொல்லி அலுத்து விட்டானோ அல்லது பசியெடுத்ததோ தெரியாது. பிச்சைக்காரனுக்கு, கழற்றிக்கொள்ளலாம் என்று தோன்றியது. குழந்தை விடுவதாக இல்லை.

''உனக்குத்தான் யாருமே இல்லேன்னு சொன்னியே, ஏன் இப்படிப் பறக்கறே? எங்கே போகணும் உனக்கு?''

''இல்லே பாப்பா! நேரமாயிடுச்சு இல்லையா? நீ வீட்டுக்குப் போக வேணும்? வீட்டிலே தேட மாட்டாங்களா?''

''நான் இன்னிக்கு வீட்டுக்குப் போகல்லே? போக மாட்டேன்.''

''என்ன பாப்பா இப்படிச் சொல்றே?''

''ஏன்னா என் வீடு இன்னும் ரெண்டு மூணு ஊரு தாண்டி இருக்கு. எப்படிப் போறது? பஸ்ஸிலே போகக் காசு வேணும்?''

''அட பாவமே! எப்படி பாப்பா இங்கே வந்தே?''

''நானும் அப்பாவும் பஸ்ஸிலே வந்துகிட்டிருந்தோம். அப்பா இறங்கிறார்னு நினைச்சு, நான் யார் கையையோ பிடிச்சுக்கிட்டுக் கீழே இறங்கினேன். கீழே இறங்கின பிறகுதான் தெரிஞ்சுது, அப்பா இறங்கலேங்கிறது. அதுக்குள்ளே பஸ் ரொம்ப தூரம் போயிடுத்து! என்ன செய்யறது? அதுதான் நிழலோரமா வந்து நின்னுட்டேன். நீயும் வந்தே!''

பெண் குழந்தையாதலால் பேச்செல்லாம் தெளிவாக இருந்தது. கழுத்திலே தங்கச் சங்கிலி, அது திரும்பும் போதெல்லாம் பளிச் பளிச் சென்று டாலடித்தது. கையிலே தங்க வளையல் தகதகத்தது!

பிச்சைக்காரனுக்குப் பசி வயிற்றைக் கிள்ளியது. வேறு ஏதாவது ரெண்டு இடத்துக்குப் போனாலாவது பிச்சை

கிடைக்கும். ஆனால், இந்தக் குழந்தையை எப்படித் தனியாய் விட்டுட்டுப் போறது? பக்கத்திலே போலீஸ் ஸ்டேஷனும் இல்லே, பிச்சைக்காரனுக்குப் போக மனமில்லே.

"நானும் அப்போ பிடிச்சுப் பார்த்துக்கிட்டிருக்கேன். என்னைப் 'போ, போ'ன்னு சொல்ற மாதிரி பேசாம இருக்கிறியே! எனக்குப் பொழுதே போக மாட்டேங்குது. ஏதாவது பேசேன்."

"நான் என்ன பாப்பா சொல்றது உனக்கு! நீயாவது பள்ளிக்கூடம் போறே. நான் பள்ளிக்கூடப் பக்கம் கூடப் போனது கிடையாது. நீ சொல்லு; நான் கேட்கிறேன்."

"அட! பள்ளிக்கூடம் போனது கிடையாதா! உங்கப்பா அடிக்க மாட்டாங்க."

"எனக்கு அப்பாவே கிடையாது பாப்பா!"

"சின்னப் பையனா இருக்கும் போதே செத்துப் போயிட்டாங்களா?"

"தெரியாது பாப்பா."

"அது சரி, போகட்டும்! எனக்கொரு கதை சொல்லு!"

"ஒரே ஒரு ஊர்லே ஒரு காக்கா இருந்ததாம்."

"அடடே, காக்காயும் வடையும் கதையா! இந்தக் கதையை எங்க தாத்தா 1001 தடவை சொல்லியிருக்கிறார். பாட்டி 2000 தடவை சொல்லியிருக்கா. அம்மாவும் அப்பாவும் எவ்வளவு தடவை சொல்லியிருப்பாங்கன்னு நினைவில்லே. நீயும் அதையே சொல்லி போர் அடிக்கிறயே! வேற சினிமாக் கதை சொல்லு?"

பிச்சைக்காரன் சிரித்துவிட்டான்.

"என்ன ,சினிமாக்கதை சொல்றது? நான் சினிமாவே பார்த்ததில்லையே!

"ஐயோ! சினிமா பார்க்காமே எப்படி இருக்க முடியுது!"

"ஏன் பாப்பா! உன்னைக் காணோம்னு ரொம்பக் கவலைப்படுவாங்களே வீட்லே."

"படட்டும்! நல்லா படட்டும்! அப்பத்தான் புத்தி வரும். அது சரி உனக்குப் பாப்பா இருக்கா?"

"இருந்தது பாப்பா! ஆனா சின்ன வயசிலேயே செத்துப் போச்சு."

"ச்சூ! பாவம்!" என்ற குழந்தை சிறிது நேரம் பேசாமல் இருந்தது.

"பாப்பா வா! போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகலாம்! கொண்டு போய் விட்டுடறேன்!"

"ஹூம், ஹூம்! எனக்குப் பயம்மா இருக்கும். நான் வரமாட்டேன். நீ வேணும்னா போ! நான் இங்கேயே இருக்கேன்!"

பிச்சைக்காரனுக்குப் பசி கண்ணை இருட்டிக் கொண்டு வந்தது. குழந்தையை இப்படியே விட்டுவிட்டுப் போனால், வேறு எவனாவது நகையைத் திருடிக் கொள்வான். கடைசியில் பழி நம்மேல் திரும்பும். வேண்டாம்! இன்னும் சிறிது நேரத்தில் குழந்தையைத் தேடிக் கொண்டு யாராவது வருவார்கள். ஒப்படைத்து விட்டுப் புறப்படலாம்.

"ஏன் பாப்பா! ரொம்ப நேரம் ஆச்சே! இருட்டப் போகுது போலிருக்கே!"

"ஏன் உனக்குப் பயம்மா இருக்கா! நான் கூட இருக்கேன், பயப்படாதே!"

பிச்சைக்காரன் சிரித்துக் கொண்டான்.

பாழும் பசிதான் கேட்க மாட்டேன் என்கிறது. காலையிலே ஒரு டீ சாப்பிட்டது. இந்தக் குழந்தையை விட்டு விட்டு நான் மட்டும் எப்படிப் போவது! பிச்சைக்காரனுக்கு மயக்கமாக இருந்தது.

"என்ன தூங்கறியா? ஐய்யே! சாயந்திரமே தூக்கமா! சரி! எனக்கும்தான் பசிக்குது. சாப்பிடறதுக்குத்தான் ஒண்ணுமில்லே. என்ன செய்யறது!"

பிச்சைக்காரனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. குழந்தைக்கும் பசியா! சின்னக் குழந்தை எவ்வளவு நேரம் பசியைத் தாங்கிக் கொண்டிருக்கிறது. நம்மால் முடியவில்லை. பிச்சைக்காரன் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

"என்ன பாப்பா! ரொம்பப் பசிக்குதா!"

"இல்லே! இப்பத்தான் ஆரம்பிச்சிருக்கு! ஹூம்! யாரும் தேடி வரல்லியே! இந்த அப்பாவுக்கு ஒண்ணுமே



தெரியாது. எங்காவது தேடி அலேஞ் சிட்டிருப்பார்.''

''பாப்பா! நீயே மெதுவா இப்படியே நடந்து போனியானு போலீஸ் ஸ்டேஷன் வரும், அங்கே போயேன்! யாராவது சொல்லியிருப்பாங்க. நான் இங்கே இருந்தபடி பார்த்துக்கிட்டே இருக்கிறேன். நீ உள்ளே போனதும் அப்புறம் நான் போறேன்!''

''ஹூம்! நான் மாட்டேன். எனக்குப்போலீசைக்கண்டால்பயம்!''

''என்னைக் கண்டா பயம் இல்லே?''

''இல்லே! உன்னைப் பார்த்தா பாவமா இருக்கு! ஆமா, அதிருக்கட்டும், என்னை ஏன் அடிக்கடி விரட்டறே? என்னைக் கண்டா பயமா இருக்கா?''

''சே! சே! அதில்லே பாப்பா! நேரமாச்சேன்னு சொன்னேன்!''

மனத்துக்குள் பிச்சைக்காரன் சொல்லிக் கொண்டான்:

'இதென்னடா இது! பாப்பாவைத் தனியா விட்டுட்டுப் போனா வேறு யாராவது போக்கிரிப் பயல்கள் நகைக்காகக் கொன்று போட்டாலும் போட்டிடுவானுங்க. நாம துணைக்கு இருக்கிறதா? இருந்தாலும் எவ்வளவு நேரம் இருக்கிறது? யாரும் தேடி வரல்லியே! போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனா நமக்கு இன்னும் தொல்லை தான். தொல்லையைப் பார்த்தால் முடியுமா?''

''சரி பாப்பா! இன்னும் கொஞ்ச நேரம் பார்ப்போம்! யாரும் உன்னைத் தேடி வரல்லேன்னா நானே போலீஸ் ஸ்டேஷனுக்கு கூட்டிப் போறேன். பயப்படாதே!''

''நானே நினைச்சேன்! நேரமாயிட்டுது. இன்னும்அப்பாவைக்காணோம்!''

பாப்பா பேசாமல் உட்கார்ந்துவிட்டது, கன்னத்தில் கையை வைத்துக் கொண்டு. இதுவரை தைரியமாகப் பேசிக் கொண்டிருந்த குழந்தைக்கு இப்பொழுது கவலையாக இருந்தது போலும்!

அடிக்கடி பிச்சைக்காரனைத் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தது. ஒன்றும் பேசவில்லை. பிச்சைக்காரனுக்குப் பசி காதை அடைத்தது. 'இன்னும்கொஞ்சநேரம்தான். யாரும்வரல்லேன்னா போலீஸ் ஸ்டேஷன்லே குழந்

தையை ஒப்படைச்சிடலாம். அவங்க நம்மை உடனே விட மாட்டாங்க. பரவாயில்லே! இன்னிக்கு ஒருநாள் தானே! பசியைப் பொறுத்துக்கலாம்!''

அப்பொழுது யாரோ வேகமாக வந்தார்கள்.


''ஆ! என் கண்ணே! கற்பகம், நீ இங்கேயா இருக்கிறே! உன்னைத் தேடி எங்கெல்லாம் அலைந்தேன்!''

பிச்சைக்காரனுக்கு உயிர் வந்தது. யாரோ நன்றாக உடை அணிந்த நடுத்தர வயதுள்ள மனிதர் குழந்தையைத் தூக்கிக் கொண்டார். பாப்பா அவர் கழுத்தைக்கட்டிக்கொண்டது. அப்பாவாக இருக்கும். பிச்சைக்காரன் நினைத்துக்கொண்டான். ''அப்பாடா! ஒரு பொறுப்பு விட்டது!''

உடனே அவசர அவசரமாக பாப்பாவினுடைய கையையும் கழுத்தையும் தடவிப் பார்த்தார். ''நல்லவேளை, நான் வந்துவிட்டேன். இல்லாது போனால், குழந்தையினுடைய தங்கச் சங்கிலியையும், வளையலையும் இந்தத் திருட்டுப்பயல் கழற்றியிருப்பான். இவன் இருட்டட்டும்னு காத்திருக்கிறான். என்னைப் பார்த்ததும் பேயறைஞ்ச மாதிரி நிற்கிறான்.''

பிச்சைக்காரன் பசி மயக்கத்தில் இருந்தான். கண்கள் இருட்டிக் கொண்டு வந்தன. பாப்பா வந்தவர் தோள்மேல் சாய்ந்துகொண்டு பின்புறமாக நின்ற பிச்சைக்காரனுக்கு ''டாட்டா'' காட்டியது. அந்தப் பாதையின் திருப்பம் வரை ''டாட்டா'' காட்டிக் கொண்டே சென்றது. பிச்சைக்காரக் கிழவன் பசி மயக்கத்தில் கீழே சரிந்தான்!

ஓவியராகலாம்



Printed and Published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras—600032. (Phone: 431543)
Editor: K. Rajendran.

வியர்க்குருவினின்று நிவாரணம் பெற டால்கம் பவுடர் போதாது, நைஸில் வேண்டும்.





GLL/8806

நைஸில் உபயோகியுங்கள் வியர்க்குருவினின்று விரைவில் நிவாரணம் பெறுங்கள்.



நைஸில், மருந்துக்கலவையுள்ள பவுடர் ஆகும். வியர்க்குருவின் எந்தவிதத் தொல்லையிலிருந்தும் உடனடியாக நிவாரணம் அளிப்பதற்கென்றே விசேஷமுறையில் தயாரிக்கப்பட்டதாகும். டால்கம் பவுடர்களைப் போலன்றி, பிரச்சினை மோசமாவதனின்றும், பரவுவதனின்றும் எதிர்த்துக் காக்கிறது இது.

1. அளவுக்கு மீறிய வியர்வையைத் தடுக்கிறது.
2. வியர்வையை உறிஞ்சுகிறது. 3. துர்நாற்றம் ஏற்படுத்தும் கிருமிகளை அழிக்கிறது.
4. சருமத்திற்கு இதமளிக்கிறது.

உடல் நலத்தின் உறைவிடம்

க்ளாக்ஸோ

EGISTERED No. TN MS (S) 281
egistered as a Newspaper in Srilanka



கார்ல் மார்க்ஸ்

தோற்றம்:5.5.1818 மறைவு:14.3.1883